நீதிவெண்பாவின் நெறிமுறைகள்



ஸி. சின்னையா

முருகு சுப்பிரமணியன்

நீதிவெண்பாவின்
நெறிமுறைகள்

முருகு. சுப்பிரமணியன்

சிவகாமி பதிப்பகம்
கோனூபட்டு,
திருச்சி மாவட்டம்

முதற் பதிப்பு: 1968

விலை ரூ. 2-50

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை-1.

மலேசியாவில் விற்பனை உரிமை :

முருகு வெளியீடுகள்

CC-3, ஈப்போ ரோட் கார்டன்.

4-வது மைல் ஜாலான் ஈப்போ,

கோலாலம்பூர்.

MARUTHY PRESS, 83, Peters Road, Madras-14.

ஆசிரியரின் முன்னுரை

சிங்கப்பூர் வானொலியின் தமிழ்ப் பள்ளிக் கூட ஒலிபரப்பு, நீதி நூல்களை அடிப்படை யாகக் கொண்டு பல இலக்கியக் கட்டுரைகளை எழுதுவதற்கு எனக்கு நல்ல வாய்ப்பை நல்கிற்று. தமிழ்ப் பள்ளிக்கூடப் பகுதியின் தலைவராகப் பணியாற்றிய எனது அருமை நண்பர் திரு. மெ. திரு. அரசு அவர்கள் இடை விடாமல் என்னைத் தூண்டிக் கொண்டிருந்த தால்தான் மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதி வெண்பா, நீதிநெறி விளக்கம், நாலடியார், முதலிய பல நீதி நூல்களுக்கு விளக்கங்கள் எழுதத் தலைப்பட்டேன். பாட்டுக்குப் பொருள் கூறுவதோடு நிற்காமல் சற்று விரிந்த பரப்பில் மாணவர்களுக்குப் பொது அறிவு கிட்டுகிற முறையில் கட்டுரைகளை எழுதியிருக்கின் றேன்.

தமிழ்ப் பள்ளிக்கூட மாணவர்களுக்கு மட்டுமன்றி, தமிழ் மொழியைப் பயிலுகிற அனைவருக்குமே இந்நூல் பயன்பட வேண்டு மென்பதே என் விருப்பமாகும்.

நீதி வெண்பாவில் பொறுக்கியெடுத்த இருபது பாட்டுக்களுக்கு இந் நூலில் விளக்கம்

தரப்பட்டிருக்கிறது. நீதி வெண்பாவில் எஞ்சியிருக்கும் பாட்டுக்களையும் கற்கின்ற ஆர்வத்தை இந்நூல் ஊட்டுமானல் நான் பெரிதும் மகிழ்வேன்.

பேச்சுக்களை ஒலிபரப்பிய சிங்கப்பூர் வானெலி நிலையத்தாருக்கும், அவற்றைக் கட்டுரைகளாக, அழகுற அச்சிடுவதற்கு உறு துணையாக இருந்த பாரி நிலையத்தாருக்கும், சிறப்புரை வழங்கிய அறிஞர் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்கட்கும் என் பணிவு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோலாலம்பூர்,
24-1-68. } **முருகு. சுப்பிரமணியன்.**

தமிழ் வாழ்க!

நீதிவெண்பாவின் நெறிமுறைகள்

சிறப்புரை

நீதி இலக்கியத்துக்கும் பக்தி இலக்கியத்துக்கும் உலகிலேயே முதலிடம் பெற்ற மொழி தமிழ். உலகப் பொதுமறை முதலாக நீதிவெண்பா ஈறாக இம் மொழியை அணி செய்யும் நீதி நூல்கள் மிகப்பல. அவற்றில் இறுதியாக வந்த நீதிவெண்பாவுக்கு அந்த நீண்ட மரபின் பண்புகள் வழிவழியாக வந்து அமைந்துள்ளது. தவிர, தனக்கென்று அதற்குச் சில தனிச் சிறப்புக்கள் உண்டு. அது தமிழ் மக்கள் இன்றைய பேச்சு நடையிலேயே அமைந்து, இனிமையும் எளிமையும் உடையதாக இயல்கின்றது. திரிகடுகம், ஏலாதி, நான்மணிக்கடிகை ஆகிய சங்ககால நீதிநூல்கள்போல, கவிதைக் கண்ணேக்குடன் பல நீதிச் செய்திகளை, அருவாய்மைகளை இணைத்து ஒவ்வொரு பாட்டிலும் பல்கூட்டு இன்பம் தருகிறது. பல பாடல்கள் சமுதாய வாழ்க்கை அனுபவம் ததும்பி, கட்டுரைபோல நடக்கின்றன. பல இனிய கதையின் சுவை தருகின்றன. பல நாடகச் சுவை உடையன.

இத்தகைய சிறந்த இலக்கியத்தின் நறுஞ்சுவை மணங்களை நுகர்ந்து, தான் நுகர்ந்தது உலகின்புறத் தந்துள்ளார் திரு. முருகு. சுப்பிரமணியம். 'நீதி வெண்பாவின் நெறிமுறைகள்' என்ற இந்தச் சிற்றேடு, பொன்னின் குடத்துக்குப் பொட்டு வைத்தாற்போல, நீதிவெண்பாவின் இனிய பொறுக்குமுதங்களைத் திரட்டி, அவற்றின் அழகுக்கு அழகும் அவற்றின் சுவைக்கு மேலும் சுவையும் மணமும் பொலிவும் ஊட்டுவதாக அமைந்துள்ளது. 'ஆனைக்கு ஆயிரமுழம்', 'கயவருக்கு உடல் முழுதும் நஞ்சு', 'செந்தாமரை

முளைப்பது சேற்றில்', ஆகிய தலைப்புக்களே சிந்தனை ஊட்டுவன. 'பெரியாரைத் துணைக்கொள்' என்ற தலைப்பில் 'சிங்கத்தின் குகை புகுந்தால் தந்தமும் முத்தும் கிடைக்கும். நரியின் குகை புகுந்தால் கழுதைத் தோலும் மயிரும் எலும்பும்தான் கிடைக்கும்' என மூலநூல் வழி நின்று ஆசிரியர் தம் கருத்தைக் கவர்ச்சிப்பட விளக்கும் திறம் வாசகருக்குத் தெவிட்டாத இன்பமும் தேடா அறிவுத் திரவியமும் அளிப்பனவாகும். வெறும் நீதிமட்டுமன்று. 'எத்தனை வேளை உண்பது' என்ற கட்டுரையில் மலேசிய இளைஞர்க்கும் தமிழ் இளைஞர்க்கும் காலத்திற்கேற்ற உணவு நீதி புகட்டப்படுகிறது. தக்க தக்க இடங்களில் திருக்குறட் சொல்லும் கருத்தும் பொன்னில் பதித்துக் காட்டப்பட்ட நவமணிகள்போல ஒளி தருகின்றன. 'யானை காட்டும் பெருந்தன்மை' என்ற கட்டுரை பழம்பாடல் கருத்து மூலமே நீதிமட்டுமன்றி விலங்கு பற்றிய புத்தறிவும் ஊட்டுகிறது.

தென்னகத் தமிழகம் ஈன்று, மலேசியத் தமிழகம் வளர்த்து வரும் சீரிய எழுத்தாளரான முருகு. சுப்பிரமணியத்தின் புகழ் இந்த இரு நாடுகளையும் இணைத்து, உலகளாவப் பண்புநலன் பரப்பும் என்பது ஒருதலை. தமிழிலக்கியத்தில் ஆங்கில முதலிய பிற மொழி ஏடுகளிலும் அவருக்குள்ள ஆர்வம், தமிழகத்திலும் மலேசியாவிலும் பத்திரிகைகளுடனும் எழுத்தாளர்களுடனும் அவருக்குள்ள தொடர்பு, இளைஞர் சங்கங்களில் அவர் கொண்டுள்ள தொண்டுப் பயிற்சி ஆகியவை அவர் எழுத்துக்களின் பின்னணிப் பண்பாய் இயங்கி. அதற்கு அருங்கலவை மணம் வழங்குகின்றன.

தமிழுலகம் அவர் கையமுதம் உண்டு, உலகில் தமிழமுதம் பரப்புமாக!

'அன்னை இல்லம்' **கா. அப்பாத்துரை**

சென்னை-18. *23-5-1968.*

உள்ளுறை

நீதிவெண்பாவின்
நெறிமுறைகள்

1

யானைக்கு 'அபாய எல்லை' ஆயிரம் முழம்

வீட்டில் வளர்க்கும் விலங்குகள்

ஆடு, மாடு, குதிரை, யானை இவற்றைப் பற்றித் தெரிந்து கொள்வோம். ஆடும் மாடும் நாம் வீட்டில் வளர்க்கும் விலங்குகள். ஆகவே, அவை பற்றித் தம்பி தங்கைகளுக்கு நிறையத் தெரியும். சிறு பிள்ளைகளைப் பயமுறுத்துவதற்கு 'மாடு முட்டும்' என்று சொல்வார்கள். ஆட்டுக்கும் கொம்புண்டு; மாட்டுக்கும் கொம்புண்டு. கொம்புள்ளவை என்ற வகையில் ஆடும் மாடும் ஒரே இனம். பால் தருகின்ற ஆடு, பசு இரண்டும் சாதுவான மிருகங்கள். 'பார்த்தால் பசு, பாய்ந்தால் புலி' என்று சொல்லும் பழமொழி பசுவின் சாந்த குணத்துக்குச் சான்று. காளைமாடுகூட அவ்வளவு மூர்க்கத்தனமான மிருகம் அன்று. பழகியவர்களை இவை ஏதும் செய்வதில்லை. இருப்பினும் சிறுபிள்ளைகள் ஆடு, மாடுகளிடம் அத்துணை துணிந்து செல்வதில்லை. நீங்கள் எப்படியோ, எனக்குத் தெரியாது. நான் சற்று பயந்தவன். சிறு பிள்ளையில்—ஏன் இப்பொழுதுகூட மாடுகளிடம் சற்று எட்டித்தான் நிற்பேன். ஆனால், துணிச்சலுள்ள தம்பி

கள் மாடுகளின் பக்கத்தில் சென்று தட்டிக்கொடுப்பார்கள்; அவற்றின் வாலை முறுக்குவார்கள். மாட்டு வாலில் ஓலையைக் கட்டி வெருட்டுவது சிறுபிள்ளைக்குப் பிடித்தமான விளையாட்டு. சில மாடுகள் எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ளும். சில காலால் உதைக்கும்; மற்றும் சில கொம்பினுல் ஆட்களைக் குத்திவிடுவதும் உண்டு. மாட்டுக்குத் தற்காப்பு ஆயுதங்கள் கொம்பும் காலும் தான்.

வீடுகளில் மனிதர் வளர்க்கும் மாடுகள் அத்துணை முரண்டு பண்ணுவதில்லை. உழவுக்கும் வண்டியில் பூட்டுவதற்கும் காளைமாடு பயன்படும். காளைமாடு பசு மாதிரி அத்துணை அமைதியாக இராது. அதனிடம் சற்று விழிப்பாகவே பழகவேண்டும். குடையை விரித்தால் சில மாடுகள் மிரளும்; புதியவர்களைக் கண்டால் சில முரண்டு செய்யும். ஊர் மாடுகள், கோவில் மாடுகள் என்று சில உண்டு. தமிழகத்தில் ஊருக்கு ஊர் அத் தகைய பொலி காளைகளைப் பார்க்கலாம். அந்த 'ஊர் மாடுகள்' தின்று கொழுத்துச் செழிப்பாகத் திரியும். பெரும்பாலும் அவை கோவிலுக்கு யாராவது வழங்கிய மாடுகளாக இருக்கும்; கோவில் மாடு என்னும் முறையில், எல்லோரும் அவற்றுக்கு வேண்டிய தீனிகளை மனமுவந்து தருவர். அவை தாமாகத் தின்றுவிடுவதும் உண்டு. அதனுல் அந்த மாடுகள் கொழுகொழுவென்று காணப்படுவதில் வியப்பில்லை. கோவில் மாடுகளிடம் பிள்ளைகளும் சரி, பெரியவர்களும் சரி, நெருங்க அஞ்சுவார்கள். அவை யார்மீதும் எளிதில் பாய்ந்துவிடும். ஆகவே, அவற்றின் கொம்புக்கு இரையாக எவரும் விரும்புவதில்லை.

மஞ்சுவிரட்டு காணவேண்டும்

மாடுகளுக்குள்ள கொம்பின் பயன் தெரியவேண்டுமானால் வண்டிப் பந்தயம், மஞ்சுவிரட்டு ஆகியவற்றைப் பார்க்கவேண்டும். மஞ்சுவிரட்டு என்பது ஒரு வீர விளையாட்டு. மலாயாவில் பிறந்து வளர்ந்த குழந்தைகள் அந்த விளையாட்டைப் பார்த்திருக்க முடியாது. காளைகளைத் தொழுவத்தில் அடைத்து வைப்பார்கள். இதற்காக எல்லா ஊர்களிலிருந்தும் காளைகள் வரும். ஒரு பெரிய பொட்டல்—அதாவது பரந்தவெளி. அந்த வெளியைச் சுற்றிலும் மஞ்சு விரட்டைக் காணும் மக்கள் கூடியிருப்பார்கள். தொழுவிலிருந்து நான்கு நான்கு காளைகளாக அவிழ்த்து விடுவார்கள். அந்தக் காளைகளின் கழுத்தில் சாயத்துண்டு கட்டியிருக்கும். காளைகள் பரந்த வெளியில் அங்குமிங்கும் ஓடும். வீரர்கள் காளைகளைப் பிடித்து, அவற்றின் கழுத்திலுள்ள துண்டுகளை அவிழ்க்கவேண்டும். காளைக்கும் மனிதனுக்கும் போர். சில காளைகள் எளிதில் துண்டுகளைப் பறிகொடுத்துவிடும். சில பெரிய போராட்டம் நடத்தும். பிடிக்க வரும் ஆட்களை மடக்கிப் போட்டுவிடும். கடைசிவரை விட்டுக்கொடுக்காத காளைகளும் உண்டு. கழுத்துத் துண்டுகளோடு வீட்டுக்குக்கு வெற்றிகரமாக வந்து சேரும் காளைகளை அவற்றின் சொந்தக்காரர்கள் ஆலத்தி எடுத்து வரவேற்பார்கள். மஞ்சுவிரட்டு என்னும் இந்த வீர விளையாட்டு வேடிக்கை பார்ப்பவர்களுக்கு நல்ல பொழுதுபோக்கு. சில சமயங்களில் பயங்கரமாக இருக்கும். மனிதர்களை மாடுகள் உருட்டித்தள்ளும். குடலைக் கொம்புகளால் சீறி எடுத்துவிடுவதும் உண்டு. இந்த மஞ்சுவிரட்டுக்கென்று ஆங்காங்கு மாடுகளைத் தயார் செய்வார்கள். அவற்றின் கொம்புகளெல்லாம்

மிக அழகாகச் சீவப்பட்டு மெருகிடப்பட்டிருக்கும். மாட்டின் கொம்புக்கு மனிதன் எவ்வளவு அஞ்சுகிறுன் என்பதை மஞ்சுவிரட்டில் கண்டுவிடலாம்.

கொம்புள்ள மற்ற மிருகங்கள் எருமை, மான் முதலியவை. எருமை தன் வளைந்த கொம்பால் தன்னைப் பாதுகாத்துக் கொண்டுவிடுகிறது. மிரண்டோடும் மானுக்குக் கொம்பு தற்காப்பு ஆயுதமாக இருப்பதோடு, அதற்கு அழகையும் சேர்க்கிறது. மான் கொம்பு அழகுக் குவியல். அதனைக் கண் முன்னுல் வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கலாம். வீடுகளில் மான் கொம்புகளை அழகுப் பொருளாக மாட்டி வைப்பார்கள்.

கொம்பு பற்றிய ஆராய்ச்சியை இத்துடன் நிறுத்திக்கொள்வோம். கொம்புள்ள மிருகங்களிடம் சற்று எட்டி நிற்பது நல்லதென்று தெரிந்துகொண்டோம். அவற்றினிடம் எவ்வளவு தொலை தள்ளி நிற்கவேண்டுமென்பதை நீதிவெண்பா வரையறை செய்கிறது. ஐந்து முழம் தள்ளியிருக்கவேண்டுமாம். ஆடு, மாடு, எருமை, மான் இவற்றினிடம் ஆபத்து நேராதிருக்க வேண்டுமானுல் ஐந்து முழம், அதாவது இரண்டரை கஜ தூரம் எட்டி நிற்கவேண்டும். இப்போது நீதிவெண்பாவைக் காண்போம்:

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக்(கு) ஆயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி [20]

கொம்பு முளைத்த உயிர்களிடம் ஐந்து முழம் விலகி நிற்கவேண்டும். யாராவது நம்மை மிரட்டினுல் ‘உனக்கு என்ன கொம்பா முளைத்திருக்கிறது?’ என்று

நாம் திருப்பிக் கேட்பதுண்டு. கொம்பு முளைத்திருந் தால் நாம் பயப்படுவோம் என்பதுதான் இதன் பொருள். ஆகவே, நீதிவெண்பா அறிவுரையின்படி கொம்புள்ள விலங்குகளிடம் மிக அருகில் நெருங்கக் கூடாது. ஐந்து முழம்வரை 'அபாயப் பிரதேசம்'; அதற்குமேல் அச்சமில்லை.

குதிரைக்கும் யானைக்கும்

நீதிவெண்பா, மாட்டுக்கும் எருமைக்கும் சொன்ன தோடு நிறுத்தவில்லை. குதிரைக்கும் யானைக்கும் எவ் வளவு தொலை தள்ளி நிற்கவேண்டுமென்பதையும் சொல்கிறது. ஆடு மாடுகளைவிடக் குதிரை பொல்லாத மிருகம். குதிரையைத் தம்பி தங்கைகள் எல்லோருமே பார்த்திருப்பீர்கள். மலாயாவில் குதிரைப் பந்தயங் களில்தான் குதிரையைக் காணலாம். ஆனால், தமிழ கத்தில் குதிரை வண்டிகள் உண்டு. 'ஜட்கா வண்டி' என்று சொல்வார்கள். அந்த வண்டியில் ஏறி உட்கார்ந் தால், முதலில் வண்டி பின்னால்தான் போகும். குதிரை வண்டிக்காரன் சவுக்கை எடுத்து இரண்டு அடி சுளீரென்று வைத்த பிறகே குதிரை முன்னே செல்லத் தொடங்கும். ஜட்கா வண்டிக் குதிரை இடக்கு பண்ணு வதில் பெயர்போனது. திருமணங்களில் மாப்பிள்ளை குதிரையில் ஊர்வலம் வருவார். இப்போதும் தமிழ கத்தில் இப் பழக்கம் உண்டு. ஒரு நோஞ்சான் குதிரை இதற்கென்று வரும். மாப்பிள்ளை அதன்மீது 'ஜம்' மென்று ஏறி உட்கார்ந்து கொள்வார். மாப்பிள்ளையை ஊரார்கள் கண்குளிரப் பார்க்க இது நல்ல வாய்ப்பாக இருக்கும். மாப்பிள்ளையின் குதிரைச் சவாரி சற்று விழிப்பாக நடக்கவேண்டிய காரியம். பழைய காலங் களில் மன்னர்கள் குதிரையேற்றம், யானையேற்ற மெல்லாம் பழகியிருக்கிறார்கள். இப்போது உந்து

வண்டி என்னும் மோட்டார் வந்துவிட்டதால் குதிரைகளை எவரும் தேடுவதில்லை.

குதிரை துடுக்கான மிருகம். அதற்குச் சினம் வந்துவிட்டால் காலால் சரியாகக் கொடுக்கும். பக்கத்தில் நிற்பவர்கள் சுருண்டு விழவேண்டியதுதான். ஆகவே, குதிரைகளிடம் பெரும்பாலும் எவரும் நெருங்குவதில்லை. அதற்குப் பத்து முழம்வரை அபாய எல்லை—அதாவது ஐந்து கஜ தூரம் எட்டி நிற்க வேண்டும். அப்போது குதிரையின் ஆபத்திலிருந்து தப்பித்து விடலாம்.

இனி யானையைக் கவனிப்போம். யானையை நீங்கள் விலங்குக் காட்சிசாலையில் பார்த்திருப்பீர்கள். யானையின் உருவம் மிகப் பெரிது. முறம் போன்ற காதுகள்; தேரின் வடக் கயிறு போன்ற தும்பிக்கை; ஆயிரக்கால் மண்டபத்தின் தூண்கள் போன்ற கால்கள்; யானையின் உருவமே சிறுபிள்ளைகளை அஞ்ச வைத்துவிடும். ஆனால் யானை இயல்பாக மூர்க்கமானதன்று. சாந்தமாக இருக்கும்போது சிறுவர் சிறுமிகளும் அதனிடம் சென்று வாழைப்பழம் தரலாம், தேங்காய் தரலாம்; வாங்கித் தின்னும். ஆனால், இந்த அமைதிப் பண்பு எப்போது அதனிடம் மாறுமென்று சொல்ல முடியாது. ஆகவே, யானையிடம் மிகமிக எட்டியிருப்பதே நன்று. நீதிவெண்பா யானைக்கு ஆயிரம் முழம் எல்லை சொல்கிறது.

துட்டனைக் கண்டால் தூர விலகு

ஆடு மாடு முதலிய கொம்புள்ள விலங்குகளுக்கு ஐந்து முழம்; குதிரைக்குப் பத்து முழம்; யானைக்கு ஆயிரம் முழம். ஆடு, மாடு, குதிரை, யானை இவற்றோடு கதை முடிந்ததா? இல்லை. இவற்றையெல்லாம் விடப்

பொல்லாத மிருகம் ஒன்று இருக்கிறது. உடனே சிங்கமும் புலியும் உங்கள் நினைவுக்கு வரும். அவை காட்டில் வாழ்பவை; நாட்டு மக்கள் மத்தியில் இருப்பவை அல்ல. ஆகவே, அவற்றுக்கு நீதிவெண்பா வரையறை ஏதும் செய்யவில்லை. யானையைவிடப் பொல்லாத மிருகங்கள், ஆபத்தான மிருகங்கள் பல நம்மோடு கூடவே இருக்கின்றன. மூர்க்கர்கள், போக்கிரிகள், முரடர்கள், பிறருக்குத் தீமை செய்வதையே கருத்தாகக் கொண்டவர்கள் ஆகியோர்தாம் அந்த மிருகங்கள்.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்
கற்றாரோடு ஏனை யவர் [410]

என்னும் திருக்குறள் இங்கே நம் நினைவுக்கு வருகிறது. விலங்கு நிலையில் உள்ள மாந்தர்கள் ஏராளம். விலங்குகளாக வாழ்வோரும் உண்டு. அத்தகைய தீயவர்களைவிட்டு, ஆயிரம் முழம், பத்தாயிரம் முழம் மட்டுமன்று; கண்ணில் படாமலேயே விலகியிருக்க வேண்டுமென்பதுதான் இப்பாட்டு கூறும் அறிவுரை.

ஆடு, மாடு, குதிரை, யானை எல்லாவற்றையும் விடத் தீயவர்கள் பொல்லாதவர்கள் என்பதே இதன் பொருள். இத்தனைக்கும் தீயவர்களிடம் கொம்பில்லை, வாலில்லை, வடக்கயிறு போன்ற துதிக்கை இல்லை. அப்படி ஆயுதமற்றவர்களாக அவர்கள் வெளிக்குத் தெரிந்தபோதிலும், அவர்களால், ஆடு, மாடு, குதிரை, யானையைவிடப் பேராபயம் விளையும். அதனாலேயே அபாய எல்லையை அளந்து காட்டாமல், கண்ணில் படவே கூடாது என்று நீதிவெண்பா திட்டவட்டமாகச் சொல்லிவிடுகிறது.

'தீயாரைக் காண்பதுவும் தீதே' என்று மூதுரை சொல்லியிருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. தீயவர்களின் பார்வையே கேடுவிளைவிக்கக்கூடியது.'அவன் கண் பட்டால் ஊரே அழிந்துவிடும்' என்று சிலரைப் பற்றிச் சொல்வார்கள். பொறாமைக்காரர்கள், அழுக்காறு நிறைந்தவர்களை இவ்வாறு கூறுவதுண்டு. 'துட்டனைக் கண்டால் தூர விலகு' என்பதும், துட்டனைக் கண்டால் தூரத்தூர' என்பதும் இந்த உண்மையை வலியுறுத்துகின்ற பழமொழிகளே!

மீண்டும் நாம் பாட்டின் கருத்துக்கு வருவோம். ஆட்டுக்கும் மாட்டுக்கும் ஐந்து முழம்! குதிரைக்குப் பத்து முழம்! யானைக்கு ஆயிரம் முழம்! தீங்கினரான கயவர்களிடமோ அவர்களின் கண்ணிலேயே படக்கூடாது. அதுதான் நீதிவெண்பா காட்டும் நல்ல நெறி.

௨

கயவருக்கு உடல் முழுதும் நஞ்சு

ஆடு, மாடு, குதிரை, யானையைப் பற்றித் தெரிந்து கொண்ட நாம் இப்பொழுது ஈ, தேள், பாம்பு ஆகிய மூன்று உயிர்களைப் பற்றியும் படிக்கப் போகிறோம். நீதிவெண்பாவில் நாம் காணுகிற இரண்டாவது பாட்டு இது. எனவே நீதிவெண்பாவைப் பற்றி உங்களுக்குச் சில சொல்ல விரும்புகிறேன்.

நீதி வெண்பா

நல்வழி, நன்னெறிபோல நீதிவெண்பாவும் தமிழிலுள்ள ஒரு சிறந்த நீதி நூலாகும். மொத்தம் நூறு வெண்பாக்கள். வெண்பாக்களின் அமைப்பு இனிமை பயப்பது. செய்யுட்களின் சொல்லழகும் கருத்தழகும் படிப்பவரை மகிழ்விப்பன. பள்ளி மாணவர்களுக்கு இந் நூல் பாடமாகச் சொல்லித் தரப்படுவதே, இதன் சிறப்புக்குப் போதிய சான்றாகும். நீதிவெண்பாவைப் பாடியவர் யாரென்பது தெரியவில்லை. பலர் பாடிய வெண்பாக்களின் தொகுப்போ என்ற ஐயமும் இருக்கிறது. இது எப்படியாயினும் சிறந்த அறிவுரைகளைச் சுவை பயக்கும் வண்ணம் இந் நூல் எடுத்தியம்புகிறது.

ஈயின் நஞ்சு

ஈ, பாம்பு, தேள் ஆராய்ச்சிக்குத் திரும்புவோம். ஈ மிக எளிய சிற்றுயிர். ஈயில் பலவகை உண்டு. எனினும் நம் தின்பண்டங்களை மொய்க்கும் ஈயையே நாம் பெரிதும் காண்கிறோம். ஈ மொய்த்த பண்டம் தீது; அதனை உண்பது ஆகாது. இது நல்வழியில் அதாவது சுகாதாரப் பாதையில் முதற் பாடம். ஈ எத்தனையோ பிணிகளைச் சுமந்துசென்று பரப்புகிறது. அகவே மறைமுகமாக ஈக்களினால் நாம் பல தொல்லைகளை அடைகிறோம். ஆனால் நேரில் ஈயைக் கண்டு நாம் அஞ்சுவதில்லை. ஆனால் தேனீ என்று ஒரு வகை உண்டு. அது பொல்லாதது. அது கொட்டிவிடுமென்று பயந்து தேன் கூட்டிற்கு அருகே யாரும் செல்லமாட்டார்கள். தேனீ கொட்டினால் அவ்வளவு கடுப்பு இருக்கும். தேனீயின் நஞ்சு உடம்பில் பாய்ந்தால், அத்துணை துன்பந் தருகிறது. பொதுவாக ஈக்கள் அனைத்திற்கும் விடம் அதாவது நஞ்சு தலையில் இருக்கிறது. ஈ கொட்டும் போது அதன் தலையிலுள்ள நஞ்சுதான் நம் 'உடம்பில் பாய்ந்து வேதனையைத் தருகிறது. ஆகவே ஈயின் உடம்பில் நஞ்சு சேமிக்கப்பட்டுள்ள இடம் தலை.

தேளின் கொடுக்கு

இனி தேளைக் கவனிப்போம். தேள் என்ற சொல்லைக் கேட்டாலே சற்று நடுக்கமாக இருக்கிறது. தூய்மையற்ற, குப்பை கூளம் நிறைந்த வீட்டிலேயே தேள் இருக்கும். அதனை வெயில் காலத்தில்தான் மிகுதியாகப் பார்க்கலாம். தேள் திடீரென்று முகட்டிலிருந்து விழும்; அடைசல் நிரம்பிய மூலையிலிருந்து கிளம்பும். அப்போது அதனிடம் அகப்படுகிறவர்கள் கொட்டுப்பட வேண்டியதுதான். தேள் கொட்டி அந்த

நஞ்சினுல் செத்தவர்களும் உண்டு. கருந்தேள் என்று ஒருவகை உண்டு. அதன் விடம் உடம்பில் சரியாகச் சார்ந்துவிட்டால், அதனை இறக்குவதற்குப் பெரும் பாடுபடவேண்டும். அதற்குள் தேளால் கொட்டுண்டவர்கள் படும்பாடு கண்ணுல் பார்க்க முடியாது. அவர்களுடைய உடம்பெல்லாம் வேர்த்துவிடும்; துடியாய்த் துடிப்பார்கள்; கை கால்களை உதறுவார்கள்; சித்திர வதைதான். தேளின் விடம் அவ்வளவு கொடுமையானது. இத்தகைய கொடுமையான விடத்தைத் தேள் தன் கொடுக்கில் மட்டும்தான் வைத்திருக்கிறது. தேள் கொடுக்கினுல்தான் மனிதர்களைக் கொட்டும்.

பாம்பு முனிவர்கள்

ஈயும் தேளும் முடிந்தது. பாம்பைப் பற்றிக் காண்போம். பாம்பென்ருல் படையும் நடுங்கும் என்பார்கள். ஆகவே சாதாரண மனிதர்கள் பாம்பைக் கண்டு அஞ்சுவதில் வியப்பில்லை. பாம்புக்கு எவரும் அஞ்சுவர். ஒருவேளை பாம்பாட்டியை வேண்டுமானுல் இதற்கு விதிவிலக்காகச் சொல்லலாம். பாம்பை நேரில் பார்ப்பது நல்ல அனுபவம். தோட்டங்களில், அடர்ந்த புல்வெளிகளில், காடுகளில், மலைகளில் அவற்றைக் காணலாம். இப்படியெல்லாம் பார்க்க முடியாதவர்கள் பாம்பை விலங்குக் காட்சிசாலைக்குச் சென்ருவது கண்டுவிடவேண்டும். பினுங்கில் உள்ள பாம்புக் கோவிலைப் பற்றிப் பெரும்பாலும் மலாசியாத் தம்பி தங்கைகளுக்குத் தெரியும். அது பெருமை பெற்ற புத்தர் கோவில்; பினுங்கில் பார்க்கவேண்டிய இடங்களில் அதுவும் ஒன்று. அந்தப் பாம்புக் கோவிலில் உயிருள்ள பாம்புகள், ஆடாமல் அசையாமல் செடிகளிலும் கொடிகளிலும் விளக்குகளிலும் சுற்றிக்கொண்டிருப்பது வியப்பாக இருக்கிறது. ஏதோ ரப்பர்ப்

பாம்புகள், விளையாட்டுப் பாம்புகள் போல அவை அங்கே அத்துணை அமைதியாக இருக்கின்றன. அன்புக் கடவுள் புத்தர் முன்னிலையில் தவம் செய்யும் பாம்பு முனிவர்கள் என்றே அவற்றைச் சொல்லவேண்டும்.

பாம்பில் பலவகை

பாம்பில் எத்தனையோ வகை உண்டு. மலைப் பாம்பு மிகப் பெரிது. அது ஆடு, மாடு, சமயத்தில் ஆளைக்கூட உள்ளே தள்ளிவிடுமாம். கண்ணுக்குத் தெரியாத சிறு பாம்பகளும் உண்டு. பச்சைப் பாம்பு மிகச் சிறியது. தண்ணீர்ப் பாம்புக்கு விடமில்லை என்பார்கள். ஓலைப் பாம்பு என ஒரு வகை உண்டு. கொம்பேறி மூக்கன் என்ற பாம்பு ஆட்களை கொத்தி விட்டு மரத்தில் ஏறிக்கொள்ளுமாம். தான் கொத்திய ஆள் செத்து அவர் சவம் எரியில் வைக்கப்பட்ட பின்னரே அது மரத்தை விட்டுக் கீழே இறங்குமாம். அதற்கிடையில் மரத்தைவிட்டு இறங்கினுல், அது கொத்திய விடமும் இறங்கிவிடுமென்று சொல்வார்கள். நல்ல பாம்பு என்பது பெயரளவில்தான் நல்லதே ஒழிய அது கொத்தினுல் உயிர் தப்புவது அரிது. அதன் விடம் கொடுமையானது. பாம்புப் பிடாரர்கள் பெரும்பாலும் நல்லபாம்பையே பிடித்துக்கொண்டு வருவார்கள். மகுடியின் இசைக்குப் பாம்பு கட்டுப்படும். மகுடி வாசிக்கும்போது, நல்லபாம்பு படம் விரித்தாடுவது பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும். பாம்பாட்டிகள் இந்த வேடிக்கையைக் காட்டித்தான் வயிறு வளர்க்கிருர்கள்.

பாம்புக் கடவுள்

நல்லபாம்பைக் கடவுளாக வணங்கும் பழக்கத்தைத் தமிழகத்தில் இப்போதும் காணலாம். பாம்புப்

புற்றில் பொங்கல் இடுவார்கள்; பால் ஊற்றுவார்கள். ஆதி மனிதர்களிடம் இருந்த இந்த நம்பிக்கை இன்னும் சிலரிடையே நீடித்து வருகிறது. பாம்பிடம் மனிதர்கள் காட்டும் இந்தப் பக்திக்கும் அச்சம்தான் அடிப்படை.

ஈயை விடத் தேள் கொடியது; தேளை விடக் கொடியது பாம்பு. நஞ்சுள்ள உயிர்கள் என்று எடுத்துக்கொண்டால் பாம்புக்குப் பிறகுதான் எல்லாம். பாம்பு என்றாலே நமக்கு ஒரு வகையான அச்சம் ஏற்படுகிறது. பாம்பு கடிக்கும், அவ்வாறு கடித்தால் அதன் விடம் நம் உடம்பிலும் ஏறும், நம் உயிருக்குத் தீங்கு நேரும் என்ற எண்ணம்தான் இதற்குக் காரணமாகும்.

பாம்புக்கு நஞ்சு

'பாம்புக் குட்டிக்கு விடம் பாலடை வைத்துப் புகட்ட வேண்டுமா?' என்பது ஒரு பழமொழி. 'பாம்பிலும் பாம்புக்குட்டிக்கு விடம் அதிகம், வீரியமும் அதிகம்' என்றும் சொல்வார்கள். இந்தப் பழமொழி எல்லாம் பாம்பு விடம் நிறைந்தது, பாம்பு நஞ்சின் உருவம் என்பதையே காட்டுகின்றன.

பாம்புக்கு நஞ்சு பல்லிலே இருக்கிறது. கடிக்கும் போது, அந்த நஞ்சு பல்வழியாகவே வெளியேறுகிறது. ஆகவே பாம்பு நஞ்சைச் சேமித்து வைத்திருக்கிற இடம் பல்லாகும்.

நஞ்சினும் கொடியவர் தீயோர்

கடித்தால் நஞ்சு, கொட்டினால் நஞ்சு, கொத்தினால் நஞ்சு என்று நாம் அஞ்சுகிற உயிர்களிடம், அந்த நஞ்சு எங்கெங்கே இருக்கிறதென்பதைத் தெரிந்து கொண்டோம். ஈக்குத் தலையிலும், தேளுக்குக் கொடுக்

கிலும், பாம்புக்குப் பல்லிலும் நஞ்சு இருக்கிறது. ஆனுல் உடல் முழுவதுமே நஞ்சான ஓர் உயிரை நீதி வெண்பா நமக்குக் காட்டுகிறது. கயவர்களுக்கு அதாவது கெட்ட குணமுள்ளவர்களுக்கு உடம்பு முழுவ்துமே விடமாம்.

ஈக்கு விடந்தலையில் எய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடம்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்கு
அங்கம் முழுதும் விடமேயாம். [18]

நீதிவெண்பா உண்மைகளை அழகுற வகைப்படுத்துவதில் தலைசிறந்து விளங்குகிறது. நல்ல அறிவியல் உண்மைகளைச் சுவையாக, எளிமையாகச் சொல்லிவிடுகிறது அது. நஞ்சுக்கு அது எங்கேயிருப்பினும் நாம் அஞ்சுகிறோம். ஏனெனில் நஞ்சு நம் உயிரைக் குடித்து விடும். தேனீயிடம் நாம் அஞ்சுவதற்கும் தேள், பாம்பு, பூரான், எட்டுக்கால் பூச்சி முதலிய உயிர்களைக் கண்டால் நாம் நடுங்குவதற்கும் காரணம், இந்த நஞ்சுதான்.

நம் அச்சத்தைக் கண்டறிந்து, அதனைச் சுட்டிக் காட்டி நல்ல அறிவுரையைக் கூறிவிடுகிருர் நீதி வெண்பாஆசிரியர்.

தலையில் மட்டுமே நஞ்சுள்ள தேனீக்கு நாம் எவ்வளவு அஞ்சுகிறோம்! கொடுக்கில் மட்டும் விடமுள்ள தேளைக் கண்டால் நாம் எவ்வளவு நடுங்குகிறோம்! பல்லில் மட்டும் நஞ்சுள்ள பாம்பைக் கண்டால் எதிரிகளை முறியடித்து வீழ்த்தும் படைவீரர்களும்... எத்துணை பயப்படுகிருர்கள்! ஈக்குத் தலையில் மட்டும் நஞ்சு, மற்ற இடங்களில் இல்லை. தேளுக்குக் கொடுக்கில் மட்டுமே விடம், மற்ற உறுப்புகளில் இல்லை.

பாம்புக்குப் பல்லைத் தவிர உடம்பின் வேறு பகுதிகளில் நஞ்சில்லை. அப்படி உடம்பின் ஒரு பகுதியில் மட்டும் நஞ்சைக் கொண்டுள்ள ஈ, தேள், பாம்பு முதலிய உயிர்களிடமே, நாம் மிகவும் அஞ்சுகிறோம். அந்த உயிர்களைக் கண்ணால் கண்டாலே பதறிவிடுகிறோம்; அவற்றைக் கண்டால் வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு ஓட்டம் பிடிக்கிறோம்.

ஈ, தேள், பாம்புக்கே இந்த நிலையானால், உடல் முழுவதுமே நஞ்சான கயவர்களிடம் நாம் எத்துணை அஞ்சவேண்டும்? 'தீங்கினர் தம் கண்ணில் தெரியாத தூரத்து நீங்குவதே நல்ல நெறி' என்று நாம் முதலில் கண்ட நீதிவெண்பா உரைத்தது. அந்த அறிவுரையே மீண்டும் இப் பாட்டில் தக்க காரணத்தோடு வலியுறுத்தப்படுகிறது.

துர்ச்சனருக்கு அதாவது தீயவர்களுக்கு உடம்பெல்லாம் விடம். தலை, கால், கை, பல் என்று பிரித்து, அதில் மட்டும் நஞ்சு இருக்கிறது, இதில் மட்டும் நஞ்சு இருக்கிறதென்று அவர்களுக்குச் சொல்ல முடியாது. உடம்பின் எல்லாப் பகுதியுமே அவர்களுக்கு நஞ்சு. ஆகவே அவர்களைக் கண்ணால் பார்க்கக்கூடாதென்பதோடு நெஞ்சாலும் நினைக்கவும் கூடாது.

அவர்களின் பார்வை, பேச்சு, மூச்சு, செயல் நினைப்பு எல்லாமே நஞ்சு மயமாக இருக்கும். நஞ்சு மயமான உடம்பிலிருந்து நஞ்சுதானே பிறக்கும், அமிழ்தத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்? ஆகவே தீயவர்களின் பேச்சு, மூச்சு, செயல், பார்வை ஏதும் தாக்காதபடி நம்மை நாம் காத்துக்கொள்ள வேண்டும்.

பாம்புக்குப் பல்லைப் பிடுங்கிவிட்டால் ஆபத்தில்லை. நாம் தெருவில் பாம்பாட்டிகளிடம் காணு

பவை எல்லாம் பல் பிடுங்கப்பட்ட பாம்புகளே. அது போலத் தேளுக்குக் கொடுக்கைக் கத்தரித்துவிட்டால் அச்சமில்லை. பிறகு அதனை வைத்தக்கொண்டு விளையாடலாம். ஆனால் உடம்பு முற்றும் விடமான கயவர்களை என்ன செய்வது? காலை வெட்டினும், கையை வெட்டினும், நஞ்சு போயிற்றென்ற கதை அவர்களிடம் நடவாது. தலையை வெட்டி ஆளைப் புதைத்தால்தான், அவர்களால் தீங்கின்றி நாம் தப்பமுடியும். உயிரோடு நடமாடிக்கொண்டிருக்கும்வரை, அவர்கள் பிறருக்குக் கேடு விளைவித்துக்கொண்டுதான் இருப்பார்கள். ஆகவே தேளைவிட, பாம்பைவிடக் கொடியவர்கள், கொடுமை மிக்க நஞ்சு கொண்டவர்கள் மாந்தரிலே தீயவர்களாக இருப்பவர்கள். அவர்களுக்கு உடம்பு முழுதும் நஞ்சு. ஆகவே அவர்களை நெஞ்சால் எண்ணுவதும் தீது.

> தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
> தீயார்சொற் கேட்பதுவும் தீதே—தீயார்
> குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு
> இணங்கி யிருப்பதுவும் தீது [மூதுரை]

என்பது ஔவையார் தரும் அறிவுரையல்லவா?

3
பெரியாரைத் துணைக்கொள்

சிங்கத்தின் குகைக்கும் நரியின் குழிக்கும் உங்களை அழைத்துச் செல்லப் போகின்றேன். அஞ்சாமல் என்னோடு வருகிறவர்கள் அரிய பயன் காண முடியும்.

விலங்கரசன் சிங்கம்

சிங்கம் விலங்குகளின் அரசன்; காட்டின் மன்னன். சிங்கத்தை விலங்குக் காட்சி சாலையில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். சிங்கத்தின் பார்வையே தனி! ஈடற்ற எடுப்பான நேரிய பார்வை அது. சிங்க நோக்கு அல்லது அரிமா நோக்கு என்று அதனைச் சிறப்பித்துக் கூறுவார்கள். சிங்கத்தின் இடி முழக்கம் காட்டை நடு நடுங்க வைக்கும். சிங்கத்தின் குரலைக் கேட்டுவிட்டால் காட்டில் ஒரு விலங்கையும் பார்க்க முடியாது. எல்லாம் தத்தம் இருப்பிடத்தில் ஒடுங்கிவிடும். வனவேந்தன் அல்லவோ சிங்கம்! ஆகவே, அதனிடத்தில் மற்ற விலங்குகள் அச்சமும் மரியாதையும் வைத்திருப்பது இயற்கையே. சர்க்கஸில் சிங்கம் 'கர்ச்சனை' செய்வதைத் தம்பி தங்கைகள் கேட்டிருக்கலாம். அதனால்தான் தலைவர்களின் பெருமுழக்கங்களைச் 'சிங்கநாதம்' என்றும் 'சிங்க கர்ச்சனை' என்றும் சொல்கிறார்கள்,

யானை, புலி முதலிய பெரிய விலங்குகளையே சிங்கம் வேட்டையாடும். எலி, பூனை, நாய் போன்ற வலுவற்ற சிற்றுயிர்களை அது ஏறெடுத்தும் பாராது. 'சிங்கம் பசிக்கு ஆனையையே கொல்லும்; 'சிங்கம் பசித்தால் தேரையைப் பிடிக்குமா?' என்னும் பழமொழிகள் இந்த உண்மையை வலியுறுத்துவன.

சிங்கம் வாழும் இடம் குகை. மலைக் குகைகளில் தான் சிங்கம் வசிக்கும். சிங்கம் காட்டில் உலாவப் புறப்பட்டுவிட்ட சமயமாகப் பார்த்து, அதன் குகைக் குள் நாம் துணிந்து நுழையலாம். இப்பொழுது சிங்கம் குகையில் இல்லை. கவலைப்படாமல் என்னோடு வாருங்கள். சிங்கம் இல்லாவிட்டால் என்ன? சிங்கத்தின் குகை என்றாலே நம் உள்ளம் நம்மையும் அறியாமல் நடுங்குகிறது. 'சிம்ம சொப்பனம்' என்று சொல் வார்கள். சிங்கத்தைக் கனவில் கண்டாலும் எவருக்கும் அச்சம் ஏற்படும்; கைகால் உதறத் தொடங்கிவிடும். எனவே, சிங்கத்தின் குகையில் நமக்கு நடுக்கம் ஏற் படுவதில் வியப்பில்லை.

சிங்கத்தின் குகையில்

சிங்கத்தின் குகையில் நாம் என்ன காண்கிறோம்? விலைமதிக்க முடியாத யானைத் தந்தங்கள் அங்குமிங்கும் சிதறிக் கிடக்கின்றன! 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்' என்பது பழமொழி. யானையின் ஆயிரம் பொன் மதிப்புக்கு அதனிடமுள்ள தந்தமே காரணம். தந்தம், மிக விலை உயர்ந்த பொருள். பெருஞ் செல்வர்களிடமே தந்தத் தால் செய்த கலைப் பொருள்கள் இருக்கும். தந்தம் தங்கம் போன்றது. தந்தத்தைக்கொண்டு நுண்ணிய கலைப் பொருள்களை—என்றும் போற்றிப் பேணக்கூடிய

அழகுக் குவியல்களைச் செய்ய முடியும். இந்தியாவில் மைசூரில் யானைகள் மிகுதி. அதனால், அங்கு தந்தத்தைக்கொண்டு நல்ல நல்ல கலைச்செல்வங்களை எல்லாம் செய்கிறார்கள். சிங்கப்பூரில் நடைபெற்ற ஒரு பொருட்காட்சிக்கு மைசூரிலிருந்து தந்தப் பொருள்கள் வந்திருந்தன. தந்தத்தில் கட்டில், தந்தத்தில் தாயும் குழந்தையும், தந்தத்தில் புத்தர், தந்தத்தில் குழலூதும் கண்ணன்! எல்லாம் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய தலைசிறந்த கலைப் புதையல்கள்! ஆனால் பெரும் பணக்காரர்களே அவற்றை வாங்கி வீடுகளை அழகுப்படுத்த முடியும். யானையின் தந்தமல்லவா? இத்தகைய உயரிய தந்தம், தேடுவாரற்றுச் சிங்கத்தின் குகையில் அங்குமிங்குமாகக் கிடக்கிறது. தந்தத்தில் ஒன்றிரண்டு எடுத்துக்கொள்ளலாம். என்று உங்களுக்கு நாக்கில் நீர் ஊறுகிறதல்லவா? எடுத்துக்கொள்ளுங்கள். அதோ! கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் முத்துக்கள்! ஆம். யானையின் தந்தத்திலுள்ள முத்துக்கள்தாம் அவை! காடு—அங்கே சிங்கத்தின் குகை! அதில் தந்தமும் முத்துமா என்று எண்ணாதீர்கள்! நீங்கள் இருப்பது காட்டு மன்னனின் அரண்மனையில்—அங்கே தந்தமும் முத்தும் சிந்திக் கிடப்பதில் வியப்பென்ன?

சிங்கம் குறிப்பாக யானையையே கொல்லும்; அதற்கு யானையை அடித்து உண்பதில்தான் விருப்பு மிகுதி. ஆகவே, சிங்கத்தின் குகையில் தந்தங்களும் முத்துக்களும் இறைந்து கிடக்கக் காண்கிறோம். வந்தோம்; குகையைக் கண்டோம். சிங்கம் திரும்புவதற்குள் போய்விடுவோம். கையில் தந்தமும் முத்தும் கொழிக்கச் சிங்கத்தின் குகையை விட்டு உங்களை வெளியே அழைத்து வருகிறேன்.

நரியின் குழியில்

நம் பயணம் இன்னும் முடியவில்லை. நரியின் குழியையும் பார்த்துவிட்டு வருவோம். நரி வாழும் இடத்தை 'நுழை' என்பார்கள். பள்ளம், குழி, பொந்து என்றும் சொல்வது உண்டு. நரி என்றவுடன் உங்களுக்கு அதன் தந்திரம்தான் நினைவுக்கு வரும். 'நரித் தந்திரம்' என்று சொல்வார்கள். சூழ்ச்சியிலும் ஏமாற்று வித்தையிலும் வல்லது நரி. நரி சிறு விலங்குதான் எனினும் காட்டிலுள்ள எல்லா விலங்குகளையுமே அது தன் தந்திரத்தால் ஏமாற்றிவிடும். நரியின் தந்திரத்தைப்பற்றி எத்தனையோ கதைகளைப் படித்திருப்பீர்கள்.

சரி! நரியின் குழி வந்துவிட்டது! ஒரே நாற்றம்! அப்பப்பா, மூக்கைப் பிடித்துக்கொள்ளுங்கள்! அதோ! அங்கே கிடப்பது என்ன? முயலின் வால்! காட்டெலியின் வால்கள் எத்தனை கிடக்கின்றன! எல்லாம் அறுந்த வால்கள்! காலை வைக்க முடியவில்லையே! எங்கு பார்த்தாலும் மயிர்க் குவியல்கள்! அதோ தெரிகிறதே, அந்தத் தோல்—ஆம், அது கழுதையின் தோல். போதும்! போதும்! புறப்படுங்கள்! ஏன் இங்கே வந்தோம் என்று இருக்கிறதல்லவா?

சொர்க்கத்திற்கும் நரகத்திற்கும் உள்ள வேறுபாடுதான் சிங்கத்தின் குகைக்கும் நரியின் நுழைக்கும் உள்ள வேறுபாடு. சிங்கத்தின் குகை அரண்மனை! நரியின் நுழை எளிய குடிசை! சிங்கத்தின் குகைக்குச் சென்றோம், தந்தம், முத்துக்களோடு திரும்பினோம்! நரியின் நுழைக்குப் போனோம். மூக்கைப் பிடித்துக் கொண்டு ஓடி வந்துவிட்டோம்! இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை நீதிவெண்பா அழகாக இயம்புகிறது.

அரிமந்திரம் புகுந்தால் ஆனை மருப்பும்
பெருகொளிசேர் முத்தும் பெறலாம்—நரிநுழையில்
வாலும் சிறிய மயிரெலும்பும் கர்த்தபத்தின்
தோலுமல்லாமல் வேறுமுண்டோ சொல்? [2]

சிங்கம் எங்கே! நரி எங்கே! நிமிர்ந்த நோக்கும் நேரிய செயலும் கொண்ட அரிமா எங்கே? குள்ள உருவமும் கள்ளச் செயலும் கொண்ட சிறு நரி எங்கே? இரண்டையும் ஒரே தட்டில் வைத்து எடை பார்ப்பதே தவறு! பெரியோருக்கும் சிறியோருக்கும் உள்ள வேறுபாடும் இதுதான். சிங்கத்தின் குகையில் யானைத் தந்தமும் நரியின் பள்ளத்தில் கழுதையின் தோலும் இருப்பது இயற்கையே! மலையத்துணை வேறுபாடு! சிங்கம் போன்ற பெரியோருடன் பழகினால் உயர்வும் நரி போன்ற கீழ்மக்களுடன் பழகினால் தாழ்வும் உண்டாகும் என்பதையே இப்பாட்டு வலியுறுத்துகிறது.

பெரியோருடன் சேர்வதால் பெருநன்மை கிட்டும். தந்தம் போன்ற விலைமதிப்பற்ற பயனைப் பெறலாம். கீழ்மக்களைச் சேர்வதால் கேடே உண்டாகும்; நன்மை விளையாது. கழுதையின் தோலும் அறுந்த வாலும்தான் நரி நுழையில் கண்ட பலன். அது போன்ற உதவாக்கரைப் பொருள்களே சிறியோர் சேர்க்கையால் நமக்குக் கிட்டும்.

சேரிடம் அறிந்து சேர்

'சேரிடம் அறிந்து சேர்', 'பெரியாரைத் துணைகொள்' என்று ஆத்திசூடி வலியுறுத்துகிறது. பெரியவர்களோடு பழகவேண்டும்; அப்பொழுதுதான் நல்ல பழக்கங்கள் வரும். தம்பி தங்கைகள் தங்கள் கூட்டாளிகளைப் பொறுத்து மிக விழிப்பாக இருக்கவேண்டும். சில பிள்ளைகள் வீடு உண்டு, பாடம் உண்டு, பள்ளி

உண்டு என்று இருப்பார்கள். வீட்டில் தாய் தகப்பன் சொல்வதைத் தட்டமாட்டார்கள். மரியாதை, பணிவு முதலிய நல்ல பண்புகள் அவர்களிடம் இருக்கும். அத்தகைய பிள்ளைகளோடு நீங்கள் நட்புக்கொள்ள வேண்டும். அவர்களின் வீடுகளுக்குப் போய்வர வேண்டும். வெளியில் செல்வதானுல், அத்தகைய நல்ல கூட்டாளிகளோடுதான் போகவேண்டும். அதற்கு மாருகத் தப்பிலிகளோடுநீங்கள் சேர்ந்துவிடக்கூடாது. சில பிள்ளைகள் சிறுபிள்ளையிலேயே வீட்டுப் பழக்கத் தாலோ சேர்க்கையினுலோ கெட்டுவிடுகிருர்கள்; காலிக் கூட்டங்களில் சேர்ந்துவிடுகிருர்கள். அவர்கள் எதற்கும் அஞ்சமாட்டார்கள்; யாருக்கும் பயப்பட மாட்டார்கள்; திருட்டு முதலிய குற்றங்களைச் செய்ய வும் துணிவார்கள். அவர்கள் வாயில் எப்பொழுதும் சிகரெட் புகைந்துகொண்டிருக்கும். சூதாட்டமும் அவர்களுக்குப் பழக்கமாகி இருக்கும். எந்நேரமும் ஊர் சுற்றிக்கொண்டிருப்பார்கள். படிப்பு என்ருல் அவர்களுக்கு வேப்பங்காய்; பள்ளி என்ருல் நடுக்கும்; வீடு என்ருல் குமட்டும். அத்தகைய கயவாளிகளோடு நீங்கள் உறவு கொள்ளக்கூடாது. அப்படிச் சேர்ந்தால் உங்களுக்கும் இந்தக் கெட்ட பழக்கமெல்லாம் வந்து விடும். ஆகவே இணக்கமறிந்து இணங்கவேண்டும்.

பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டுமென்னும் கருத்தை நம் தமிழ் நூல்கள் அழுத்தமாகக் கூறி யுள்ளன. நம் அற நூலான திருக்குறள் இந்த உண்மை யைத் திட்டவட்டமாக எடுத்தியம்புகிறது.

அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் [443]

என்னும் குறள் பெரியோரை, சான்ருேரை, நல் லோரை நாம் உறுதுணையாகக் கொள்ளவேண்டும்

என்னும் நீதியை நன்கு வலியுறுத்துகிறது. தக்க பெரியவர்களைத் துணையாகக் கொண்டுவிட்டால், பகைவர் நம்மிடம் வாலாட்ட முடியாது. நம்முடைய எண்ணத் தூய்மையும் செயல் தூய்மையும் நாம் பழகும் மக்களைப் பொறுத்தே அமையும். 'உன் நண்பன் யாரென்று சொல்—உன்னை யாரென்று கண்டு பிடித்துவிடுகிறேன்'—என்று ஆங்கிலத்தில் சொல் வார்கள். சேர்க்கை, நட்பு, துணை இவற்றைப் பொறுத்துத்தான் மாந்தரின் வாழ்க்கை நலம் அமை யும். ஒருவர் வாழ்க்கை சிறப்பதும் சீரழிவதும் சேர்க்கையினுல்தான். இந்த உண்மையை நம் குழந் தைகள் மனத்தில் கொள்ளவேண்டும்.

சிங்கத்தின் குகைக்குச் செல்வதே சிறப்பு! பெரி யோருடன் பழகுவதே பெருமை! நரியின் நுழையும் கீழ்மக்களின் உறவும் நமக்கு அறவே வேண்டாம்.

4
பிச்சைக்காரர் நிலை படுகேவலம்

இரத்தலின் இழிவு

‘ஏற்பது இகழ்ச்சி’ என்று ஆத்திசூடியில் படித்திருக்கிறோம். பிச்சையெடுப்பது மிகக் கேவலமான தொழில். இரப்பது இழிவு என்னும் கருத்தை நம் தமிழ் நூல்கள் திட்டவட்டமாக வலியுறுத்தியுள்ளன.

> இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து
> கெடுக உலகியற்றி யான் [1062]

என்பது குறள். பிச்சையெடுத்துத்தான் சிலர் வயிறு வளர்க்க வேண்டுமென்ற நிலை இருக்குமானால் உலகை உண்டாக்கிய கடவுளே அழிந்தொழியட்டும் என்று ‘சாபம்’ போடுகிறார் வள்ளுவர். மக்களிடையே பிச்சை யெடுப்போர் என்று ஒரு சிலர் இருக்கக்கூடாது; இருப்பது அநீதி; சமுதாயத்திற்கே இழிவு என்பது தான் இங்கே அழுத்தமாகச் சொல்லப்படுகிற கருத்தாகும்.

பிச்சைக்காரர்கள் நாட்டில் இருக்கக் கூடாதென்பதுதான் இன்றைய சமுதாயத்தின் குறிக்கோளுமாகும். பிச்சைக்காரர்கள் இல்லாத நாட்டுக்குப் பெருமை உண்டு. இரப்போர் மிகுதியாக உள்ள நாடு

களைப் பிறநாடுகள் அவ்வளவாக மதிக்கமாட்டா. நமது மலைநாட்டில் பிச்சைக்காரர்கள் மிகமிகக் குறைவு. அந்த வகையில் நாம் பெருமைப்படலாம், நெஞ்சை நிமிர்த்துப் பேசலாம்.

பிச்சையெடுப்போரை உலகம் எவ்வளவு இழிவாகக் கருதுகிறதென்பதை நீதிவெண்பா நமக்கு எடுத்துரைக்கிறது.

நொய்தாம் திரணத்தின் நொய்தாகும் வெண்பஞ்சின்
நொய்தாம் இரப்போன் நுவலுங்கால்—நொய்ய சிறு
பஞ்சுதனின் நொய்யானைப் பற்ருதோ காற்றணுக
அஞ்சுமவன் கேட்ப தறிந்து. [8]

சற்றுக் கடுமையான பாட்டுப்போலத் தோன்றுகிறதே ஒழியத் திரும்பத் திரும்ப இரண்டு மூன்று முறை படித்துவிட்டால் பொருள் விளங்கிவிடும்.

துரும்பு இழிவின் சின்னம்

துரும்பு மிக இலேசான பொருள். காற்றடித்தால் துரும்பு உடனே பறக்கும். சூருவளியோ, புயலோ தேவையில்லை. சிறு காற்றடித்தாலே போதும், துரும்பு பறந்துவிடும். பஞ்சு அதனைவிட மென்மையான பொருள். அதுவும் காற்று வீசினுல் பறந்துவிடும். 'சிறு துரும்பும் பல் குத்த உதவும்' என்னும் பழமொழியில் துரும்பின் எளிய நிலையை உணர்கிருேம். அத்தகைய இழிவான துரும்பைவிட—அதாவது காற்றில் பறக்கக்கூடிய துரும்பு, தூசி, பஞ்சைவிடக் கேவலமானவன் பிச்சைக்காரன்.

இலேசான பொருள் காற்றில் எளிதில் பறக்கும். 'அம்மியும் குழவியும் ஆடிக் காற்றில் பறக்கச்சே, இலவம் பஞ்சு எனக்கென்ன கதி என்றதாம்' என்பதாக ஒரு பழமொழி உண்டு. குறைந்த கனமுள்ள

பொருள்களைக் காற்று தூக்கிச் சென்றுவிடும். மிகவும் நோஞ்சானாக இருப்பவர்களைப் பார்த்துக் 'காற்றடித்தால் கீழே விழுந்துவிடுகிற'மாதிரி இருக்கிறாய் என்று சொல்வதுண்டு. எதிரிகளை மட்டந்தட்டுவதற்கு 'நான் உன்னை வாயாலேயே ஊதிவிடுவேன்' என்று கூறுவது மரபு, 'நீ அவ்வளவு இலேசானவன்; உன்னை அடித்து வீழ்த்த ஆயுதத்தையோ கையையோ பயன்படுத்த வேண்டியதில்லை; வாயினால் ஊதினால் போதும். அந்தக் காற்றே உன்னைச் சாய்த்துவிடும்' என்பது தான் இதன் பொருள்.

ஆனையைக் கட்டுவான்

துரும்பு, ஆகக் கேவலமான பொருள் என்பதைத் 'துரும்பைத் தூணாக்குகிறதா?' என்னும் பழமொழியும் 'துரும்பு நுழைய இடம் கொடுத்தால் ஆனையைக் கட்டுவான்' என்னும் பழமொழியும் தெளிவாக விளக்கும். துரும்பு மிகச் சிறிய பொருள்—தூண் பெரிய பொருள். அதேபோலத்தான் துரும்பும் யானையும். ஒன்று இந்தக் கோடி! மற்றொன்று அந்தக் கோடி! பகைவர்களைக் கேவலமாகச் சொல்வதற்கு 'அவர்கள் எனக்குத் துரும்பு மாத்திரம்' என்பார்கள். ஆகவே துரும்பு மிகமிக இழிந்த பொருள்; கேவலமான பொருள், இலேசான பொருள், யாரும் சட்டை செய்யாத பொருள் என்பது தெளிவு.

பிச்சைக்காரனின் நிலை

கேவலம் அத்தகைய துரும்பைவிடக் கேடுகெட்டவனும் பிச்சைக்காரன். நீதிவெண்பா இன்னும் ஒருபடி அவனைக் கீழே இறக்கிவிடுகிறது. துரும்பையும் பஞ்சையும் காற்று தூக்கிப் போய்விடும். அதனால் கேவலமான பொருள்களென்று நாம் கண்டோம்.

அவற்றைவிட இழிவானவன், எளியவன் என்ற வகையில் பிச்சைக்காரனையும் காற்று அடித்துச் செல்வது தானே இயற்கை; காற்று அவனை எளிதில் தூக்கிச் செல்வதுதானே முறை. ஆனால் உண்மை அதற்கு மாறாக இருக்கிறது. காற்றும் பிச்சைக்காரனிடம் நெருங்க அஞ்சுமாம்.

புயல், சண்டமாருதம், சூறாவளி—இவற்றுக்கு வேண்டியது, வேண்டாதது என்று ஒன்றும் இல்லை. புயலின் பயங்கர விளைவுகள் உங்களுக்குத் தெரியும். சிங்கப்பூரில் ஒரு திடீர்ப் புயல் அடித்தது. அந்தப் புயலில் எத்தனையோ வீடுகள் இடிந்தன! எத்தனையோ மரங்கள் சாய்ந்தன! காற்றின் வேகத்தைப் பொறுத்தது அதனால் விளையும் கேடு! உள்ளத்தையும் உடலையும் குளிரவைக்கும் தென்றலும் காற்றுத்தான்! கம்பளியை எடுத்துப் போர்த்தவைக்கும் வாடையும் காற்றுத்தான்! மரங்களை வேரோடு வீழ்த்துகின்ற சூறாவளியும் காற்றுத்தான்! வீசுகின்ற காற்று, தன் குறுக்கே வருகிற எல்லாப் பொருள்களையும் தூக்கிச் சென்றுவிடும். அதன் வேகத்தை எதிர்த்து நிற்கக்கூடிய பொருள்கள் மட்டுமே மிஞ்சும். காற்றின் இயல்பைச் சுட்டுவதற்காக இத்தனையும் சொன்னேன்.

எதிரில் படுகின்ற எதனையும் தூக்கிச் செல்லும் காற்றும் பிச்சைக்காரனிடம் நெருங்க அஞ்சுகிறது. நீதிவெண்பாப் பாட்டு அவ்வாறுதான் கூறுகிறது.

காற்று பிச்சைக்காரனிடம் நெருங்க அஞ்சுவதேன்? அவன் தன்னிடமும் ஏதாவது பிச்சை கேட்டுவிடுவானோ என்ற பயம்தான் அதற்குக் காரணம்.

பிச்சைக்காரனை, இதனைவிட இழிவாக எப்படிச் சொல்ல முடியும்! துரும்பைவிடக் கேவலமான பொருள்

உலகில் இல்லை. அந்தத் துரும்பையும்விட இழிவான வன் இரப்போன். துரும்பையாவது காற்று தூக்கிச் செல்லும். அதன் விளைவாக அது சிறிது நேரம் வானத்தில் பறக்க முடியும். அந்த நற்பேறுகூடப் பிச்சைக்காரனுக்குக் கிடையாது. ஆம்! இரப்போன் நிலை அத்துணை இழிவு!

சமூகத்தில் பிச்சைக்காரர்கள்

பிச்சைக்காரர்களை மாலையிட்டு வரவேற்பவர்கள் எவரும் இல்லை. குறிப்பிட்ட சில விரத நாட்களில் சாப்பாடு போடுவதற்காக யாராவது ஆண்டி, பரதேசியைப் பாட்டிமார்கள் தேடுவது உண்டு. அது தவிரப் பிச்சைக்காரர்களைக் கண்டால் கதவை அடைப்ப வர்களும் மூடுபவர்களும் மிகுதி. பஸ்மேடைகளில், பஸ் நிற்குமிடங்களில், ரயிலடியில், கோவில்களில் நாம் பிச்சைக்காரர்களைப் பார்க்கிறோம். உள்ளம் கனிந்து ஆளுக்கு ஐந்து காசு போடுகிறவர்கள் மிக மிகக் குறைவு. அத்தகைய வள்ளல்கள் மிகமிகச் சிலரே ஆவர். மற்றவர்கள் எல்லாரும் பிச்சைக்காரர் களைப் பார்த்தால் விரைவாக நடப்பார்கள்; அவர் களின் தொல்லையிலிருந்து தப்பவே முயல்வார்கள். பிச்சைக்காரர்களைக் கண்டு நாம் ஏன் ஒதுங்குகிறோம்? நம்மிடமும் அவர்கள் கைந்நீட்டுவார்களே என்று பயந்துதான் நாம் விலகியோடுகிறோம்.

சமுதாயம் பிச்சைக்காரர்களை வெறுக்கிறது. அவர்கள் தங்கள் கண்ணில் படுவதையும் மக்கள் விரும்புவதில்லை. பிச்சைக்காரர்களைக் காணும்போது நம் உள்ளத்தில் ஏதோ 'அருவருப்பு' ஏற்படுகிறது. ஆக நாம் பிச்சைக்காரர்களை வெறுக்கிறோம்; ஒதுக்கு கிறோம். மக்களின் இந்த இயல்பைக் காற்றுக்கும் ஏற்றிவிட்டார் நீதிவெண்பா ஆசிரியர்!

இப்பாட்டு மிக நயமான கருத்துக்களை உள்ளடக்கியது. சிந்திக்குந்தோறும் புதிய புதிய கருத்துக்களைத் தோற்றுவிப்பது.

கற்பனைக் காரணம்

பிச்சைக்காரனை இழிவானவன், மட்டமானவன் என்று சொல்லவேண்டும். துரும்பைவிட மோசமானவன் என்று அவன் இழிவை, எளிமையை, ஏழ்மையைச் சொன்னார். ஆனால் துரும்பைக் காற்று தூக்கிச் சென்றுவிடும். பிச்சைக்காரன் எப்படியும் மனிதன் தானே! அவனைத் தூசி, துரும்பு போலக் காற்று எப்படித் தூக்கிச் செல்ல முடியும்? முடியாது! பிச்சைக்காரர்களைக் காற்று தூக்கிச் செல்ல முடியாது என்பது நாம் காணுகின்ற உண்மை. துரும்பைவிடக் கேவலமானவன் பிச்சைக்காரன் என்று முன் சொன்ன கருத்துக்கு இந்த உண்மை 'இடையூறாக' நிற்கிறதல்லவா? இந்தத் தடையை வெல்வதிலும் ஆசிரியர் தன் மூலக் கருத்தை நிலைநிறுத்தி விடுகிறார். பிச்சைக்காரன் தன்னிடமும் ஏதாவது யாசகம் கேட்பான் என்று அஞ்சியே காற்று அவனிடம் நெருங்கவில்லையாம்! காற்று பிச்சைக்காரனைத் தூக்கிப் போகாமல் இருப்பதற்கு ஆசிரியர் கூறுகின்ற கற்பனைக் காரணம் இது! இந்தக் காரணத்தின் மூலமும் இரப்போன் இழிந்தவன் என்பதை அவர் புலப்படுத்திவிடுகிறார். தூசிக்கும் துரும்புக்குமாவது காற்றால் சுமந்து செல்லப்படுகின்ற நல்வாய்ப்பு கிட்டுகிறது. அந்த நல்வாய்ப்பும் பிச்சைக்காரனுக்குக் கிட்டுவதில்லை என்னும் கருத்தை உய்த்துணரவைத்துப் பிச்சைக்காரனைத் தாழ்வுபடுத்துகிறது நீதிவெண்பா.

'இரவச்சம்' என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் 'ஏற்பது இழிவு' என்னும் உண்மையை ஆணித்தரமாக

வலியுறுத்துகிருர். கேட்டதையெல்லாம் கொடுப் பார்கள்; வைத்துக்கொண்டு இல்லையென்று சொல்ல மாட்டார்கள்; கேட்டதை மனமுவந்து தருவார்கள். அத்தகைய கண் போன்ற உயரிய அன்புடையவர் களிடத்தும் வாய் திறந்து இரவாமல் இருப்பது கோடி பெறும் என்கிறது குறள்.

கரவாது உவந்தீயும் கண்ணன்னுர் கண்ணும்
இரவாமை கோடி உறும். [1061]

மற்ருெரு குறள், நீதிவெண்பாக்கருத்துக்கு அரண் செய்கிறது. இரப்பவன் தயங்கித் தயங்கித்தான் பிறரிடம் ஒன்றைக் கேட்பான். அவ்வாறு அவன் தன் விருப்பத்தைப் பிறரிடம் சொல்லியவுடனேயே அவ னுக்கு உயிர்போன மாதிரிதான் என்பது குறளின் கருத்து. பிச்சைக்குக் கைந்நீட்டுகிறவர்கள் நடமாடும் பிணங்கள்! அவர்கள் செத்தவர்களுக்குச் சமம்! வாய் திறந்து மானம் துறந்து கைந்நீட்டியவுடனேயே அவர் களை விட்டு உயிர் ஓடிப்போய் விடுகிறதாம். ‘இரப்பவர் சொல்லாடப்போஒம் உயிர்’ என்கிருர் வள்ளுவர். அந்தச் செத்த பிணத்தைத் துரும்பினும் கேவலமான தென்று சொல்வதில் தவறென்ன? பிணத்திடம் எவர் நெருங்குவர்? காற்றும் அதனுல்தான் நெருங்க அஞ்சு கிறது போலும்!

இரப்பது இழிவு, ஏற்பது இகழ்ச்சி என்பது நூற்றுக்கு நூறு உண்மை. இரப்பவன் இழிந்தவன். துரும்பையும் தூசியையும்விடக் கேவலமானவன் அவன். துரும்பு தூசியையாவது காற்று தூக்கிச் செல்லும். அந்த நற்பேறும் பிச்சைக்காரனுக்குக் கிட்டுவதில்லை.

காற்றும் அவனை அணுக அஞ்சும். பிச்சைக்காரன் அத்துணைக் கேவலமானவன்.

5

நிலையில் தாழ்ந்தால் வாழ்வு பாழ்!

தலை அலங்காரம்

நம்முடைய தலைமுடி, நகம், பல் ஆகிய மூன்றையும் பற்றி இக் கட்டுரையில் தெரிந்துகொள்வோம். தலைமுடியைக் குறிக்கத் தலைமயிர், கூந்தல், சிகை என்று எத்தனையோ சொற்கள் தமிழில் இருக்கின்றன. சிறு பிள்ளை முதல் வயதான தாத்தாவரை அனைவருக்கும் தலைமுடியில் கவனம். தலை வாரிக்கொள்ளவேண்டும், எப்போதும் தலை கலையாமல் இருக்கவேண்டும் என்பதில் எல்லோருக்குமே அக்கறை. இதற்கு மாறாக ஒன்றிரண்டு அபூர்வப் பிறவிகள் இருக்கலாம். மாந்தரின் பொது இயல்புக்கும் அவர்களுக்கும் தொடர்பில்லை. ஆகவே அவர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

சிகை அலங்காரமும் கூந்தல் அலங்காரமும் இப்போது பெரிய கலையாக வளர்ந்துவிட்டன. ஒரு காலத்தில் மக்கள் எல்லோருமே முனிவர்கள் போலச் சடையும் தாடியும் வளர்த்தார்கள்—அல்லது மொட்டையடித்துக் கொண்டார்கள். நாகரிகம் மக்களிடையே பரவுந்தோறும் சிகையலங்காரமும் வளர்ந்தது. ஆண்களில் 'கிராப்' வைக்காதவர்களை இப்போது பார்ப்பது அரிது. 'கிராப்பில்' தான் எத்தனை வகை!

அமெரிக்கன் கிராப், ஹிட்லர் கிராப், முசோலினி கிராப்! இன்னும் என்னென்னவோ புதுவகையான முடி வெட்டுகள்! இவற்றைச் செய்து முடிக்கத்தான் எத்தனை கடைகள்!

ஆண்கள் மட்டுமன்றிப் பெண்களும் தங்கள் கூந்தலைப் பொன்போலப் போற்றுகிறார்கள். பெண்களுக்குத் தலை சிங்காரிக்கும் கடைகளும் இப்போது பெருகி விட்டன. மலாயாவிலும் சிங்கப்பூரிலும் சிகையலங்காரக் கடைகள் ஏராளம். பட்டணங்களில் தெருவுக்கு நான்கு ஐந்து இருக்கும். சிற்றூர்களிலும் இக் கடைகளைப் பார்க்கமுடியும். சிகையலங்காரம் பல்லாயிரக் கணக்கான மக்களுக்குப் பிழைப்பளிக்கும் பெரிய தொழிலாக வளர்ந்துவிட்டது.

சீப்பும் கண்ணாடியும்

மனிதர்கள் தங்கள் சிகை அழகாக இருக்கவேண்டுமென்பதில் பெருங்கவனம் காட்டுகிறார்கள். நவநாகரிக இளைஞர்களிடமும் நங்கையர்களிடமும் கையில்—அதாவது கையிலுள்ள பையில்—எப்போதும் சீப்பும் கண்ணாடியும் இருக்கும். ஒரு நாளைக்கு எத்தனை தடவைதான் சீவுவது! தமிழ்ப் பெண்களின் கூந்தல் அலங்காரம் பெயர்பெற்றது. அவர்கள் கொண்டை முடிப்பதும், சடை பின்னுவதும், பூ முடிப்பதும் பெரிய கலை. இந்த அழகுக் கலையைப் பற்றி எவ்வளவோ சொல்லலாம். மலாயாவில் சிறுமிகளுக்குக் குதிரை வால், பன்றி வால் என்று இருவிதமான கொண்டை போடுகிறார்கள். சடைகளில் எத்தனையோ வகை உண்டு. இரட்டைச் சடை கல்லூரி மாணவிகளுக்கு மிகப் பிடித்தம்—அந்தச் சடையில் ஒன்று முன்புறமாகத் தெங்கிக்கொண்டிருக்கும். சடை பின்னுவ

தென்பது எளிதன்று. அதற்குப் பொறுமை வேண்டும்; இதில் கைதேர்ந்தவர்களுக்குப் பெரிய கிராக்கி இருக்கும்.

தலைமயிரைக் குதிரை வால்போல ரப்பர் வளையத்தால் முடிந்துகொள்வது மிக எளிது. இந்தக் கொண்டைதான் புதிய நாகரிகம். ஆனால் கருநாகம் போலச் சடை பின்னி, சிவந்திப் பூவை வரிசையாக வைத்தால், பார்த்துக்கொண்டே இருக்கலாம். தமிழ்ப் புலவர்கள் பெண்களின் கூந்தல் அழகைப் பற்றி அருமையான கவிதைகளை இயற்றியிருக்கிறார்கள். பெண்களின் கூந்தலுக்கு அவர்கள் சொல்லும் உவமைகளை ஒரு பெரிய பட்டியல் போடலாம். பழங்காலத்திலேயே அத்தனைப் பாராட்டு இருந்திருக்கிறது.

தலைமயிரைப் போற்றப் படும் பாடு

தலைமயிருக்குத் தேய்க்கிற தைலங்கள், எண்ணெய்களில் எத்தனை வகைகள்! தலைமயிர் கொட்டக் கூடாது; கறுப்பாக, அடர்த்தியாக இருக்கவேண்டும். சிலருக்குத் தலை இளமையிலேயே வெண்பஞ்சுபோல நரைத்துவிடும். அவர்கள் மனம் என்ன பாடுபடும் தெரியுமா? நரையை மறைக்கத் தலைமயிருக்கு அவர்கள் சாயம் பூசுவார்கள். நரைமயிர் 'கறுக்கும்' தைலங்களை வாங்கிக் கொள்ளைகொள்ளையாக ஊற்றுவார்கள். என்ன செய்தாலும் நரைத்த தலைமயிரைக் கறுக்க வைக்க முடியுமா? இதுபோலத்தான் வழுக்கை விழுந்த தலையும். சிறுபிள்ளைகளுக்குக்கூட வழுக்கை விழுந்துவிடுகிறது. சுற்றி அடர்த்தியான மயிர்—நடுவில் பாலைவனம்போல வழுக்கைப் பிரதேசம். வழுக்கை விழுந்துவிட்டவர்கள் ஏதோ பெரிய பாவம் செய்துவிட்டவர்கள்போல அவமானப்படுவார்கள்.

நான்குபேர் முன்னிலையில் நடமாடக் கூசுவார்கள். தங்களை மற்றவர்களைவிடக் குறைவாக நினைத்துக் கொள்வார்கள். வழுக்கைத் தலையில் முடி முளைக்க வைப்பதாக உறுதி கூறும் தைலங்களை வாங்கி 'அபிஷேகம்' செய்துகொள்வார்கள். பாலைவனத்தைக்கூடப் பசுஞ் சோலையாக்கிவிட முடியும். ஆனால் வழுக்கை விழுந்த இடத்தில் முடி முளைக்க வைப்பது குதிரைக்கொம்பு.

கீழே விழுந்துவிட்டால்

மனிதன் தலைமயிருக்கு எத்துணை மதிப்பு வைத்திருக்கிறான் என்பது இதுவரை கூறிய செய்திகளால் நன்கு புலனாகும். ஆனால் அதே தலைமயிர் தலையிலிருந்து கீழே விழுந்துவிட்டால், அதன் நிலை என்ன? அதற்குச் சல்லிக் காசுகூட மதிப்பு இல்லை. மழை மேகமென்று புலவர்களினால் புகழப்படும் கூந்தல் கீழே விழுந்துவிட்டால் கேவலமானதாகிவிடுகிறது. அது மட்டுமா? கீழே விழுந்த முடியைச் சிறிது நேரம்கூட வீட்டில் இருக்க விடமாட்டோம். உடனே அது குப்பைத் தொட்டிக்குப் போகவேண்டும். கீழே விழுந்துவிடும் தலைமயிரும் நம் சிகையிலிருந்து வெட்டப்படும் சிகையும் மிக மிக இழிவான பொருள்களாக மதிக்கப்படுகின்றன. தப்பித் தவறி ஒரு முடி சில சமயங்களில் நம் சாப்பாட்டில் கிடந்துவிடும். அப்போது நாம் எவ்வளவு அருவருப்படைகிறோம்! தலையில் இருக்கும் வரையில்தான் அதற்குப் பெருமை, மதிப்பு எல்லாம். கீழே விழுந்துவிட்டால் அது கேவலமான பொருளாகிவிடுகிறது. குப்பையில் வாரிக் கொட்ட வேண்டிய பொருளாகிவிடுகிறது.

நகம், பல் இவற்றின் நிலையும் இதுதான். விரலில் இருக்கும் வரையில்தான் நகத்திற்குச் சிறப்பு. பல்

லுக்கு வாயில் இருக்கும் வரையில் தான் மதிப்பு. பிறகு அவற்றை யாரும் தீண்டமாட்டார்கள்.

மானமுடையாரின் மதிப்பு

மானமுடைய பெரியவர்களின் நிலையும் தலைமயிர் பல், நகம், ஆகியவற்றின் நிலையை ஒத்ததுதான். அவர்கள் தம் நிலையில் தாழ்ந்து விட்டால் அவர்களின் பெருமையெல்லாம் பாழாகிவிடும். இந்த உண்மையை நீதிவெண்பா அருமையாக எடுத்துரைக்கிறது.

தலைமயிரும் கூருகிரும் வெண்பல்லும் தத்தம்
நிலையுடைய மானவரு நிற்கும்—நிலைதவருத்
தானத்திற் பூச்சியமே சாரும் நிலைதவறும்
தானத்திற் பூச்சியமோ தான். [28]

'நிலையிற் பிரியேல்' என்னும் ஆத்திசூடிக் கருத்தை வலியுறுத்துவதுதான் இப் பாட்டு. உயிரினும் மானம் பெரிது என்று படித்திருக்கிறோம்.

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை [964]

என்னும் குறளுக்கு விரிவுரை போல நீதிவெண்பாப் பாட்டு அமைந்திருக்கிறது.

நிலையில் தாழ்ந்துவிட்டால் மனிதர்கள் தலையிலிருந்து கொட்டிப்போன தலைமயிருக்குச் சமமானவர்—அவர்கள் நிலை அவ்வளவு தாழ்ந்துவிடும். கீழே விழுந்துவிட்ட தலைமுடியை எவரும் மதிப்பதில்லை. அதுபோல நிலையில் வழுவிவிட்ட மாந்தரையும் எவரும் போற்றுவதில்லை.

தம் நிலைக்குப் பொருந்தாத தாழ்ந்த செயல்களைச் செய்கின்றவர்கள், மலையத்துணைப் பெரியவர்களாயி

னும் நிலை குலைந்து கடுகாகச் சிறுமை எய்திவிடுவர் என்று கூறுகிறது குறள். 'கவரிமான் தன் மயிர் நீங்கினுல் உயிர் வாழாது; பெரியோர் தம் மானத் திற்கு ஊறு வந்தால் உயிரைத் துறந்து மானத்தைக் காப்பர்'. இவ்வாறு மானத்தின் சிறப்பை வள்ளுவர் ஆணித்தரமாக எழுதி வைத்திருக்கிருர்.

தலைமயிரைப் பற்றி நிறையத் தெரிந்துகொண் டோம். அதுபோல நகம், பல் இரண்டையும் பற்றி ஓரளவு தெரிந்துகொள்வது அவசியமல்லவா?

நகமும் பல்லும்

நம் கையிலும் காலிலும் நகம் வளர்கிறது. நகம் அதிகமாக வளர்ந்துவிட்டால் அழுக்குச் சேர்ந்துவிடும். ஆகவே, வாரத்திற்கு ஒரு முறை குழந்தைகள் நகம் வெட்டிக் கொள்ளவேண்டும். பள்ளிகளில் பிள்ளைகள் ஒழுங்காக நகம் வெட்டிக்கொண்டு வருகிருர்களா என்று பார்க்கிருர்கள். தூய்மை விதிகளில் நகம் வெட்டிக்கொள்வதும் ஒன்று. ஆனுல், நகத்தை அழ குறப் பேணுவதில் ஆண்களைவிடப் பெண்களே மிகுந்த அக்கறை செலுத்துகின்றனர். நகங்களில் மருதோணிச் சாயம் பூசுவது பழைய பழக்கம். இப்போது நகத்தில் பூசுவதற்கும் கடையில் சாயம் விற்கிறது. நகத்தை அழகாக வளர்த்து அதற்குக் கருத்தாகச் சாயம் பூசிக் கொள்ளும் கலை உலகெங்கும் இப்போது நங்கையர் களிடம் பரவிவிட்டது. சாமியார்கள் சிலர் நகம் வளர்ப் பார்கள்—தாடி வளர்ப்பது போல. அது முழு நீளம் வளர்ந்திருப்பது வேடிக்கையாக இருக்கும். நகத்தை வெட்டிவிட்டால், அது கீழே கிடக்கக்கூடாது. தலை மயிரைப் போன்றே அதுவும் கேவலமானதாகக் கருதப்படும். நகம் குத்திவிட்டால் நஞ்சென்றும்

கருதப்படுகிறது. ஆகவே, நகத்தை வீட்டில் போட யாரும் அனுமதிப்பதில்லை. விரலில் இருக்கும் வரையில்தான் நகத்திற்குச் சாயப்பூச்சு, சிங்காரம் எல்லாம். கீழே விழுந்துவிட்டால் அது குப்பை!

பல்லின் நிலையும் தலைமுடி, நகம்போன்றதுதான். சிறுபிள்ளைகளுக்கு 'அரிசிப் பல்' என்பார்கள். பல் முளைப்பதும் விழுவதும் குழந்தைகளுக்குப் பெரிய வேடிக்கை. தங்கள் குழந்தைகளுக்குப் பல் போட்டு விட்டால், தாய் தந்தையருக்குப் பெரிய கொண்டாட்டம். தங்கள் விரலைக் கொடுப்பார்கள். புதுப் பல்லால் குழந்தை கடிக்கும். பல் மனிதர்களுக்கு இன்றியமையாதது. வாய் நிறைய முத்து வரிசை போலப் பற்கள் இருப்பது பார்க்க அழகாக இருக்கும். பல்லை வெண்மையாக வைத்துக்கொள்ள நாள் தோறும் மனிதன் பல நிமிஷங்கள் செலவிடுகிறான். பல்லுக்கு ஆல், வேல் குச்சி போட்டுத் துலக்குவது அந்தக் காலம். இந்தக் காலத்தில் கடைகளில் வகை வகையான பிரஷ்கள் விற்கின்றன. பற்பசையும் விதம் விதமாக உண்டு. பல்லைத் தூய்மையாக வைத்துக் கொள்ளாவிடடால் கறை படிந்து பார்க்கவே அருவருப்பாக இருக்கும். ஆகவே பல் விளக்குவது காலையில் முதற்கடமையாகக் கருதப்படுகிறது. ஒரு பல் விழுந்து விட்டால் அதற்கு மாற்றுப் பல் கட்டவும் மனிதன் தயங்குவதில்லை. பல் கட்டும் வைத்தியர்கள் மலாயாவில் ஏராளம். வீதிக்கு வீதி பல் மருத்துவர்களைக் காணலாம். தங்கப் பல் கட்டிக்கொள்வது மலாயாவில் பெருமையாகக் கருதப்படுகிறது. முன்பெல்லாம் மலாயாவிற்கு வந்துபோகிறவர்கள் பெரும்பாலும் தங்கப் பல் கட்டாமல் போவதில்லையாம்.

பல்லுக்கு இத்துணைச் சிறப்பு. ஆனால் கீழே விழுந்துவிட்டால் பல் மிகக் கேவலமானதாகிவிடுகிறது. பல்லை எடுத்துக்கொண்டுபோய்ப் புதைத்துவிடுவார்கள். தெருவில் போட்டு யார் காலிலும் குத்திவிட்டால் நஞ்சென்று கருதியே பல்லைப் புதைத்துவிடுவார்கள். வாயில் இருக்கும் வரையில்தான் அரிசிப் பல், முத்துப் பல், முல்லைப் பல் என்பதெல்லாம். கீழே விழுந்து விட்டால் அது மதிப்பற்றுச் செத்த பிணம் போலப் புதைக்கப்படுகிறது.

மாந்தர் தம் நிலையிலிருந்து தாழ்தல் கூடாது

மானமுள்ளவர்கள் தங்களின் நிலையிலிருந்து தாழ்ந்து விடக்கூடாது. அவ்வாறு தாழ்ந்துவிட்டால் அவர்களின் நிலை கீழே விழுந்த தலைமுடி, பல், நகம் ஆகியவை போன்று இழிந்ததாகிவிடும்.

தலையில் இருக்கும் வரையில்தான் முடிக்குச் சிறப்பு! வாயில் இருக்கும் வரையில்தான் பல்லுக்கு உயர்வு! கையில் இருக்கும் வரையில்தான் நகத்திற்கு மதிப்பு! உயரிய நிலையில் இருக்கும் வரையில்தான் மானமுடையவருக்குப் பெருமை! நீதிவெண்பா உரைக்கும் உண்மை இதுதான்.

6

நிறைகுடம் என்றும் தளும்பாது

பாத்திர வகைகள்

அரைகுறைப் படிப்பாளிகளின் அடக்கமற்ற ஆரவாரப் போக்கை நீதிவெண்பா நெஞ்சில் உறைக்கும் படியாகக் கண்டிக்கிறது. 'நிறைகுடம் தளும்பாது' என்னும் பழமொழியின் விரிவுரையே இங்கே நாம் காணுகிற பாட்டு.

சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர் ஆன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே—வெற்றிபெறும்
வெண்கலத்தின் ஓசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தின் உண்டோ ஒலி? [35]

வெண்கலப் பாத்திரங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். வீட்டில் சமையலுக்கும் சமைத்த பண்டங்களை வைப்பதற்கும் வெண்கலப் பாத்திரங்களைப் பயன்படுத்துகிறோம். மண் பாண்டங்களை மிகுதியாகப் பயன்படுத்திய காலம் ஒன்றுண்டு. மண்பானையில்தான் சோறு வடிப்பார்கள். மண்சட்டியில்தான் குழம்பு வைப்பார்கள். 'மண்பானைச் சமையல்' என்று பெருமையாக வெளியே அறிவிப்புப் பலகை போட்டிருக்கும் சாப்பாட்டுக் கடைகளை இப்போதும் தமிழ்நாட்டில் காணலாம். வெண்கலம், அலுமினியம் முதலிய

பாத்திரங்களில் சமைப்பதைவிட மண்பானையில் சமைத்துச் சாப்பிடுவது உடம்புக்கு நன்மை என்று கருதப்படுகிறது. பானைச் சமையலிலும் ‘பெரும் பானைச் சமையல்’ அத்துணை நல்லதன்று. சிறுபானை யில்—அதாவது கலயத்தில் சோறு வடிப்பதே மிகவும் சிறந்த பக்குவம்.

தமிழர்கள் மாக்கல் பாத்திரங்களையும் பழங்காலத் தில் புழங்கினர். என் கொள்ளுப்பாட்டி வீட்டில் எல்லாம் மாக்கல் சட்டியில்தான். குழம்பு, கறி, மோர் அனைத்தும் மாக்கல் சட்டிகளில்தான் வைத்திருப் பார்கள். மாக்கல் சட்டியில் குழம்பு வைத்துக் கொள்ளுப்பாட்டி எனக்கு ஊற்றியது இன்னும் நினைவிருக்கிறது. மண்பாண்டங்களைப்போல, மாக்கல் சட்டிகளும் உடல்நலத்திற்கு ஏற்றவை.

இப்பொழுது—அதுவும் மலாயாவில், மாக்கல் சட்டிகளையோ, மண்பாண்டங்களையோ வீடுகளில் காண்பதரிது. குடிப்பதற்குத் தண்ணீர் வைக்கும் பானையைக்கூடப் பார்க்க முடிவதில்லை. இந்நிலையில் மண்பாண்டங்களில் சமையல் செய்வது எங்கே?

இப்போது சுவீடன் மங்குச் சாமான்கள் விதம் விதமாக வருகின்றன. மங்குச் சாமான்களில் சுவீடன் தயாரிப்புத்தான் மிகவும் உயர்வானது. ஜப்பான், ஹாங்காங் மங்குச் சாமான்களும் கடைகளில் நிறைய உண்டு. அவை விலையில் மலிவு. மங்குச் சாமான் தவிர, பித்தளை, செம்பு, முறிப் பாத்திரங்களும் உண்டு. பித்தளைப் பாத்திரங்களையே மக்கள் மிகுதி யாகப் பயன்படுத்துகிறார்கள். வெண்கலப் பாத்திரம் என்பதும் பித்தளைப் பாத்திரம் என்பதும் ஒன்றுதான். பெருஞ்செல்வர் வீடுகளில் வெள்ளி, தங்கப் பாண்டங்

களைப் புழங்குவார்கள்—பெரும்பாலும் பணக்காரர்கள் வீடுகளில்கூட வெள்ளிப் பாத்திரங்கள் எப்போதும் வெளியில் நடமாடமாட்டா. ஏதாவது திருமணம், புதுமை என்றால்தான் அவை புழக்கத்திற்கு வரும். தங்கத்தில் வைத்திருப்பவர்கள் புழங்குவதில்லை—அழகு பார்ப்பார்கள்—பூரிப்பார்கள். அவ்வளவுதான்.

வெள்ளிபோல் ஆளை ஏமாற்றும் 'எவர் சில்வர்' பாத்திரங்களின் படையெடுப்பும் தமிழர் வீடுகளில் பெருகி வருகிறது. இந்தப் பாத்திரங்கள் கண்ணாடி போலத் தூய்மையாக இருக்கும்; ஆனால் உடைவதில்லை. பார்ப்பதற்கும் கவர்ச்சியாக இருக்கும். அதனால் நடுத்தரக் குடும்பங்களில் இந்த 'எவர் சில்வர்' சாமான்களை நிறையக் காணலாம்.

பாத்திரங்களில் இன்னும் எத்தனையோ வகை உண்டு. அலுமினியப் பாத்திரம் ஒருவகை. இரும்புச் சட்டிகளையும் நாம் சமையலில் பயன்படுத்துகிறோம். தம்பி தங்கைகள் சாப்பாட்டில் மட்டும் கண்ணுயிராமல், வீட்டில் ஒருமுறை கண்ணோட்டமிட்டுப் பாத்திரங்களின் வகைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். அம்மாவைக் கேட்டால் ஒவ்வொரு பாத்திரத்தின் 'நயம் பயம்' தெரிந்துவிடும். தங்கைகளுக்கு மட்டுமன்றித் தம்பிகளுக்கும் இந்த ஆராய்ச்சி தேவை.

யானை புகுந்தாற் போல

நீதிவெண்பா ஒப்பிட்டுப் பேசுகிறது வெண்கலப் பாத்திரங்களையும் தங்கப் பாத்திரங்களையும். 'வெண்கலக் கடைக்குள் யானை புகுந்தாற்போல' என்று சொல்வார்கள். பெரும் இரைச்சலைக் குறிப்பதற்கு இவ்வாறு சொல்வதுண்டு. பெருஞ்சத்தம் போட்டுப்

பேசுகிறவர்களை 'உனக்கு வெண்கலத் தொண்டையா?' என்று கேட்போம். 'வெண்கலக் குரலோன்' என்பது நல்ல கனமான தொண்டையுள்ளவர்களுக்குத் தரப் படும் சிறப்புப் பெயராகும். வெண்கலப் பாத்திரங்கள் ஒன்றோடொன்று மோதினுல் பெரும் ஓசை உண்டாகும். வீட்டிலேயே பொருள்களை அடுக்கி வைக்கும்போதும் எடுக்கும்போதும் இந்தச் சத்தத்தைக் கேட்கலாம். வெண்கலப் பாத்திரக்கடையில் அந்தச் சத்தம் இன்னும் மிகுதியாக இருப்பதில் வியப்பில்லை. அங்கு யானை புகுந்துவிட்டால் வேறு வினை வேண்டியதில்லை. ஒரே 'அல்லோலகல்லோலம்' தான். ஆகவே வெண்கலம் என்பதே ஓசை மிக்கது என்று தெரிந்து கொண் டோம்.

தங்கப் பாத்திரம்

பொன்னுல் செய்த பாத்திரங்களின் இயல்பு இதற்கு நேர்மாறு. வெண்கலத்தைச் 'சத்தம்' என்ருல் தங்கத்தை 'அமைதி' எனலாம். பொன்பாண்டங்கள் எத்தனை இருந்தாலும் சரி, அவற்றினுல் சத்தம் ஏற் படாது. தங்கச் சாமான்கள் ஒன்றோடொன்று மோதி னுலும் ஓசை ஏற்படுவதில்லை.

வெண்கலத்தின் இயல்பு ஓசையிடுவது. தங்கத்தின் இயல்பு அமைதியாக இருப்பது. 'பொன்கலம் ஒலிக் காது—வெண்கலம் ஒலிக்கும்' என்னும் பழமொழி இந்த உண்மையை அறிவுறுத்துவதாகும்.

தங்கத்தில் சமையல் பாத்திரங்கள் வைப்பது பெரிய குபேரர்கள் வீட்டிலேயே நடக்கக்கூடிய காரியம். மன்னர்களின் அரண்மனைகளில் தங்கப் பாத்திரங்களைக் காண முடியும். எலிஸபெத் அரசியார் பாரசீக மன்னருக்கு அளித்த விருந்தில் முற்றிலும்

தங்கப் பாத்திரங்களாலேயே புழங்கினார்களாம். அந்த விருந்துக்கு அது ஒரு சிறப்பான அம்சமாகும். தங்கத்தில் நகைகள் செய்வதுதான் எல்லா மக்களிடமும் காணக்கூடிய பொதுப் பழக்கம். பொதுவாகச் சிறிது வசதி படைத்தவர்கள்கூட தங்க மோதிரம், தங்கச் சங்கிலி, தங்கக் காப்பு அணிந்திருப்பர். தங்கத்தைக் கையாளுகிறவர்களுக்கு அதன் 'அமைதி'ப் பண்பு நன்கு புரியும். தக்க நகைகள், தங்கப் பாத்திரங்களைப் பொறுத்தவரை எந்தவிதமான ஓசையையும் நாம் கேட்க முடியாது.

அரைகுறைப் படிப்பும் ஆழ்ந்த படிப்பும்

வெண்கலத்தின் ஓசையிடும் இயல்பையும் தங்கத்தின் அமைதிப் பண்பையும் முறையே அரைகுறைப் படிப்பாளிகளிடமும் நிறைவான அறிவாளிகளிடமும் காணலாம். சரிவரப் படியாத புல்லறிவாளர்கள், எப்போதும் எதையாவது சலசலவென்று பேசிக் கொண்டு இருப்பர்; தங்களுக்கு நிறையத் தெரிந்ததாக ம்ற்றவர்கள் கருதவேண்டும் என்பதற்காக, அவர்கள் எதையாவது 'கதைத்து'க்கொண்டிருப்பார்கள். அவர்கள் பேச்சில் ஏதும் பொருள் இராது; வெறும் சலசலப்பு.

நன்கு படித்துத் தெளிந்தவர்கள் நிறைகுடம் போல மௌனிகளாகத் திகழ்வர். 'மோனமென்பது ஞானவரம்'பல்லவா? தேவையின்றி அவர்கள் ஒரு சொல்லும் பேசமாட்டார்கள். வீண்பேச்சு, வெட்டிப் பேச்சு, பொருளற்ற பேச்சு ஆகியவற்றை அவர்களிடம் காணமுடியாது. தங்கத்தின் இயல்பை அவர்களிடம் பார்க்கலாம். அவர்கள் தங்கமானவர்கள், தங்கம் போன்றவர்கள்.

சிற்றுணர்வோர் என்போர் அரைகுறைப் படிப்பாளிகள். மூதுரையில் புல்லறிவாளர்களின் சிறுமை பற்றி நாம் படித்திருக்கிறோம். அவர்கள் எதையும் கருத்தூன்றிப் படிக்கமாட்டார்கள். ஏதோ அங்கொன்றும் இங்கொன்றும் தெரியும். 'காதில் விழுந்தது சில, கடன் வாங்கியது சில' என்னும் இரண்டுங்கெட்டான் நிலையிலுள்ள அவர்கள் தங்களைப் பெரிய மேதாவிகள் என்று பிறர் நினைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகத் தெரிந்தது, தெரியாதது எல்லாவற்றையும் அள்ளி விடுவார்கள். அவர்கள் வாய் ஓயாது. யாராவது இரண்டு பேர் கூடிவிட்டால் விரிவுரை நிகழ்த்தத் தொடங்கிவிடுவார்கள்—விரிவுரையா அது, வெற்றுரை! இன்னும் கடுமையாகச் சொல்ல வேண்டுமானால் உளறல். பொருளற்ற அவர்கள் பேச்சு ஒன்றும் தெரியாத அப்பாவிகளிடமே எடுபடும். முற்றுணர்ந்த அறிஞர்களோ, அவர்களின் 'சலசலப்பை'யும் அசட்டுத்தனத்தையும் அறிந்து கொண்டு உள்ளுக்குள்ளேயே சிரித்துக்கொள்வார்கள்.

மேம்புல் மேய்ச்சல்காரர்கள்

'புல்லறிவாண்மை' என்று ஒரு தனி அதிகாரம் ஒதுக்கி வள்ளுவர் இந்த மேம்புல் மேய்ச்சல்காரர்களைச் சாடுகிறார். போலிகளுக்கு அவர் சரியான சாட்டையடி கொடுக்கிறார். தங்களை அறிவாளிகள் என்று எண்ணிக்கொள்ளும் அகந்தைக்கு மறுபெயர்தான் புல்லறிவாண்மை என்கிறார் வள்ளுவர். அவர்கள் தாங்கள் படிக்காத நூல்களையும் படித்ததாகக் காட்ட முயன்று, தாங்கள் கற்ற நூல்களையும் பிறர் கற்றிலர் என்று கருதும்படியாக நடந்துகொள்வராம்.

மயிலைப் பார்த்து வான்கோழி தனக்கும்தான் சிறகிருக்கிறதே என்று கருதி நடனமாடத் தொடங்கியது. மயிலின் நடனம் எங்கே? வான்கோழியின் ஆட்டம் எங்கே! மயிலின் தோகை அழகுத் திரட்சி. வான்கோழிக்கோ பொல்லாச் சிறகு. அதனைக் காணவும் நாணுவர் எவரும். அதனை விரித்து வான்கோழி நடனமாடுகிறதென்றால் கலையுணர்வு உள்ளோர் கண்களை இறுகப் பொத்திக்கொண்டு ஓட்டம் பிடிப்பர்.

போலிப் படிப்பாளிகளின் நிலையும் இதுதான். அவர்கள் வெறும் பகட்டாலும் ஆரவாரங்களாலும் புகழைக் தேட முயல்வார்கள். உள்ளே சரக்கொன்றும் இருக்காது. அவர்கள் ஆட்டம் நீண்டநாளைக்கு ஓடாது. நன்கு படித்தவர்களிடம் அவர்கள் சிக்கிக்கொண்டு விட்டால் வந்தது ஆபத்து. சாயம் வெளுத்துவிடும். பிறகு செல்லாக் காசாகிவிடவேண்டியதுதான். வெண்கலம்போல அவர்கள் போட்ட சத்தமெல்லாம் அடங்கியொடுங்கிவிடும்.

முற்றுமுணர்ந்த மூதறிஞர்

முற்றுணர்ந்தோர் நிலை மிக உயர்ந்த நிலை. அவர்கள் வரன் முறையாகப் படித்தவர்கள். தக்க ஆசிரியர்களிடம் முறையாகப் பாடம் கேட்டிருப்பார்கள்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக [391]

என்னும் குறளுக்கு அவர்களை இலக்கியமாகச் சொல்லலாம். படிக்கவேண்டிய சிறந்த நூல்களை அவர்கள் பயின்றிருப்பார்கள். படித்த நூல்களில் அவர்களுக்கு

ஐயம் ஏதும் இராது. அவர்களையே நாம் ஆன்ருய்ந் தடங்கிய சான்ருேர் என்று போற்றுகிருேம்.

அத்தகைய சான்ருேரிடம் அடக்கம் இயல்பாகவே முகிழ்த்துவிடும். நல்ல கல்வி அடக்கத்தையே வளர்க் கும். அரைகுறைப் படிப்புத்தான் ஆணவத்தை உண் டாக்கும். சான்ருேர் வாய் திறந்து பேசுவது அரிது. அவர்களை நாடிச் சென்று யாரும் ஐயம் கேட்டால்தான் அவர்கள் வாய் திறந்து விடையளிப்பர். அந்த விடை யும் சுருக்கமானதாக, தெளிவானதாக இருக்கும். அது அவர்களின் சொந்தப் பெருமையைப் பறை சாற்றுவ தாக இராது. அமைதிக் குன்ருக விளங்குகின்ற அத் தகைய சான்ருேரை நீதிவெண்பா பொன்னுடன் ஒப் பிட்டுப் பேசுவதில் விந்தையில்லை.

எதிலும் நிறைந்த புலமை வேண்டும்

தம்பி தங்கைகள் இப் பாட்டின் மூலம் அறிந்து கொள்ளும் நீதி என்ன? அரைகுறை அறிவு கூடாது. ஆயிரக்கணக்கில், பதினுயிரக் கணக்கில் நூல்களைப் படிக்க முடியாவிட்டாலும், படித்த ஒரு சில நூல்களை யாவது ஐயமறக் கற்றிருக்கவேண்டும். 'கற்றது கைம் மண்ணளவு கல்லாதது உலகளவு' என்பதை நாம் என்றும் மறந்துவிடக் கூடாது. மேலும் மேலும் படித்து நம் அறியாமையை நீக்கிக்கொள்ள முயல வேண்டும். பிறருக்கு விளக்கம் உரைக்கும்போதும் பேசும்போதும் நாம் கசடறக் கற்ற நூல்களையே கையாள வேண்டும். திடீரென்று உச்சாணிக் கொம் புக்குத் தாவ முயலக்கூடாது. 'அகல உழுவதைக் காட் டிலும் ஆழ உழுவது மேல்' என்னும் பழமொழி படிப்புக்கும் பொருத்தமானது. ஏராளமான நூல்

களைப் படித்தோம் என்பதைவிடக் குறிப்பிட்ட சில நூல்களை ஐயமின்றிக் கற்ளேம் என்பது மேல்.

விலை குறைந்த வெண்கலம் ஓசையிடும். உயரிய தங்கமே அமைதியாக இருக்கும். அரைகுறைகள் எப்போதும் சலசலத்துக்கொண்டிருப்பர். நிறைவான அறிஞர்களே அடக்கமாயிருப்பர்.

7

பாத்திரமறிந்து பிச்சையிடு !
ஆளறிந்து நல்வரவு கூறு !

காக்கைக்கு இடம் தந்த அன்னத்தின் கதி

உங்களுக்கு ஒரு கதை சொல்லப் போகிறேன். ஒரு பெரிய மலை; யாரும் ஏறமுடியாத மலை. அந்த மலையின் உச்சியில் ஓர் அன்னப் பறவை கூண்டுகட்டி தன் இனத்தோடு வாழ்ந்து வந்தது. ஒருநாள் இரவு பலமான மழை இடைவிடாது பெய்துகொண்டிருந்தது. ஒரு காகம் அந்த மழையில் அகப்பட்டுக்கொண்டு நனைந்து போயிற்று. அந்தக் காகம் அன்னப் பறவையிடம் வந்து, தனக்கும் தங்க இடம் கேட்டது. உடம்பெல்லாம் நனைந்து ஈரத்தால் நடுங்கிக்கொண்டிருந்த காகத்தைப் பார்த்ததும், அன்னத்திற்கு இரக்கம் ஏற்பட்டுவிட்டது. தன்னோடு வசிக்கக் காக்கைக்கும் இடம் தந்தது.

காகம் அங்கு இட்ட எச்சத்தில் ஆலம் விதை ஒன்று முளைக்கத் தொடங்கியது. சில ஆண்டுகளில் அது பெரிய மரமாகிவிட்டது. பிறகு ஏராளமான விழுதுகளையும் விட்டது. அதுவரை அந்த மலையில் ஏற முடியாதிருந்த மக்களுக்கு விழுது விழுந்தது நல்ல வாய்ப்பாகப் போயிற்று. விழுதின் உதவியால் மக்கள்

மலைக்கு ஏறி வந்தார்கள். அங்கு அன்னத்தையும் அதன் குஞ்சுகளையும் பார்த்ததும் அவர்களுக்கு ஆசை பிறந்துவிட்டது. உடனே அவற்றைப் பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள்.

தீயவர்களுக்கு இரங்கினால் தீமையே

தீய காக்கைக்கு இரக்கப்பட்டு இடம் கொடுத்த தால், அன்னத்திற்கும் அதன் இனத்திற்கும் சுதந் தரமே பறிபோய்விட்டது. எத்தனையோ ஆண்டுகள் சுதந்தரமாக வாழ்ந்து வந்த அன்னம் ஒரு சிறு தவறு காரணமாகச் சிறைப்பட நேர்ந்தது. ஆகவே, கெட்ட வர்களுக்கு 'ஐயோ' என்று இரக்கப்படுவது ஆபத்து. இந்த நீதியையும் கதையையும் பின்வரும் நீதி வெண்பாப் பாட்டு உரைக்கிறது.

நன்றறியாத் தீயோர்க் கிடம்கொடுத்த நல்லோர்க்கும்
துன்று கிளைக்கும் துயர்சேரும்—குன்றிடத்திற்
பின்னிரவில் வந்தகரும் பிள்ளைக் கிடங்கொடுத்த
அன்னமுதற் பட்டதுபோ லாம். [74]

நல்லவர்களோடு சேரவேண்டும். தீயவர் இணக் கம் ஆகாது. தீயவர்களைக் கண்ணாலும் பார்க்கக்கூடாது. இத்தகைய நீதிகளை நாம் தொடர்ந்து படித்துவந்திருக் கிறோம்.

தீயவர் இணக்கம் ஆகாதென்னும் நீதியையே இப் பாட்டும் வலியுறுத்துகிறது. ஆனால், ஒரு புதுமையான கருத்தை இதில் காண்கின்றோம். இரக்கம் நல்ல இயல்பு; எல்லோரிடத்தும் இருக்கவேண்டிய நல்ல பண்பு அது. இரக்கம் இல்லாதவர்கள் மனிதர்களல்லர்; மண் பொம்மைகள். ஆகவே மனிதனுக்கு உயிர்நாடிபோல விளங்குவது இரக்கம். ஆனால் இந்த இரக்கத்தின் விளைவாக, அதனைக் காட்டுகிற நல்லவர்கள் துயரப்பட

வும் நேரிடலாம் என்பதை நான் முதலில் சொன்ன கதை நன்கு விளக்கும்.

பாத்திரமறிந்து பிச்சையிடு

இரக்கப்படுவது போலவே, உதவி புரிவதும், வருகின்றவர்களுக்கு இடம் தருவதும் நல்ல செயல்கள்; பாராட்டத் தக்கவை. ஆனால் பாத்திரமறிந்து 'பிச்சையிடு' என்றாற் போல பாத்திரமறிந்து உதவவேண்டும். கைந் நீட்டுகிறவர்களுக்கெல்லாம் உதவுவது தவறு. உதவி பெறுகிற ஆளுடைய தகுதி என்ன, அவருக்கு உதவி தேவையா, உதவியால் அவர் பயனடைவாரா என்பனவற்றையெல்லாம் நன்கு ஆராயவேண்டும்; அதன் பிறகே உதவ முற்படவேண்டும். அதுபோலவே வரவேற்பதிலும் வீட்டில் தங்க இடமளிப்பதிலும் மிகுந்த விழிப்பு தேவை. வருகிற ஆண்டி, பரதேசிக்கெல்லாம், திறந்த மடமாக வீட்டை விடுவது, பாராட்டுக்குரிய செயல் எனினும், சமயங்களில் அது பெரிய ஆபத்தில் வந்து முடியும். வீட்டில் தங்க இடமளிப்பதில் ஆளறிந்து, ஆளின் இயல்பறிந்து நடந்துகொள்வது மிக இன்றியமையாதது. வருமுன் காத்துக்கொள்கின்ற முன்னெச்சரிக்கை இதில் மிகத் தேவை.

தீயவர்களுக்கும் கெட்டவர்களுக்கும் உதவுவதும் தீது. தீயாரைக் காண்பதே தீது என்றால், அவர்களுக்கு மனமிரங்கி உதவுவதை எப்படி ஏற்கமுடியும்? தீயவர்களுக்கு உதவி புரிவது குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொண்ட கதையாகத்தான் முடியும். பிறருக்கு கொடுப்பதிலும் உதவுவதிலும் ஓர் இன்பம் இருக்கிறது. கொடுத்துப் பார்த்தவர்களுக்குத்தான் அந்த இன்பம் தெரியும். அந்த இன்பம் தீயாருக்கு உதவினால் கிட்டாது. அதற்கு மாறாகத் துன்பமே கிட்டும்.

காகத்திற்கு இரக்கப்பட்டு 'அன்னம்' அடைந்த கதியைக் கண்டோம்.

அடைக்கலம் கொடுப்பதில் ஆய்வு தேவை

தீயவர்களுக்கும் கயவர்களுச்கும் இடமளிப்பதால் எத்தனையோ தீங்குகள் நேரிடலாம். ஒரு நாட்டில் இன்னொரு நாட்டார்க்கு அடைக்கலம் தருவார்கள். ஒரு நாட்டில் விரட்டப்பட்ட தலைவர்கள் மற்றொரு நாட்டில் வந்து அடைக்கலம் புகுவார்கள். இப்பொழுது நாம் அடிக்கடி இந்த அடைக்கலச் செய்திகளைக் கேட்கிறோம். ரஷ்யத் தூதரக அதிகாரி அமெரிக்கத் தூதரகத்தில் அடைக்கலம் புகுந்தார். திபெத் தலைவர் தலைலாமா இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். என்றெல்லாம் செய்தித் தாள்களில் பார்க்கிறோம். இவ்வாறு அடைக்கலம் கொடுப்பதில், எத்தனையோ சிக்கல்கள் இருக்கின்றன. இதனால் பிற்பாடு நல்ல விளைவுகளும் ஏற்படலாம்; தீய விளைவுகளும் ஏற்படலாம். அதனால் எந்த அரசாங்கமும் நன்கு ஆலோசித்த பின்னரே எவருக்கும் அடைக்கலம் அளிக்க இணங்கும்.

இல்லாவிட்டால் காக்கைக்கு இடம் கொடுத்துக் கூண்டோடு சிறைப்பட்ட அன்னத்தின் கதிதான் அரசாங்கங்களுக்கு ஏற்படும். அரசாங்கத் தலைவர்கள் அடைக்கலம் அளிக்கும் நடவடிக்கைகளில் தவறான முடிவுகள் செய்துவிட்டால், அதனால் அந்த நாட்டு மக்கள் அனைவருமே அவதிப்பட நேரிடும், அன்னத்தைச் சார்ந்த குஞ்சுகளுக்கும் இன்னல் வந்தது போல.

தீயோரால் துன்பமே நேர்வது திண்ணம்

நல்லினத்தி னூங்கும் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல் [460

என்னும் குறள் தீயவரின் சேர்க்கை துயரத்தைத் தான் விளைவிக்கும் என்பதைத் திட்டவட்டமாக உரைக்கிறது. தீயவர் சேர்க்கையால் துன்பம் நேருமா நேராதா என்னும் ஐயப்பாட்டிற்கே இடமில்லை. துன்பம் நேர்வது திண்ணம். கெட்டவர் உறவு தொல்லை தருவதுபோல அந்த அளவு வேறு எதனுலும் தொல்லை நேராதென்றும் அறுதியிட்டுச் சொல்கிருர் வள்ளுவர். நீதி வெண்பாவில் தீயோருக்குத் தரப்பட்டிருக்கிற அடைமொழியைக் கவனிக்க வேண்டும். 'நன்றியறியாத் தீயோர்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. செய்கின்ற நன்மையை உணராத தீயவர்கள்! அதுமட்டுமா? நன்றியறிவில்லாதவர்கள்! பெறும் உதவிக்குக் கைம்மாறு செய்யமாட்டார்கள். இந்த அளவில்கூட நாம் அவர்களைப் பொறுத்துக்கொள்ளலாம். ஆனுல், அவர்கள் இயல்பு, நன்மைக்குத் தீமை செய்வது—நல்லது செய்தவர்களுக்குக் கேடு செய்வது. இத்தகைய கயவர்களுக்கு உதவுவதால் உதவுகின்ற நல்லவர்கள் மட்டுமன்றி, அவர்களைச் சார்ந்த உற்ருர் உறவினர்க்கும் தீங்கு விளையும். அன்னத்தின் கதை இந்த உண்மையைத்தான் நமக்குச் சுட்டுகிறது.

'இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குவான்' என்பார்கள். 'நரிக்கு இடம் கொடுத்தால் கிடைக்கு இரண்டு ஆடு பிடிக்கும்' என்னும் பழமொழி உண்டு. தீயவர்களுக்கு இடந்தந்தால், அவர்கள் இடமளித்தவர்களையே ஏப்பமிட்டு விழுங்கிவிடுவார்கள் என்னும் கருத்தையே இவை விளக்குகின்றன.

ஒறுப்பவர்க்கே கயவர் பயன்படுவர்

கயவர்களுக்கு இரக்கப்படக்கூடாது; உதவக்கூடாது; இடமளிக்கக்கூடாது. தம்பி தங்கைகள் போக்கிரிப் பிள்ளைகளிடம் விழிப்பாக இருக்கவேண்டும்.

அவர்களுக்குச் சற்றும் இரக்கம் காட்டக்கூடாது. தவறு செய்பவர்கள், இல்லாத அட்டகாசம் செய்வார்கள். கடைசியில் ஆசிரியரிடம் சொல்லிவிடாதே என்று கெஞ்சுவார்கள். அத்தகைய சமயங்களில் அவர்களுக்கு இரக்கப்பட்டுப் பேசாதிருந்துவிட்டால், அந்தப் பிள்ளைகளின் போக்கிரித்தனம் மேற்கொண்டு வளரவே செய்யும். பொய் சொல்லுகிற பிள்ளைகள், திருடுகிற பிள்ளைகள், தப்புச் செய்கிற பிள்ளைகள், காப்பியடிக்கிற பிள்ளைகள்—இவர்களை உடனுக்குடன் சந்தியில் நிறுத்தவேண்டும். இவர்களுக்கு இரக்கப்படுவது பாம்புக்கு இரக்கப்படுவது போன்ற காரியமாகும். பாம்புக்குப் பால் வார்ப்பது தகுமா? கயவர்களையும் மூர்க்கர்களையும் ஆங்காங்கு ஒறுத்தல் வேண்டும்.

சொல்லப் பயன்படுவர் சான்றோர், கரும்புபோற்
கொல்லப் பயன்படும் கீழ் [1078]

என்பது குறள். கரும்பினை ஆலையில் வைத்துச் சாறு பிழிவதுபோல வருத்தினால் மட்டுமே கீழ்க்கள் பயன்படுவாராம். அடிக்கிறவர்கள், உதைக்கின்றவர்கள் ஆகிய முரடர்களுக்கே அவர்கள் மசிவர். அவர்களிடம் உதவி பெறுவதற்கு, நல்ல வார்த்தைகள் பயன்படாது. கன்னத்தை அடித்துடைக்கும் வளைந்த கையை உடையவர் அல்லாதவருக்குக் கீழ்மக்கள் உண்டு கழுவிய கையைக்கூட உதறமாட்டார்கள்,

தக்கார்க்கு உதவுக

ஆகவே நல்ல இயல்புகளை மேற்கொள்வதிலும் விழிப்பு வேண்டும். தக்கவர்க்கே உதவவேண்டும்; நல்லவர்களுக்கே இரக்கப்பட வேண்டும். ஆட்களின் இயல்பறிந்தே இடமளிக்க வேண்டும். இதற்கு மாறாக நடந்தால் துன்பமே விளையும்.

8

கொடைக்குத் தடையாக நிற்காதே

ஈதல் அறம்

கொடை, வள்ளல்தன்மை, ஈகை—இவற்றுக்குத் தமிழில் நீதி நூல்கள் மிகவும் ஏற்றம் தருகின்றன. அறம் என்று சொல்லப்படுவது பெரும்பாலும் ஈகையையே குறிப்பதாகும். 'அறஞ்செய விரும்பு' என்று தான் ஆத்திசூடி தொடங்குகிறது. தமிழப் பிள்ளைகள் முதலில் படிக்கிற நீதி நூல் அதுதான். அறத்தையும் ஈகையையும் எல்லா நூல்களுமே வற்புறுத்துகின்றன. கண்ணை மூடுவதற்கு முன்பு-எமன் வருவதற்கு முன்பு 'அறஞ்செய் அறஞ்செய்' என்று அறிவுறுத்தும் பாட்டுக்கள் ஏராளம். பிறருக்கு உதவு என்னும் கருத்து எத்தனை எத்தனை விதமாகவோ வலியுறுத்தப் படுகிறது. சாவை எவரும் விரும்புவதில்லை. அது பெருந் துன்பம். அதற்கு மேற்பட்ட துன்பம் ஒன்றில்லை. ஆனால் ஈகை நலம் சிறக்கமுடியாவிடத்துச் சாவும் இன்பமே என்கிறது குறள். ஈதலும் அதனால் புகழ் உண்டாக வாழ்தலுமே மாந்தர் வாழ்க்கையின் பயன்கள். கொடையின் பயன் ஈத்துவக்கும் இன்பம் என்று பேசப்படுகிறது. இணையற்ற இன்பம் அது. பிறருக்குக் கொடுத்து இன்பம் காண்பதா என்று சிலர்

வியக்கக்கூடும். பிறருக்குக் கொடுத்தால் கொடுத்தவனுக்குத் துன்பம்தானே மிஞ்சுமென்றும் சிலர் கேட்கக் கூடும். சிலர் பெரும் பணத்தை அரும்பாடு பட்டுச் சேர்ப்பார்கள். சாகின்ற வரையில் பணங் காக்கும் பூதங்களாக அந்தப் பணத்தை அல்லும் பகலும் காப்பார்கள்; இரவில் அவர்களுக்குத் தூக்கம் கூட வராது. ஒருநாள் திடீரென்று அந்தப் பணம் கொள்ளைபோகும்—அல்லது நோட்டு செல்லாது என்று அரசாங்கம் அறிவிக்கும். இவ்வாறு பணத்தைத் தேடிக் காத்து ஒரேயடியாகப் பறிகொடுப்பவர்களைப் பார்த்து வள்ளுவர் இரக்கப்படுகிறார்.

ஈத்துவக்கும் இன்பம் அறியாதார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர் [228]

என்னும் குறள் ‘ஈத்துவக்கும் இன்பத்தைச் சிறப்பித்துப் பேசுகிறது.

ஈகையால் இன்பம்

பாரி போன்ற வள்ளல்களே ஈகை இன்பத்தை முழுமையாகத் துய்க்க முடியும். எனினும், எளிய நிலையில் உள்ளவர்களும் அவரவர் வசதிக்கேற்ப இந்த ஈகை நலத்தை மேற்கொள்ள வேண்டும்.

இட்டுப்பார்—பின்னர்
தொட்டுப்பார்—உன் நெஞ்சை
அங்கே தோன்றும் இன்பம்

என்று சொல்கிறார் பாரதிதான். ஈகையின் விளைவாக உள்ளத்தில் இன்பம் சுரக்கிறது. இந்த உண்மையைத் தமிழர்கள் கண்டு அறுதியிட்டு வைத்திருக்கிறார்கள். ஈகைப் பண்பு தமிழர் பரம்பரையில் வழிவழியாக வளர்ந்து வந்திருக்கிறது.

தடுக்கும் கயவர்கள்

எனினும் ஈகைப்பண்பு எல்லோரிடமும் அமைந்து விடுவதில்லை. ஒருசில பெருமக்களிடமே அது அமையும். அத்தகைய கொடையாளிகளையும் பிறருக்கு உதவிசெய்யாமல் தடுத்துக் கெடுக்கும் 'கயவர்கள்' உண்டு. கொடுப்பாரைத் தடுப்பவர்கள் அவர்கள். அவ்வாறு இடை நிற்பவர்களை நீதிவெண்பா கண்டிக்கிறது.

தாமுங்கொ டார்கொடுப்போர் தம்மையுமீ யாதவகை
சேமஞ்செய் வாருஞ் சிலருண்டே—ஏமநிழல்
இட்டுமலர் காய்கனிக ளீந்துதவு நன்மரத்தைக்
கட்டுமுடை முள்ளெனவே காண். [59]

பழமரத்துக்கு வேலி

பழமரங்களைச் சுற்றி முள் வேலி போட்டிருப்பார்கள். எவரும் எளிதில் சென்று பழத்தைப் பறித்துக் கொண்டுவிடாதபடி அந்த முள் செடிகள் பாதுகாப்பாக இருக்கும். கொடையாளர்கள் பழமரங்கள் என்றே குறிக்கப்படுகிறார்கள்.

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின் [216]

என்பது குறள். பழமரங்கள் காட்டிலிருந்து பயனில்லை; ஊருக்கு நடுவே இருக்க வேண்டுமாம். செல்வம் நல்லவர்களிடம் சேர்வது, ஊரின் நடுவே பழமரம் பழுத்தது போன்றதாகும். மரம் பழுத்தால் வெளவாலை, 'வா' என்று யார் கூப்பிடுகிறார்கள்? பழுத்த மரம் பெரிய வேட்டைக்காடு. குறிப்பாக மாமரங்கள் காய்ப்புக் காலங்களில் சிறுவர்களின் படையெடுப்புக்கு இலக்காகும். மாமரத்தின் சொந்தக்காரர்கள் பழங்கள் பறிபோகாமல் காப்பதற்காக,

மரத்தைச் சுற்றி முள் கொண்டுவந்து போட்டிருப் பார்கள். முள்ளில் சரியான முள் வேலமரத்தின் முள் தான். உடைவேல் அல்லது குடைவேல் என்று சொல்வார்கள். அது முள் அன்று, வேல்தான். காலிலும் கையிலும் அந்த முள் அவ்வாறு பாயும். ஆகவே பழமரங்களுக்கு வேலாமுள் நல்ல பாதுகாப்பு. தோட்டங்களுக்கு வேலிகளாகப் பெரும்பாலும் இந்த வேலா மரத்தையே வளர்ப்பார்கள்.

போர்க்காலக் குண்டூசி

வேலமரத்து முள்ளைப் பற்றி இன்னும் ஒரு சுவை யான செய்தி. குண்டூசிபோல அதனைப் பயன்படுத் தலாம், போர்க் காலத்தில் குண்டூசிக்குப் பெரிய தட்டுப்பாடு வந்தபோது வேலா முள் குண்டூசியாகப் பயன் படுத்தப்பட்டது இன்னும் என் நினைவிலிருக் கிறது. அந்த முள் அவ்வளவு உறுதியானது; கூர்மை யானது; எளிதில் உடையாதது.

மரத்தின் கீழும் பரவலாக முள்ளைப் போட்டு வைத்திருப்பார்கள். சுற்றியுள்ள சுவர்களிலும் முள் வேலி இருக்கும். மரத்தின் மீது ஏறமுடியாதபடி தடுக்கவும் மரத்தைச் சுற்றினாற்போல முள் காப்புப் போட்டுவிடுவார்கள். நான்கு ஆளை இரவு பகலாகக் காவல் போட்டால்கூடப் பழங்களைக் கண்ணும் கருத்து மாகப் பாதுகாக்க மாட்டார்கள். உடைவேல் முள் அவ்வளவு அருமையாகக் காவல் புரியும்.

மரம் பழுப்பது பிறருக்குக் கொடுக்க. ஆனால் வேலா முள் மரம், பழம் கொடுப்பதைத் தடுக்கிறது. யாரும் அந்த மரத்திடம் நெருங்க முடியாதபடி முள் தடுத்து நிற்கும்.

பழுக்கின்ற மரத்திற்குத் தன்னைப் பயிராக்கிய வர்கள், தண்ணீர் ஊற்றியவர்கள், தன் 'எஜமானர்கள்' யாரென்று தெரிய நியாயமில்லை. இயற்கைப் போக் கின்படி அது பருவப்படி பழுக்கிறது. குலை குலையாகப் பழங்கள். மாம்பழத்தைப் பார்த்தால் யாருக்குத்தான் ஆசை வராது! ஊரே திரண்டு வரும். மரத்தில் ஏறு வோம், இரண்டு பழங்களைப் பறித்துத் தின்போம். என்ற நினைப்பில் சிறுவர்களெல்லாம் ஓடிவருவார்கள். ஆனால் பழமரத்தின் சொந்தக்காரன் முள் வேலி போட்டிருப்பது அவர்களுக்கு எங்கே தெரியும்? மரத் தடியில் வந்து பார்த்த பிறகே 'எட்டாப் பழத்திற்குக் கொட்டாவி விட்டோமே' என்பது புரியும்.

மக்கள் உண்ணக் கொடுப்பதற்காகவே பழங்களை வழங்குகிறது மரம். ஆனால் மனிதர்கள் எழுப்பும் செயற்கை முள்வேலி இந்தக் கொடைக்குக் குறுக்கே நிற்கிறது.

குறுக்குச் சுவர்கள்

கொடையாளர்களுக்கும் இத்தகையக் குறுக்குச் சுவர்கள் உண்டு. கொடுக்கின்றவர்களைக் கெடுக்கின்ற வர்கள் அவர்கள். அந்தப் புண்ணியவான்கள் தாமும் கொடுப்பதில்லை; பிறரையும் கொடுக்க விடுவதில்லை. நீதி வெண்பா இத்தகைய புண்ணியவான்களை 'முள் வேலி'கள் என்று குறிப்பிட்டுக் கண்டிக்கிறது.

எங்கும் ஈகையாளரைச் சுற்றி இத்தகைய 'முள் வேலி'களைக் காணலாம். 'கொடுத்துக் கொடுத்துக் கெட்டுப்போவதா?' என்று ஈகையாளரிடம் அவர் களின் நன்மையைக் கருதுபவர்கள் போலப் பேசுவார் கள். இத்தகைய தடுப்புப் பேர்வழிகளை நாட்டில் பல இடங்களிலும் காணலாம். பெரியவர்கள் வீடு

களில் எல்லாம் இவர்கள் ஒட்டிக்கொண்டிருப்பார்கள். அவர்களுக்குச் சொந்தமான பிழைப்பு ஏதும் இராது. செல்வர் வீடுகளில் தண்டச்சோறு சாப்பிடுவதும் அவர்களுக்குப் பாரமாக இருப்பதுமே இந்தச் சகுனிகளின் வாழ்க்கை. செல்வர்களின் சொல்லுக்குத் தாளம் போடுவதும் அவர்கள் செய்யும் நல்ல காரியங்களைத் தடுப்பதுமே இந்த மனிதர்கள் செய்கின்ற உருவான பணிகள். 'பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை' என்று நல்வழி இதனைத்தான் இடித்துரைக்கிறது. வயிற்றை நிரப்புவதற்காகச் செல்வர்கள் வீடுகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் இந்தப் பேர்வழிகளுக்கும் பழமரங்களைச் சுற்றிக்கிடக்கும் வேலா முள்ளுக்கும் வேறுபாடே இல்லை. கொடுப்பதைக் கெடுக்கின்ற வேலையை இவர்கள் ஒழுங்காகச் செய்வார்கள். 'சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்கவில்லை' என்று சொல்வது உண்டு. இத்தகைய பூசாரிகளைப் பெரும்பாலும் பெரிய மனிதர்களின் வீடுகளில் காண முடியும். அவர்களைக் 'கண்டுகொண்ட' பிறகுதான் பெரிய மனிதர்களைப் பேட்டி காணலாம். கூடுமானவரை பெரிய மனிதர்களின் பேட்டியே நமக்குக் கிடைக்காதபடி அவர்கள் செய்துவிடுவார்கள். அப்படித் தப்பித்தவறிக் கிடைத்தாலும் நாம் நாடிச்சென்ற காரியம் பழுக்காதபடி தடுக்க என்னென்ன இடையூறுகள் செய்யவேண்டுமோ எல்லாவற்றையும் செய்வார்கள். நம்மைப்பற்றி இல்லாதது பொல்லாதது எல்லாவற்றையும் கூறுவார்கள். இத்தனை தடைகளையும் மீறி நம் தூது வெற்றிபெறுவது எங்கே?

ஈகைப் பண்பு

ஈகை உயரிய பண்பு. எல்லோரிடமும் இருக்க வேண்டிய பண்பு. இயற்கையான பண்பு அது. அதனை

வளர்த்துக் கொள்வதுதான் முறை. ஆனால் ஈகை நலத்தில் சிறந்து விளங்காவிட்டாலும் ஈகையைத் தடுக்காமல் இருக்கிற 'பெருந்தன்மை'யையாவது நாம் கைக்கொள்ள வேண்டும்.

கொடுக்கின்றவர்களைக் கெடுப்பது சிறுமைக் குணம்; நன்மைக்குக் குறுக்கே நிற்கும் செயல். நல்லவர்களும் பெரியவர்களும் அதனை விரும்பமாட்டார்கள், வெறுப்பார்கள்.

குழந்தைகள் இளமையிலேயே ஈகைப் பண்பை வளர்த்துக் கொள்ளவேண்டும். உண்ணும்போது பக்கத்திலுள்ள குழந்தைகளுக்கும் கொடுக்கவேண்டும்; பிறரைப் பார்க்கவைத்துக்கொண்டு தின்னக்கூடாது. அது மிகவும் அருவருப்பான செயல். நீதிவெண்பா சுட்டிக்காட்டுகிறபடி, ஈகைக்குக் குறுக்கே நிற்பது தவறு; பெருங்குற்றம். கொடைக்குத் தடையாக நிற்கக்கூடாது.

9
நல்ல கூட்டாளிகளோடு பழகு

பனைமரமும் தென்னை மரமும்

இப்பொழுது பனைமரம் தென்னைமரம் இரண்டையும் பற்றி உங்களுக்குச் சொல்லப்போகிறேன். பனைமரம் மலேசியாவில் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, உங்களில் பலர் பனைமரத்தைப் பார்த்திருக்க மாட்டீர்கள். ஆனால், எண்ணெய்ப் பனை அல்லது செம்பனை எனப்படும் ஒருவகை மரம் மலேசியாவில் நிறைய இருக்கிறது. அந்த மரத்திலிருந்துதான் செம்பனை எண்ணெய் எடுக்கிறார்கள். மலேசியாவின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்களில் செம்பனை எண்ணெய் ஒன்று. இதனைப் பற்றி வகுப்புப் பாடபுத்தகங்களில் நீங்கள் படித்திருப்பீர்கள்.

நான் குறிப்பிடுகிற பனைமரம் வேறு. அது தமிழ் நாட்டில் மிகுதி. தென்னை மிக உயரமாக வளரும். மிக உயரமாக இருப்பவர்களை நாம் தென்னைமரம் போல வளர்ந்திருக்கிறான் என்போம். ஆனால் பனைமரம் இதற்கு நேர்மாறு. அது குட்டையானது. தென்னை போலவே பனைமரத்திலிருந்தும் கள் எடுக்கிறார்கள். 'கள்' என்றவுடன் குழந்தைகள் திடுக்கிடுவீர்கள். தென்னம்பால், பனம்பால் என்றும் சிறப்பான பெயர்களால் இம் மரங்களிலிருந்து இறக்கப்

படும் கள்ளைக் குறிப்பிடுவார்கள். விளக்குமாற்றுக்குப் பட்டுக் குஞ்சம் கட்டுவது போன்றது இந்தச் சிறப்பு.

நீங்காத பழி

ஆனால் தென்னைக்கும் பனைக்கும் அவற்றினால் வேறு எத்தனையோ நல்ல பயன்கள் இருந்தும், 'கள்' தரு கின்ற காரணத்தால் நீங்காத பழி ஒட்டிக்கொண் டிருக்கிறது. தென்னையும் பனையும் மாந்தருக்கு மிகவும் பயனுள்ள மரங்கள். தென்னையின் நன்றி யுணர்வை மூதுரை சிறப்பாகக் கூறுகிறது. காலால் பெற்ற உதவிக்குத் தலையால் கைம்மாறு செய் கின்ற பண்பைக் கொண்டது தென்னை. தண் ணீரைக் குடிக்கும் தென்னை நமக்குத் தருவது குடிக்கக் குடிக்கத் தெவிட்டாத சுவையான இளநீர். தென்னை இளநீரை மட்டும் மாந்தருக்குத் தரவில்லை. அது தன்னையே தந்துவிடுகிறது. தென்னை யோலையில் கீற்றுப் பின்னிப் பந்தல் போடுவார்கள். தென்னை மட்டை அடுப்பெரிக்கப் பயன்படும். தென்னையின் எந்தப் பகுதியும் கழிவில்லை. தென்னையிலிருந்து கிடைக்கும் ஈர்க்கால்தான் கூட்டுமாறு கட்டுவார் கள். அதற்குத் தென்னைமாறு என்று பெயர். தென்னையின் பயனைப் பற்றி இன்னும் எவ்வளவோ சொல்லலாம். தென்னை பெரிய செல்வம். ஒரு பெரிய செல்வம். ஒரு பெரிய தென்னந் தோப்பு இருந்தால் ஒரு குடும்பம் கவலையின்றி வாழ முடியும். அதுபோலத் தான் பனையும் நல்ல பயனுள்ள மரம். பனையிலிருந்து தான் நுங்கு கிடைக்கிறது. வெய்யில் காலத்தில் நுங்கு சாப்பிட்டால் நல்லது. இளநீர் போல நுங்கும் மிகவும் சுவையாக இருக்கும். நுங்கு என்றால் குழந்தை களுக்குக் கொண்டாட்டம். நுங்குச் சுளைகளைச் சாப் பிட்டுவிட்டு, அந்தக் காயை உருளைகளாகவைத்துப்

பிள்ளைகள் நுங்குவண்டி ஓட்டுவார்கள். நுங்கின் சுவையைப் பற்றித் தமிழகத்திலுள்ள தம்பி தங்கைகளிடம் கேட்டால் சொல்வார்கள். நுங்கு, டொரியான் பழம்போலக் குடிக்கக் குடிக்க ஆசை கொடுக்கும்.

பனையோலையில் விதம் விதமான ஓலைப் பெட்டிகள் முடைகிறார்கள். பெட்டி முடையும் இந்தத் தொழில் பெரிய குடிசைத் தொழிலாகத் தமிழகத்தில் வளர்ந்திருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து வருகிறவர்கள் ஓலைப் பெட்டிகளின் நேர்த்தியையும் வேலைப்பாடுகளையும் பார்த்துவிட்டு மூக்கில் விரல் வைக்கிறார்கள். பனையோலையின் மற்றொரு பயன் திருவிழாக்களிலும் திருமணங்களிலும் அலங்காரத் தோரணங்கள் கட்டக் கூந்தலாகப் பயன்படுவதாகும். பனையோலையிலிருந்து பின்னப்படும் அதனைக் கூந்தல் என்று சொல்வார்கள். மாவிலைத் தோரணங்களில் இடையிடையே இந்தக் கூந்தல் தொங்குவது மிக அழகாக இருக்கும். கூரை வேயவும் பயன்படும். இன்னொரு முக்கிய பயனைச் சொல்ல மறந்துவிட்டேன். பழைய நாட்களில் பனையோலையில்தாம் நம் தமிழ் நூல்களை எல்லாம் எழுதிவந்தார்கள். எழுத்தாணி கொண்டு பனையேட்டில் எழுதும் காட்சியைத் தமிழ்நாட்டில் இப்போதும் சில இடங்களில் காணலாம். செட்டிமார் நாட்டுத் திருமணங்களில் 'இசைகுடிமானம்' என்று குறிக்கப்படும் மண ஒப்பந்தம் இன்றும் ஏட்டில்தான் எழுதப்படுகிறது. எழுத்தாணி கொண்டு ஏட்டில் எழுத இப்போது பள்ளியில் சொல்லித் தரப்படுவதில்லை. ஆகவே எழுத்தாணிப் பயிற்சியுள்ளவர்கள் இன்னும் ஒன்றிரண்டு தலை முறைக்குப் பிறகு கிடைப்பது அரிதாகிவிடும். நம் அருமைத் தமிழ் இலக்கி

யங்கள் எல்லால் பனை ஓலையில் எழுதிக் காப்பாற்றப் பட்டு நமக்குக் கிடைத்தவை தாம்.

தோட்டத்திற்றிற்குத் தோட்டம் கள்ளுக்கடை

தென்னை, பனைமரங்களினால் இத்தனை நன்மை யிருந்தும் கள்ளைக் கொடுக்கின்ற காரணத்தால், அவற் றுக்கு மாறாத பழி இருக்கிறது. மலேசியாவில் தோட் டத்திற்குத் தோட்டம் கள்ளுக்கடை. தமிழர்கள்வாழும் ஊர்களில் எல்லாம் கள்ளுக்கடை உண்டு; கள் என்ற வுடனேயே உங்களுக்கு அருவருப்பு ஏற்படுகிற தல்லவா? கள் மனிதனை விலங்காக்கி விடுகிறது. குடித் தவர்கள் படுத்தும்பாடும், அடிக்கின்ற கொட்டமும் உங்களுக்குத் தெரியும். குடி, குடி கெடுக்கும். குடி காரர்கள் நாட்டுக்குப் பாரம். அவர்களால் தீமையே யன்றி, நன்மை விளைவதில்லை.

குடிப்பழக்கம் வெறுக்கத்தக்கது

குடி வகைகளில் கள்ளாயினும், பீர், பிராந்தி முதலிய வெளி நாட்டுச் சரக்காயினும் எல்லாம் தீமையே. ஒன்றையும் தொடக்கூடாது. தம்பி, தங் கைகள், சிறுவயதிலேயே, கள் முதலிய குடிவகைகள் மீது பெருவெறுப்புக் கொள்ள வேண்டும். ‘கள் நம் வீட்டில் காலெடுத்து வைக்கக்கூடாது’ என்னும் உறுதி கொண்டு, தவறான வழியில் நடக்கும் பெரியோர் களையும் திருத்த முயலவேண்டும். குடிப் பழக்கத்தை ஒழிப்பதில் நம் தமிழக் குழந்தைகள் உருவான பணி புரிய முடியும்.

பனையடியில் பால் குடித்தாலும் பழி

தென்னை மரத்தின் அடியில் இருந்து கொண்டு ஒருவர் பசுவின் பாலை அருந்துவதாக ஒப்புக்கொள்

ளவே மாட்டார்கள். அவர் எத்தனை கோயிலில் சத்தியம் பண்ணினாலும் நம்பமாட்டார்கள். அவர் 'தண்ணி போடுகிறார்' என்றுதான் நினைப்பார்கள். பனைமரத்தின் அடியில் இருந்துகொண்டு பசுவின் பாலைக் குடித்தாலும் இதே கதைதான். தென்னைக்கும் பனைக்கும் உள்ள கெட்ட பெயர் நிலைத்துவிட்டது. ஆகவே அவற்றின் நிழலில் பாலென்ன, அமிழ்தத்தைக் கொண்டுபோய் நீங்கள் சாப்பிட்டாலும் பார்க்கின்ற பிறர் அதனைக் கள்ளென்றே கருதுவர். நீதிவெண்பா இந்த உண்மையை அழகாகக் கூறுகிறது.

நிந்தையிலாத் தூயவரும் நிந்தையரைச் சேரிலவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே—நிந்தைமிகு
தாலநிழல் கீழிருந்தான் றன்பா லருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார். [79]

பனையின் அடியில் பாலைக் குடித்தாலும் அது கள்தான்; தீயவர்களைச் சாருகின்ற நல்லவர்களின் நிலையும் இதுதான்.

சேர்க்கையினால் நன்மையும் தீமையும்

சேர்க்கையினால் நன்மையும் விளையும்; தீமையும் விளையும். அது போலவே, நாம் சேர்கின்ற இடங்களிலும் கவனமாக இருக்க வேண்டும். சீட்டாடும் கழகத்தில் சேர்ந்தால் சூது நம்மை அறியாமலேயே நம்மைப் பற்றிக் கொள்ளும். நாம் எவ்வளவு மன உறுதியோடு இருந்தாலும் இடமும் சூழ்நிலையும் நம்மைக் கெடுத்து விடும். மதுபானக் கடைக்குப்போய் நாம் காப்பி அருந்தினாலும், நம்மை மற்றவர்கள் ஐயக்கண்ணோடு தான் பார்ப்பார்கள். குதிரைப்பந்தயத் திடலுக்கு நாம் வேடிக்கை பார்க்கப்போனாலும், நாம் பந்தயம் பிடிக்கப் போகிறோமென்றுதான் மற்றவர்கள் கருது

வார்கள். ஆகவே நாம் செல்கின்ற இடங்கள், சேர்கின்ற இடங்கள் ஆகியவற்றிலும் விழிப்பாக இருக்க வேண்டும். மதுபானக்கடை, சூதாட்டக்களங்கள், குதிரைப்பந்தயத்திடல் போன்ற இடங்களுக்கு இளைஞர்கள் செல்லாதிருப்பதே மேல். நீதிவெண்பா நமக்கு வலியுறுத்துகின்ற நீதி இதுதான்.

சேரிடம் அறிந்து சேர்

'சேரிடம் அறிந்து சேர்; 'பெரியாரைத் துணைக்கொள்' என்னும் அறிவுரைகளை இளைஞர்கள் நினைவிற் கொள்ள வேண்டும். 'பன்றியோடு கூடிய கன்றும் மலம் தின்னும் என்பார்கள். குடிகாரன், சூதாட்டத்தில் சூரன், பஞ்சபாதகத்தித்திற்கு அஞ்சாதவன்— இப்படிக் கெட்ட பெயர் எடுத்தவர்கள் சமுதாயத்தில் பலர் இருப்பார்கள். சிறுவர்களிலும் இத்தகைய தீயோர் உண்டு. அவர்கள் பொய் தவிர மெய்யே பேசமாட்டார்கள். திருட்டு முதலிய குற்றங்கள் அவர்களிடம் குடிபுகுந்திருக்கும். சூதாட்டக்களம் முதலிய கெட்ட நிலையங்களில் அவர்களைக் காணலாம். இத்தகைய வம்பர்களின் பேச்சு, நடையுடைபாவனை எல்லாமே ஒருமாதிரியாக இருக்கும். அத்தகைய தீயவர்களோடு தம்பி தங்கைகள் சேரக்கூடாது. சேர்ந்தால் அவர்களுக்கு இருக்கும் கெட்ட பெயர் உங்களுக்கும் வந்துவிடும்.

சூழ்நிலையும் சேர்க்கையும்

வாழ்க்கையில் உயர்வும் தாழ்வும் ஏற்படுவதற்குச் சூழ்நிலையும் சேர்க்கையுமே முக்கிய அடிப்படைகள். இளமையிலேயே பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தித் தரவேண்டும். பள்ளிகளிலும்

சரி, வெளியிலும் சரி—பிள்ளைகள் நல்ல கூட்டாளிகளோடுதான் பழகவேண்டும். படிப்பில் அக்கறையுள்ள பிள்ளைகளோடு சேர்ந்தால் நமக்கும் படிப்பு வளரும். விளையாட்டிலும் சினிமாப் பார்ப்பதிலும் வீண்பேச்சிலும் அக்கறையுள்ள பிள்ளைகளோடு சேர்ந்தால் நமக்கும் அந்தப் பழக்கங்களே வரும். தம்பி தங்கைகள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் கூட்டாளிகளைப் பொறுத்து மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும்.

தீயவரோடு சேர்ந்தால் தீமையே விளையும். நல்லவரோடு பழகினால் நன்மை கிட்டும். பனையின் அடியில் இருந்து பாலைக் குடித்தாலும் அதனைக் கள்ளென்றே பிறர் கருதுவர்; ஆகவே, சூழ்நிலையும் சேரும் இடமும் மாந்தர் வாழ்க்கையில் முதன்மையானவை.

10

அமைதிக்கு அடிப்படை நற்கல்வி

ஈக்களும் புண்ணும்

'வானமும் நிலவும் போல, மகர யாழும் இசையும்போல, கண்ணும் இமையும்போல, நகமும் சதையும் போல' என்று இணைபிரியாத ஒற்றுமைக்கு உவமைகள் சொல்வார்கள். இந்த உவமைகளின் வரிசையில் 'புண்ணும் ஈயும்போல' என்பதையும் சேர்த்துக்கொள்ளலாம். புண்ணுக்கும் ஈக்களுக்கும் அவ்வளவு பொருத்தம்! புண் இருக்குமிடத்தில் ஈ இருப்பது திண்ணம். ஈ உடம்பின்மீது மொய்த்தால், ஏதோ காயம் அல்லது புண் இருக்கிறதென்று தீர்மானித்துக் கொள்ளலாம். புண்ணைச் சுற்றி ஈ மொய்ப்பது இயற்கை. புண்ணைத் தேடி 'எங்கே?' என்று ஓடி வரும் ஈ. புண்ணில் ஈ உட்காரக்கூடாது, காற்று படக் கூடாதென்பதற்காகக் கட்டுப் போட்டு வைப்பது உண்டு.

ஈரமிருக்கும் இடத்தில் எல்லாம் ஈ மொய்க்கும். பலாப்பழத்தில், மிட்டாய்க் கடையில் ஈ மொய்ப்பதைக் காணலாம். தூய்மையற்ற வீடுகளிலேயே ஈ மிகுந்திருக்கும். புண்ணைக் கிளருவதில் ஈக்களுக்கு ஒரு சுகம். புண்ணின் வாசம் ஈக்களுக்கு மிகவும் பிடித்தம்.

நமக்கு மல்லிகையின் மணம் பிடிக்கும்; சந்தனத்தின் மணத்தில் நாட்டமிருக்கும். அத்தர், புனுகு, ஜவ்வாது ஆகியவை மனிதர்களின் நறுமண நாட்டத்திற்கு எல்லையாக நிற்பவை. ஆனால் புண்ணிலிருந்து அடிக்கின்ற வாடை மூக்கை எரிக்கக்கூடியது. காந்துகின்ற நாற்றம் அது. ஆனால் ஈக்களுக்கு அந்த நாற்றம் மல்லிகைபோல மணக்கிறது. ஈக்களும் புண்ணும் இணைபிரியாத தோழர்கள்.

கற்றாரும் கல்லாரும்

புண்ணை ஈ விரும்புவதுபோல, கலகத்தையே விரும்புவார்கள் நல்ல நூல்களைக் கல்லாதவர்கள். அறிவு நூல்களைக் கற்ற நல்லவர்கள் நட்பையும் சேர்ந்து வாழ்வதையும் விரும்புவார்கள். நீதிவெண்பாவில் இந்த உண்மை விளக்கமாக எடுத்துக்காட்டப்படுகிறது.

காந்துநறும் புண்ணைக் கலந்தீ விரும்புமே
வேந்தர் தனமே விரும்புவார்—சாந்தநூல்
கல்லார் பகைசேர் கலகம் விரும்புவார்
நல்லார் விரும்புவார் நட்பு. [82]

படிப்பு மனிதனைப் பண்படுத்துகிறது. கல்வி பெறாதவர் கண்ணிருந்தும் குருடரன்றோ? மாந்தர்க்கு உலகைக் காட்டும் கண்ணாடி கல்வி. படித்த மனிதருக்கும் படிக்காத மனிதருக்கும் மலையத்துணை வேறுபாடு உண்டு. திருவள்ளுவர் இந்த வேறுபாட்டை அழகாகச் சொல்லிவிட்டார். படித்தவன் மனிதன்; படிக்காதவன் மிருகம். படித்தவர்களிடம் அடக்கம் இருக்கும்; தீமைக்கு நாணுகின்ற அச்சம் இருக்கும்; உலகப் போக்கை உணர்ந்த நாகரிகம் இருக்கும்; நல்ல

பண்பாடு அனைத்தும் இருக்கும். கற்றோர் பண்பாட்டின் நிலைகளாக விளங்குவார்கள். அவர்களால் நாடும் மக்களும் பயனடைவர்.

கல்லாத கீழ்மக்களால் நாட்டில் சண்டை, சச்சரவே ஏற்படும். பண்பாட்டை உருவாக்கும் கல்வி இல்லாவிடத்துக் கலகம்தானே விளையும்! கல்லாதவர் களை விலங்குகளோடு ஒப்பிட்டது பொருத்தமே. கண்ணில் கண்டதை அடித்துத் தின்று வாழ்க்கைக் குறிக் கோள் ஏதுமின்றிச் சுற்றித் திரிந்து இறுதியில் செத்து மடியும் விலங்குகளுக்கும் அவர்களுக்கும் என்ன வேறு பாடு? நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை— தீமையாவது அவர்களால் நேராதிருக்குமா? அதுதான் இல்லை. விலங்குகளால் தீமை நேர்வது எத்துணை திண்ணமோ அத்துணை திண்ணம், கல்லாதவர்களால் தீமை நேருமென்பது.

அழிவுப் பாதையில் உலகம்

உலகம் காட்டுமிராண்டிக் காலத்தை நோக்கி அழிவுப் பாதையில் போய்க்கொண்டிருக்கிறது என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். மனிதன் அறிவுத் திறத்தால் கண்டுபிடித்திருக்கும் அணுக்குண்டும் நீரகக் குண்டும் மனிதகுலத்தையே பூண்டற்றுப் போகச் செய்துவிடுமோ என்ற அச்சம் நல்லவர்கள் உள்ளத்தில் ஏற்பட்டிருக்கிறது. படிப்பினால் விளைந்த கேடுதானே அணுக்குண்டு என்றும் கேட்கப்படுகிறது. அணு சக்தி மனிதர்களுக்குக் கிடைத்துள்ள மகத்தான சக்தி. அந்தச் சக்தியை நாம் பயன்படுத்தும் வகை யிலேயே நம் வாழ்வும் தாழ்வும் இருக்கிறது. அணு சக்தி மனிதகுலத்திற்கு ஒரு பெரிய சோதனையாக முளைத்திருக்கிறது. அணுசக்தியை மனிதர் மேன்

மைக்குப் பயன்படுத்துவது நல்ல கல்வி; மனிதரைப் பாழ்படுத்த வைப்பது தீய கல்வி.

சாந்தநூல், இலங்குநூல்

படித்தவர்க ளெல்லாம் பண்பாடுள்ளவர்களா என்ற கேள்வி எழுகிறது. உண்மையில் கல்விக்குள்ள ஆற்றல் மனிதனைப் பண்படுத்துவதுதான். ஆனால் கல்வியின் ஆற்றலையும் மீறிச் சிலரிடம் மிருகத்தனமும் காட்டுமிராண்டிப் போக்கும் தங்கிவிடுகின்றன. மிகச் சிலரிடம்தான் இந்த நிலை. ஆகவே இதனை விதிவிலக் காகவே கருதவேண்டும். மற்றொன்றும் நாம் கவனிக்க வேண்டும். கல்வி என்னும்போது நாம் நல்ல நூல் களையே குறிப்பிடுகிறோம். புத்தக வடிவத்தில் அச் சிட்டு வந்ததெல்லாம் நல்ல நூலாகிவிடாது. 'சாந்த நூல்' என்று நீதிவெண்பா சுட்டுகிறது. 'இலங்கு நூல்' என்கிறார் வள்ளுவர். மனிதனுக்கு அடக்கத்தை ஏற் படுத்தக்கூடிய அருள் நூல்களையும் அன்பு நூல்களையுமே 'சாந்த நூல்' என்னும் தொடர் குறிக்கும். 'இலங்கு நூல்' என்னும் தொடர் விரிவான ஆராய்ச்சிக்குரியது. பெருமைமிக்க நூல்கள், சிறந்த நூல்கள் என்ற அளவில் அதற்கு நாம் பொருள் கொள்ளலாம்.

நல்ல நூல்களை நாடிக் கற்க

சாந்த நூல் கல்லாதவர்கள் கலகத்தை விரும்புவது இயற்கை. உலகில் போர் மூளுவதற்கும் போர் வெறி கிளப்பப்படுவதற்கும் அருள் நூல்களைக் கல்லாதவர் களே காரணர்களாவர். ஆகவே படிக்கும் நூல்களைப் பொறுத்தே மனிதர் பண்பு அமையும். கொலையும் கொள்ளையும் நிறைந்த பயங்கரக் கதைகளையே நாளும் படித்துக் கொண்டிருக்கும் ஒரு சிறுவன்,

நாளடைவில் பெரிய கொலைகாரனாக மாறுவதில் வியப்பில்லை. மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிவெண்பா போன்ற ஒழுக்க நூல்கள் மனிதனின் குறைகளைப் போக்கி, அவனை நிறைமனிதனாக்கக்கூடியவை. திருக்குறள் நமக்குக் கிடைத்திருக்கும் ஒப்பற்ற நூல். அதனைப் படித்தவர்கள் கற்றபடி நிற்பார்கள். அறத்தினின்றும் வழுவமாட்டார்கள். திருக்குறள் போன்ற நிலைபெற்ற நூல்களையே—தலைமுறை தலைமுறையாக விரும்பிப் படிக்கப்படும் அறநூல்களையே 'இலங்கு நூல்' என்று வள்ளுவர் குறிக்கிறார். இலங்கு நூலைக் கல்லாதவர்கள், விலங்குகளாக இருப்பதிலும் சாந்த நூலைப் படிக்காதவர்கள் கலகக்காரர்களாக இருப்பதிலும் வியப்பேதுமில்லை. நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும். தம்பி தங்கைகள் கடையில் கிடைக்கும் நூல்களையெல்லாம் படிப்பது கூடாது. பெற்றோரையும் பெரியவர்களையும் ஆசிரியர்களையும் நாடித் தக்க நூல்களைத் தேர்ந்தெடுத்துத் தரச் சொல்ல வேண்டும். இளமையில் படிப்பவை நல்ல நூல்களாக இருப்பது முக்கியமாகும். வாழ்க்கைக்கு நல்ல அடிப்படை அப்போதுதான் ஏற்படும்.

மன்னர் விருப்பம் மாபெரும் பொருளில்

புண்ணை விரும்பும் ஈ! கலகத்தை விரும்புவர் சாந்த நூல் கல்லாதவர்கள்! 'வேந்தர் தனமே விரும்புவார்' என்று நீதிவெண்பா சொல்கிறது. அரசருக்கு வேண்டியது வரிப்பணம்! நாட்டின் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழாமல் செல்வம், நாட்டின் கருவூலத்தில் வந்து குவிந்துகொண்டிருக்க வேண்டும். செல்வம் இருந்தால் நாட்டை நன்கு ஆள முடியும்; மக்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்ய முடியும்; பிற நாடு

களின் நடுவில் செல்வாக்கோடு விளங்கவும் செல்வம் தேவை. ஆகவே வேந்தர் தனத்தை விரும்புவது இயற்கை!

நல்லவர்களின் உள்ளம்

மற்ருேர் அடி 'நல்லார் விரும்புவார் நட்பு' என்பதாகும். சாந்த நூல் கற்றவர்களே இந்த நல்லவர்கள்! சாந்த நூல் மனித இதயத்தை விரிவடையச் செய்யும். தன் குடும்பம், தன் பெண்டு, தன் பிள்ளை என்றிருப்பவனிடம் சமுதாயத்தின் பொது நன்மை என்ற பரந்த மனப்பான்மையைக் கல்வி உருவாக்கிவிடும். குறுகிய தன்னலக் கூண்டான கடுகு உள்ளத்திற்குப் படிப்பு முற்றுப்புள்ளி வைத்துவிடுகிறது. 'எல்லாம் தனக்கென்றே' கருதும் கடுகு உள்ளங்களாலேயே சண்டை விளைகிறது. பரந்த மனப்பான்மை படைத்தவர்கள். சொந்த நன்மைக்காகச் சண்டையிடமாட்டார்கள். பிறருக்கு விட்டுக் கொடுக்கும் இயல்பு அவர்களிடம் இருக்கும். ஒற்றுமை, இணக்கம், நட்பு, தோழமை என்னும் சொற்களுக்குப் பரந்த உள்ளத்தில்தான் பொருள் காண முடியும். விரிந்த உள்ளம் நண்பர்களுக்கு இடந்தருகிறது; உறவினர்களுக்கு இடந்தருகிறது; தெருவாருக்கு இடந்தருகிறது; ஊருக்கு, உலகத்தாருக்கெல்லாம் இடந்தருகிறது. 'வந்ததெல்லாம் கொள்ளும் மகாராசன் கப்பல்' என்பார்கள். நல்லவர்களின் உள்ளமும் அத்தகையதுதான்!

சாந்தநூல்களைப் பயில்க

மூதுரையில் 'கற்ருரைக் கற்ருரே காமுறுவர்' என்று படித்திருக்கிருேம். படித்தவர்களைப் படித்தவர்களே விரும்புவார்கள், கல்லாத முரடர்களை அத்தகைய

முரடர்களே நாடுவர். தாமரைக் குளத்தை நாடிச் செல்லும் அன்னம்; ஆனல் காக்கையோ சுடுகாட்டில் பிணத்தைச் சுற்றும்!

புண்ணை விரும்புகிறது ஈ. அதுபோலக் கலகத்தை விரும்புவார் கல்லாதார். வேந்தருக்கு நாட்டம் பணத்தில்! நல்லவர்களுக்கு விருப்பம் நட்பு!

மாந்தரை விலங்குகளாக்கும் நூல்களை நீக்கிச் சாந்த நூல்களைப் பயில வேண்டுமென்பதுதான் இவ் வெண்பாவில் நமக்குச் சொல்லப்படுகிற நீதி!

11

செந்தாமரை முளைப்பது சேற்றில்

பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை

'சேற்றில் செந்தாமரை', 'சிப்பியில் முத்து' என்பார்கள். தாமரை அழகான பூ. கையில் வைத்து நாளெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம். தாமரை கதிரவனைக் கண்டு மலரும். பெண்களின் முகத்திற்குத் தாமரையை ஒப்பிடுவது உண்டு. சிரிக்கும் செந் தாமரை போன்ற முகம் என்று கூறுவார்கள். தாமரைப்பூவில் வெண்தாமரை, செந்தாமரை என்று இருவகை உண்டு. கல்விக் கடவுளாகிய கலைமகள் வெள்ளைத் தாமரைப் பூவில் வீற்றிருப்பதாக ஒரு நம்பிக்கை. 'வெள்ளைத் தாமரைப்பூவில் இருப்பாள்' என்று பாரதியார் பாடுகிறார். செந்தாமரையோ செல்வக் கடவுளாகிய திருமகளின் இருக்கை. தாமரை இவ்வளவு உயர்வானது. கடவுளின் இருக்கை என்று குறிக்கத்தக்க அளவு புனிதமானது. அத்தகைய தாமரை எங்கே முளைக்கிறது தெரியுமா?

தாமரை மலர்வது சகதி நீரில்

சேற்றில், குட்டையில், குளத்தில், ஏரியில் பூக்கிறது தாமரை. சேறு சகதியும் நீரும் கலந்தது. குட்டை, குளம், ஏரி முதலியவை பற்றி உங்களுக்குத் தெரியும்,

உயரிய நிலையில் வைத்துப் பேசப்படும் தாமரை, கடவுளின் இருக்கை என்று கூறப்படும் தாமரை, கடவுளின் மலரடிகளில் காணிக்கையாக வைக்கப்படும் தாமரை பிறக்கின்ற இடம், சேறு, குட்டை போன்ற மட்டமான இடம். சேற்றிலும் குட்டையிலும் எருமை தான் வாசம் செய்யும். 'குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொள்வதா?' என்று ஒரு பழமொழி. சேறு நாற்றமடிக்கும். குட்டையும் தூய்மையாக இராது. அந்த நாற்றம் நிரம்பிய, தூய்மையற்ற நீர்ப்பரப்பில்தான் மணக்கும் தாமரைப்பூ மொட்டு விரிக்கிறது.

தாமரைப்பூவின் மணம் அருமையான மணம். தண்ணீர்ப் பானையில் தாமரைப் பூவைப் போட்டு வைப்பதுண்டு. தண்ணீர் நல்ல மணமாக இருக்கும். தாமரைப்பூவும் மொட்டும், தின்பதற்கு மிகச் சுவையானவை. நான் சிறு பிள்ளையில் நிறையத் தின்றிருக்கிறேன். உங்களுக்கு வாய்ப்புக் கிடைத்தால் நழுவ விடாதீர்கள். தாமரையின் உயர்வை இன்னும் கூறிக் கொண்டே செல்லலாம்.

அத்தகைய உயரிய தாமரை பிறக்கும் இடம் மட்டமான குட்டை. இந்த உண்மையை நீதிவெண்பா அழகாக எடுத்துரைக்கிறது.

> **தாமரைபொன் முத்துச் சவரங்கோ ரோசனைபால்**
> **பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வாது—ஆமழன்மற்று**
> **எங்கே பிறந்தாலும் எள்ளாரே நல்லோர்கள்**
> **எங்கே பிறந்தாலும் என். [1]**

பொன்னின் கதை

தாமரை மட்டுமா? பொன்னின் கதையும் அது தான். பொன் எங்கே கிடைக்கிறது? தங்கச் சுரங்கத்தில் என்று உடனே பதில் சொல்வீர்கள். மலேசியாவில்

ரவூப்பில் தங்கச் சுரங்கம் இருக்கிறது. தென்னாட்டில் உள்ள கோலார் தங்க வயலைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பொன் விளைவது மண்ணில். பொன் எங்கே? மண் எங்கே? மண்ணாய்ப் போக என்று திட்டுவது உண்டு. மண்ணாய்ப்போவதென்பது கடைசிநிலை- அதாவது வாழ்வு முடிந்தது என்று பொருள். அப்போதுதான் மனிதன் மண்ணோடு மண்ணாய் இரண்டறக் கலந்துவிடுகிறான். மண் அவ்வளவு இழிவானது. அதற்கு மாறாகப் பொன் மிக மிக உயர்வானது.

என்றும் மதிப்பு மாறாதிருப்பது பொன்னே

தோன்றியநாள்தொட்டு உலகம் எவ்வளவு மாறுதல்களுக்கு உள்ளாகி வருகிறது. ஆனால் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாகப் பொன்னின் மதிப்பு மட்டும் மாறவில்லை. பொன் உலகத்தின் ஆதி நாணயம். எத்தனையோ நாணயங்கள் கண்ணைமூடிக் கண்ணைத் திறப்பதற்குள் மதிப்பு இழந்துவிடுகின்றன. ஜப்பான் காலத்து வாழைத்தாறு நோட்டுக்கு இப்போது மதிப்பு உண்டா? பற்பொடி மடிக்கவேண்டுமானால் உதவும். ஒரு நாட்டு நாணயம் இன்னொரு நாட்டில் செல்லாது. எல்லா நாணயத்திற்கும் எல்லை உண்டு. ஆனால் பொன் உலகெங்கும் செல்லும். இன்னும் சொல்லப்போனால் பொன்னின் மதிப்பை அடிப்படையாக வைத்தே உலக நாணயச் செலாவணி அனைத்தும் நடக்கிறது. மதிப்பு மாறாத அகில உலக நாணயம் பொன்.

மாந்தர் மதிக்கும் பொன்னின் தோற்றம் மண்ணில்

பொன்னின் பெருமை இம்மட்டோ! பொன் மாந்தரைக் கவரும் அளவு வேறு எந்த உலோகமும் கவர்வதில்லை. பொன்னால் நகை பூட்டி அழகு பார்க்க விரும்

பாத பூவையரும் உண்டோ? பொன் என்றால் பெண்களுக்குக் கொள்ளை ஆசை. மாங்காய் மாலை, தேங்காய் மாலை என்று வகைவகையான அணிகலன்களைப் பொன்னில் செய்து போட்டுக்கொள்ளவேண்டும். திருமணத்தில் பெண்ணின் கழுத்தில் மணமகன் கழுத்துரு என்று கூறப்படும் மாங்கல்யத்தைக் கட்டுவான். தாலி என்பது மிக எளிய வடிவம். கழுத்துரு என்பது எவ்வளவு தங்கம் உண்டோ அவ்வளவு தங்கத்தையும் உருட்டித் திரட்டிச் செய்யப்படுவதாகும். ஆணும் பெண்ணும் வாழ்வு தொடங்கும்போது வலுவான அடிப்படை வேண்டும் என்பதற்காக இவ்வளவு பெரிய கழுத்துரு பொன்னில் செய்யப்படுகிறது. இந்தப் பழக்கத்தைச் செட்டிமார் நாட்டுத் திருமணங்களில் இன்றும் காணலாம்.

பொன்னின் சிறப்பு வானினும் பெரிதென்னலாம். பொன்னின் மதிப்பு அத்தகையது. அத்தகைய பொன் கேவலம் மண்ணிலிருந்துதான் வெட்டி எடுக்கப் படுகிறது!

சிப்பியில் முத்து

முத்து விலை மதிப்பற்றது. கடலில் விளைவது முத்து. சிப்பிப் பூச்சியிலிருந்து முத்து கிடைக்கிறது. சிப்பிக்குள்ள மதிப்பு உங்களுக்குத் தெரியும். கடற் பகுதியில் கால்பட்ட இடமெல்லாம் சிப்பி கிடக்கும். அந்தச் சிப்பியில்தான் முத்து பிறக்கிறது. சிப்பிக்குள்ள மதிப்பு எங்கே? முத்துக்குள்ள மதிப்பு எங்கே? சேற்றில் முளைக்கும் செந்தாமரைபோல, மண்ணில் விளையும் பொன்போல சிப்பியிலிருந்து முத்து விளைகிறது.

பெரிய பட்டியல்

தாமரை, பொன், முத்து மூன்றும் உயரிய பொருள்கள்—அவை பிறப்பதோ தாழ்ந்த இடத்தில். நீதிவெண்பா இந்த வரிசையில் ஒரு பெரிய பட்டியலையே அடுக்குகிறது.

சாமரம் என்பது ஒருவகை விசிறி. அரசர்களுக்குச் சாமரத்தினால்தான் வீசுவார்கள். கோயில்களில் சாமி புறப்பாட்டின்போது இருபுறமும் இருவர் சாமரம் கொண்டு வீசுவதைக் காணலாம். சாமரம் விசிறிகளில் மேன்மையானது. கடவுளுக்கும் மன்னர்க்கும் வீசப்படும் சாமரம், கேவலம் ஒரு விலங்கின் மயிர்க் கற்றை.

அடுத்துவருவது கோரோசனை. அது தலைசிறந்த மருந்து. எல்லாவீடுகளிலும் கோரோசனை மாத்திரை வைத்திருப்பார்கள். அந்தக் கோரோசனை எங்கே கிடைக்கிறது தெரியுமா? பசுவின் வயிற்றிலிருந்து எடுக்கப்படுகிறது.

பாலும் தேனும்

பால் தலைசிறந்த உணவு. குழந்தை முதல் குடுகுடு கிழவர் வரை அனைவரும் சாப்பிடக்கூடிய உணவு பால் ஒன்றுதான். உலகம் முழுதும் உண்ணப்படுகிற உணவு அது. பால் மனிதர்க்கு வேண்டிய எல்லாச் சத்தும் நிறைந்த முழுமையான உணவு என்பதும் குறிப்பிடத் தக்கது. அத்தகைய பாலை நமக்குத் தருவது பசு. ஆவின் மடியிலிருந்துதான் நாம் பாலைப் பெறுகிறோம்; பருகுகிறோம். பால் இல்லையேல் தயிர், மோர், வெண்ணெய், நெய் முதலான எத்தனையோ உணவுப் பொருள்கள் நமக்கு இல்லை. அத்தகைய இன்றியமையாத

உணவான பால் நமக்குக் கேவலம் மாட்டிலிருந்து தான் கிடைக்கிறது.

இந்தப் பட்டியலில் அடுத்து வருவது தேன். தேனைச் சாவா மருந்து என்று சொல்வார்கள். நீடித்த வாழ்க்கைக்குத் தேன் நல்ல உணவு. இந்தத் தேன் எங்கே கிடைக்கிறது? நம்மில் பலருக்குக் கடையில் கிடைக்கும் தேனைப் பற்றித்தான் தெரியும். கடைகளில் அழகிய புட்டிகளில் தேனை விற்கிறார்கள். ஆனால் தேன் எடுக்கப்படும் அடையைப் பார்த்தால் யாருக்கும் உமட்டல்தான் வரும். தேன் அடையில் ஒரே தேனீயாக இருக்கும். அடையை அப்படியே பிழிவார்கள். ஈக்கள் அந்தத் தேனில் மிதக்கும். பார்க்கும் யாருக்கும் அருவருப்பாக இருக்கும். தேன் சேகரிப்பு இப்பொழுது செயற்கை முறையில் நடைபெறுகிறது. மரங்களில் தேனீக்கள் கூடுகட்டி, அங்குச் சேமிக்கும் தேனின் சுவை இணையற்றது. கொம்புத்தேன் என்று அதனைப் பெருமையாகச் சொல்வார்கள். இனிக்கும் தேன் பிறக்கும் இடம் தேனடை. அது அருவருப்பானது.

பட்டு உடம்பில் பட்டாலே இன்பம்

தொட்டுத் தொட்டுப் பார்த்து நாம் உள்ளம் களிக்கும் மெல்லிய பட்டு, பட்டுப் பூச்சிகளின் சாவிலேயே நமக்குக் கிடைக்கிறது. இதனால் ஒரு சில பெரியோர்கள் பட்டாடையை விரும்புவதில்லை. பட்டு உடம்பில் பட்டாலே இன்பம்; அதனை உடுத்திக்கொண்டிருப்பது அதனைவிட இன்பம். அத்தகைய பட்டின் பிறப்பு நாம் மனம் புழுங்கும் விதத்தில் இருக்கிறது.

சிறிது பூசினாலும் மேனியெல்லாம் மணக்கும் புனுகு, ஒரு வகைப் பூனையின் அழுக்குத் திரட்சி என்று அறியும்போது நாம் எத்தனை அருவருப்பு அடை

கிறோம்! புனுகுப் பூனை என்றே ஒருவகைப் பூனை உண்டு. அந்தப் பூனையின் அழுக்குத்தான் நமக்கு மணக்கும் புனுகாகக் கிடைக்கிறது.

நெருப்பு ஐம்பூதங்களில் ஒன்று. ஆனால் அது வெறும் மரக்கட்டையை எரித்தால் கிடைக்கும்.

தாமரை, பொன், முத்து, கோரோசனை, சாமரம், பால், தேன், பட்டு, புனுகு முதலிய எல்லா நல்ல பொருள்களுமே மட்டமான இடத்திலேயே பிறக்கின்றன என்று கண்டோம்.

நல்லவரை உலகம் ஏற்கும்

சேற்றில் பூத்தது என்பதற்காகச் செந்தாமரையை யாராவது விலக்குகிறார்களா? மண்ணில் கிடைத்தது என்று பொன்னை யாராவது ஒதுக்குகிறார்களா? சிப்பியில் விளைந்ததென்று முத்தை யாராவது வெறுக்கிறார்களா? ஒருபோதும் இல்லை. நல்ல பொருள்களையும் நல்லவர்களையும் அவர்கள் எங்கே பிறந்திருப்பினும், உலகம் ஏற்கும், இகழாது.

மேன்மக்கள் எனப்படுவோர், உலகிற்கு வழிகாட்டிய பெரியவர்கள் எனப்படுவோர்கள், பெரும்பாலும் எல்லோருமே ஏழைக்குடியில் பிறந்தவர்களே! ஊர் பேர் தெரியாது வறுமையில் வாடிய ஏழைக்குடிகளில் பிறந்த நன்மக்கள் பலர் தங்கள் வாழ்க்கையின் பிற்காலத்தில் உலகம் புகழும் நல்ல பணிகளைச் செய்து தங்கள் குடிக்கே சிறப்பைத் தேடித்தந்துவிடுகிறார்கள்.

'பிறந்தது எங்கே?' என்ற ஆராய்ச்சி தவறு. சிறந்தவர்கள் என்றால் பிறந்த இடம் எதுவாயினும் இருகைகூப்பி ஏற்பதுதான் முறை. இந்த நீதியைத் தான் நீதிவெண்பா நமக்கு எடுத்துரைக்கிறது.

12

வளைந்து பாடுபடு, உயர்வு உறுதி

தொட்டிற் பழக்கம்

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' என்று கேட்பார்கள். இளமையில் திருந்தாத வாழ்க்கை முதுமையில் திருந்த வாய்ப்பே இல்லை என்பதுதான் இதன் பொருள். ஐந்து வயதில் ஏற்படாத மாறுதலை ஐம்பது வயதில் எப்படி எதிர்பார்க்க முடியும்? ஒரு மனிதனின் எதிர்கால வாழ்க்கைக்கான அடிப்படை, ஐந்து வயதுக்குள் முற்றிலும் அமைக்கப்பட்டு விடுவ தாக உளநூல், உடல்நூல் ஆராய்ச்சியாளர் கூறுகின்ற னர். ஆகவே இளமையிலேயே பிள்ளைகளைத் திருத்திக் கொண்டு வரவேண்டும். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் அன்றோ?'

இளமைப் பருவம்

'இளமையிற் கல்வி சிலைமேல் எழுத்து' என்பது பழமொழி. படிப்புக்கு நல்ல காலம் இளமைக் காலம். இளமையில் படிப்பது பசுமரத்தாணிபோல் மனத்தில் நன்கு பதியும். இளமையில் இருக்கிற மனத்தெளிவும் கவலையற்ற உள்ளமும் கவனமும் முதுமையில் எவருக் கும் இரா. கல்விக்குக் கவலையற்ற உள்ளம் மிகத் தேவை. கவலை சுமந்த உள்ளத்தில் கல்வி புகாது.

இளமைக் காலம் கவலையற்ற காலம். பள்ளி மாணவர்களாகிய உங்களுக்குக் கவலை என்றால் என்னவென்றே தெரியாது! நீங்கள் பறக்கும் சிட்டுக்குருவிகளைப் போன்றவர்கள். வேளா வேளைக்கு வீட்டில் அம்மா உணவு படைப்பார். அப்பா உங்களுக்கு வேண்டிய துணிமணிகள், புத்தகம் முதலியவற்றை வாங்கித் தருவார். கைச் செலவுக்கும் காசு தருவார். பிறகென்ன? உங்களுக்கு நீங்களே ராஜா! இளமைக் காலம் அத்தகைய அருமையான காலம். அந்தக் காலத்தை வீணாக்காது வருந்திப் படிக்கவேண்டும். கல்விச் செல்வத்தை இயன்ற மட்டும் தேடிக்கொண்டுவிட் வேண்டும்.

எல்லா நல்ல பழக்கங்களும்

படிப்பு மட்டுமல்ல, எல்லா நல்ல பழக்கங்களுமே இளமையில் அமைந்துவிட வேண்டும். 'இளமையில் சோம்பல் முதுமையில் மிடிமை' என்னும் பழமொழி நமக்கு நல்ல எச்சரிக்கை. சோம்பலுக்கு இளமையில் இடங் கொடுத்துவிட்டால், முதுமையில் வறுமையின் கோரப் பிடியில் சிக்கித் தவிக்க நேரிடும். இளமையிலேயே உடலை வருத்தி உழைக்கக் கற்றுக்கொள்ளாதவர்கள், வயதான பிறகு சோம்பலுக்கு ஆட்பட்டு, வாழ வழியறியாது, வறுமையில் வாடுவார்கள். 'இளமையில் முயற்சி முதுமையில் காக்கும்'. தளரா முயற்சி இளமையில் தேவை. 'விளையும் பயிர் முளையிலே' என்னும் பழமொழியும் இளமைப் பருவத்தின் முதன்மையையே விளக்குவதாகும்.

இளமையிற் கல்

'இளமையிற் கல்' என்று ஆத்திசூடி கூறுகிறது. இளமையிலேயே வருந்திக் கற்றால்தான் பிற்கால

வாழ்க்கை சிறக்கும். பெருமை சேரும். இல்லையேல் சிறுமையே வரும். இக்கருத்தை நீதிவெண்பா அழகிய உவமை மூலம் எடுத்துரைக்கிறது:

வருத்தவளை வேயரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில்—தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாம் திரிந்து
தாழும் அவர் தம்மடிக்கீழ்த் தான். [7]

வளைந்த மூங்கிலும் வளையாததும்

ஒரே மூங்கில்—ஒன்று மன்னரின் மாமுடிக்கு மேலே இருக்கும் பேறு பெறுகிறது. மற்றொன்று ஏழைக் கூத்தாடியின் கைப்புகுந்து மழையிலும் வெயிலிலும் அந்தக் கூத்தாடியைப்போல அவதிப்படுகிறது. இரண்டும் ஒரே மூங்கில் மரமே. ஒரு மூங்கில் மன்னரின் முடிக்கு மேல் பல்லக்குக் கொம்பாய் அமைந்துவிடுகிறது. மற்றொரு மூங்கிலோ பிச்சைக்காரர் கையிலும் கழைக் கூத்தாடியின் கையிலும் சிக்கிக் காலில் மிதிபடுகிறது. இந்த வேறுபாட்டுக்குக் காரணம் என்ன? வளைந்த மூங்கில்—அதாவது இளமையிலேயே வளைக்கப்பட்ட மூங்கில் அதன் வளைவு காரணமாகப் பல்லக்குக் கட்டப் பயன்படுகிறது. அதனால் அது அரசரின் முடிக்கு மேலே இருக்கும் சிறப்பைப் பெற்றுவிடுகிறது. வளையாமல், வளைக்கப்படாமல் நெடுமரம்போல் வளர்ந்த மூங்கில், கழைக்கூத்தாடிகளின் தடிக் கம்பாகத்தானே பயன் பட முடியும்? இது இளமையில் வளையாததால் நேர்ந்த வினை!

மூங்கில் காட்டை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? மரக்கடைகளில் மூங்கில் வரிசை வரிசையாகச் சார்த்தி வைத்திருப்பதை நீங்கள் கண்டிப்பாகப் பார்த்திருப் பீர்கள். மாந்தருக்கு நன்கு பயன்படும் மரங்களில்

மூங்கில் ஒன்று. மூங்கிலின் பெரிய பயன் கொட்டகை போட உதவுவது. குடிசை வீடுகளுக்கு மூங்கில் கம்புகள் நிறைய வேண்டும். மாநாட்டுப் பந்தல்கள், நாடகக் கொட்டகைகள், திருமணப் பந்தல்கள் முதலியவை போடுவதற்கு தென்னங்கீற்றும் மூங்கிலும் தேவை. இவை இரண்டும் இருந்தால் விதம் விதமான பெரிய பந்தல்களை எழுப்பிவிடலாம். லட்சக்கணக்கில் மக்கள் அமரக்கூடிய பந்தல்களைத் தமிழகத்தில் மூங்கிலாலும் தென்னங்கீற்றினாலும் கட்டிவிடுகிறார்கள்.

மூங்கிலைக் குருத்தாயிருக்கும்போது எப்படி வேண்டுமானாலும் வளைக்கலாம். மூங்கில் காடுகளில் மூங்கிலைப் பலவகையாக வளைத்துக் கட்டியிருப்பதைக் காண முடியும். வளைத்துக் கட்டிவிட்டால், வளைந்த அந்த வடிவிலேயே மூங்கில் உறுதிப்பட்டுவிடும். பிறகு அது எந்த நோக்கத்திற்காக வளைக்கப்பட்டதோ அதற்கு நன்கு பயன்படும்.

குருத்தாயிருக்கும் சமயத்தைத் தவறவிட்டால் மூங்கில் உறுதிப்பட்டு நெடுமரமாகத் தன் போக்கில் வளர்ந்துவிடும். அவ்வாறு உறுதிப்பட்ட பிறகு அதனை நம் விருப்பப்படி வளைக்க முடியாது. நெடுமரமாகத் தன் மூப்பில் வளர்ந்த மூங்கில்களைப் பல்லக்கில் வைத்துக் கட்ட முடியாது. அது பிறகு கழைக்கூத்தாடிகளுக்குத் தடிக்கம்பாகப் பயன்பட வேண்டியதுதான்.

தெருவில் வித்தை காட்டும் பேர்வழிகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவர்கள் கையில் ஒரு கழி இருக்கும். எதெற்கெடுத்தாலும் அந்தக் கழியைத்தான் அவர்கள் ஆட்டுவார்கள். அவர்களின் மந்திரக்கோல்—வித்தைக் கம்பு அது. அந்தக் கம்புக்கும் கழைக் கூத்தாடிகளைப்போல் நாடோடியாக நாடெல்லாம்

திரிந்து, வெயிலிலும் மழையிலும் வாடும் வறுமை வாழ்க்கைதான்.

மன்னரின் பல்லக்கில் அவர் மணிமுடிக்கு மேலே இடம் பிடித்ததும் ஒரு மூங்கில்தான்! வயிற்றைக் காட்டி வாயைக்காட்டிப் பிழைக்கும் ஒரு கூத்தாடியின் கையில் அகப்பட்டதும் ஒரு மூங்கில்தான்.

வளைந்ததால் உயர்ந்தது

இளமையில் வளைந்ததால் ஒன்று உயர்ந்தது; இளமையில் வளையாததால் மற்றொன்று தாழ்ந்தது.

வளைந்தால் வாழ்வுண்டு என்பதையே மூங்கிலின் வாழ்க்கை நமக்கு உணர்த்துகிறது. 'முதுகு வளைந்து வேலைபார்க்க வேண்டும்' என்று சொல்வார்கள். வளைவது உழைப்பைக் குறிக்கும். சிறுபிள்ளையில் நன்கு வளர்க்கப்படாதவர்கள், பிற்காலத்தில் முரடர்களாகத் தங்களுக்கும் நாட்டுக்கும் எவ்வகையிலும் பயன்படாத தறுதலைகளாகத் திரிவார்கள். அவர்களை யாரும் கட்டுப்படுத்த முடியாது. எவருக்கும் அவர்கள் பணிய மாட்டார்கள். குண்டர்களாகவும், திருடர்களாகவும் கொள்ளைக்காரர்களாகவும் பலர் உருவாகும் வகை இது தான். இளமையில் வளைக்கப்படாதவர்கள் அவர்கள்.

சோம்பல் மிகக் கெடுதி

இளமையிலேயே நல்ல பண்புகள் அமைந்துவிட வேண்டும். பொய் சொல்லக்கூடாது, திருடுவது தவறு முதலிய அடிப்படை நீதிகள் இளமையிலேயே உள்ளத்தில் உரமாகச் செலுத்தப்பட்டுவிட வேண்டும். படிப்பின் சிறப்பு உணர்த்தப்பட்டு, கல்வியில் முழு ஈடுபாடும் இளமைக் காலத்தில் செல்லும் வகை செய்ய வேண்டும். படிப்பில் அசட்டை, புறக்கணிப்புக்கு

இடந்தரக் கூடாது. பெரியோரிடம் பணிவு, தாய் தந்தையரிடம் மரியாதை, பணிவு, பெரியோர்களின் கட்டளைகளைக் கேட்டு நடத்தல் முதலிய ஒழுக்க நலன்கள் எல்லாம் சிறுபிள்ளையிலேயே முறையாக வந்துவிட வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாகச் சோம்பலுக்கு இளமையில் இடந்தரக்கூடாது. 'சோம்பரென்பவர் தேம்பித் திரிவர்' என்பது கொன்றை வேந்தன். வறுமைக்கு நல்வரவு கூறுவது சோம்பல்.

> **நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்**
> **கெடுநீரார் காமக் கலன்** [605]

என்று கூறுகிறது குறள். கெட்டுப் போகின்றவர்கள் ஏறுகின்ற கப்பல்களில் ஒன்றும் சோம்பல். அந்தச் சோம்பலுக்கு நம் பிள்ளைகள் ஒருபோதும் ஆட்படக் கூடாது.

உழைப்போரே உயர்வர்

இளமையிலேயே வருந்தி உழைக்கக் கற்றுக்கொண்டால் பிற்காலத்தில் உழைப்பின் பயனாகச் செல்வம் அவர்களுக்குக் குவியும். இளமையில் நன்கு கற்பவர்கள்' பிற்காலத்தில் அரசனும் போற்றும்படி பெருமையடைவார்கள். அவ்வாறு உடம்பை வளர்க்காமல் சோம்பலாகக் காலத்தை ஓட்டிய பிள்ளைகள், முதுமையில் குடிக்கக் கஞ்சியும் கட்டத் துணியும் இன்றி ஊர் ஊராய் அலைய நேரிடும்.

வளர்ந்த மூங்கில் பல்லக்குக் கம்பாகச் சிறக்கிறது. வளையாத மூங்கில் கூத்தாடியின் கைத்தடியாகத் தாழ்வடைகிறது.

உடம்பை வளர்த்துக் கல்விச் செல்வத்தையும் பிற செல்வங்களையும் தேடுகிறவர்களுக்குப் பிற்காலம் மிகச் சிறப்பாக இருக்கும்,

13

எண்ணித் துணிக கருமம்

கீரிப்பிள்ளை வளர்த்த கதை

பல குழந்தைகள் இந்தக் கதையை முன்பே படித்திருக்கக்கூடும். ஒரு பெண்மணி தனக்குக் குழந்தைப் பேறு கிட்டாததால் ஒரு கீரிப்பிள்ளையை வளர்த்து வந்தாள். அந்தக் கீரியைத் தன் உயிரினும் மேலாக அவள் போற்றி வந்தாள். சில ஆண்டுகள் கழித்து அந்த மாதுக்கு ஒரு குழந்தை பிறந்தது, தனக்கெனக் குழந்தை பிறந்த பிறகும், கீரிப்பிள்ளையிடம் அந்தப் பெண்மணியின் அன்பு குன்றவில்லை. தன் குழந்தையிடமும் கீரியிடமும் சமமாகவே அன்பு பாராட்டி வந்தாள்.

ஒருநாள் குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தூங்கவைத்துக் கீரியை அதற்குக் காவல் வைத்து விட்டுப் பக்கத்தில் இருந்த குளத்திற்கு நீரெடுக்கச் சென்றாள். அவள் போன பிறகு அந்த வீட்டிற்குள் ஒரு பாம்பு வந்தது. அது தொட்டிலின் பக்கத்திலும் வந்துவிட்டது. இன்னும் சற்றுப் பொறுத்திருந்தால், குழந்தையைப் பாம்பு கடித்திருக்கும், நல்ல வேளையாகக் கீரிப்பிள்ளை பாம்பைக் கண்டு விட்டது. உடனே பாம்பின்மீது பாய்ந்து அதனைத் துண்டு துண்

டாகக் கடித்துக் கொன்றது. குழந்தையின் உயிர் தப்பியது. சற்றுநேரத்தில் வீட்டுக்காரப் பெண்மணி தண்ணீர் எடுத்துக்கொண்டு வீடு திரும்பினுள். குழந்தையைக் காப்பாற்றிவிட்ட மகிழ்ச்சியில், கீரிப்பிள்ளை அவள் முன்னே ஓடிவந்து நின்றது. கீரியின் வாய் இரத்தம் படிந்து சிவப்பாயிருத்தலைக் கண்டு அவள் திடுக்கிட்டாள். தன் குழந்தையைத்தான் அது கொன்றுவிட்டது என்று அவள் தீர்மானித்துவிட்டாள். அவசரக்காரி! வந்த ஆத்திரத்தில் நீர்க் குடத்தைக் கீரியின் தலைமீது போட்டாள். பாவம்! கீரி அங்கேயே செத்துவிட்டது. பிறகு பெண்மணி வீட்டுக்குள் சென்ருள். அங்கே குழந்தை தொட்டிலில் நன்கு தூங்கிக் கொண்டிருந்தது. வெளியே ஒரு பாம்பு செத்துக்கிடந்தது. அப்போதுதான் கீரி செய்திருக்கும் நன்றியை அவள் உணர்ந்தாள். சற்றும் ஆலோசனை செய்யாமல் அவசரப்பட்டுக் கீரியைக் கொன்று விட்டோமே என்று துடிதுடித்தாள். அந்த ஏக்கம் தாங்காமலேயே அவள் உயிர்நீத்தாள்.

ஆத்திரக்காரருக்குப் புத்தி மட்டு

குழந்தைகளே! இந்தக் கதையிலிருந்து நாம் அறியும் நீதி என்ன? அவசரப்பட்டு எந்த முடிவும் செய்யக்கூடாதென்பதுதான் நாம் அறிந்துகொள்ளும் நீதி. கீரிப்பிள்ளைமீது ஐயப்பட்ட அந்தப் பெண்மணி வீட்டுக்குள் சென்று குழந்தையைப் பார்த்து விட்டு ஒரு முடிவுக்கு வந்திருந்தால், அவளும் பெற்ற குழந்தையைத் தவிக்கவிட்டு ஏக்கத்தால் மாண்டிருக்க வேண்டியதில்லை.

நீதிவெண்பாப் பாட்டு இந்தக் கதையையும் நீதியையும் ஒருங்கே எடுத்துரைக்கிறது:

செய்யும் ஒருகருமம் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபம் சேருமே—செய்யவொரு
நற்குடியைக் காத்த நகுலனைமுன் கொன்றமறைப்
பொற்கொடியைச் சேர்துயரம் போல். [16]

ஆத்திரமும் அவசரமும் ஆகாது

எந்தக் காரியத்தையும் ஆராய்ந்து செய்ய வேண்டும். அவசரப்பட்டு எந்த முடிவும் செய்யக் கூடாது. 'பதருத காரியம் சிதருது' என்பது பழமொழி. பதறிய காரியம் சிதறுவது திண்ணம். கீரிப் பிள்ளையை முன்யோசனையின்றிக் கொன்ற பெண் மணியின் செயல், அவசரப்பட்ட காரியம் எத்தகைய தீங்கு பயக்குமென்பதை நன்கு உணர்த்தும்.

'எண்ணித்துணிக கருமம்' என்பது வள்ளுவர் வாக்கு. 'தூக்கி வினை செய்' என்று ஆத்திசூடி கூறுகிறது. எந்தக் காரியத்தையும் தேர்ந்து புரிய வேண்டும்! தீரச் சிந்தித்துச் செய்யவேண்டும். ஆத்திரத்தில் அறிவிழந்துவிடக்கூடாது. ஆத்திரம் கண்ணை மறைக்கும். ஆத்திரம் கொட்டிக் கவிழ்த்துவிடும். ஆத்திரமும் அவசரமும் ஆகாது. எதனைச் செய்வதாயினும் முன்னர் எண்ணவேண்டும்; பின்னர் செய்ய வேண்டும். இப்படிச் செய்யும் காரியங்களுக்கு ஒரு நாளும் ட'ழுது வாராது.

தேர்ந்து புரிவது எப்படி?

தேர்ந்து புரிவதென்ருல், அதன் உட்கிடக்கை என்ன? ஒரு தொழில் தொடங்குகிருேமென்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு துணிக் கடை வைக்க நினைக்கிருேம். அப்போது நாம் என்னென்ன யோசிக்க வேண்டும்? துணிக் கடைக்குத் தேவையான

முதல் நம்மிடம் இருக்கிறதா? கடை வைக்கும் இடம் விற்பனைக்கு ஏற்ற இடமா? பக்கத்தில் போட்டா போட்டி மிகுதியாக இல்லாத இடமா? மாதத்திற்கு எத்தனை வெள்ளிக்கு விற்பனை நடக்கும்? அதில் அடக்கம் போக எவ்வளவு பணம் மிஞ்சும்? கடை வாடகை, ஆள் சம்பளம் முதலிய செலவுகள் எவ்வளவு வரும்? போடுகின்ற முதலுக்கு ஏற்ப ஊதியம் கிடைக்குமா? கடையை நடத்துவதற்குத் தக்க ஆட்கள் இருக்கிறார்களா? சரக்குகள் வரவழைக்க வசதி இருக்கிறதா? இத்தனை காரியங்களையும் எண்ணிப் பார்த்து, அவற்றுக்கு நம்மால் ஆகுமென்றால்தான் கடையைத் தொடங்க வேண்டும். அப்படியில்லாமல், ஏதோ அவசரப்பட்டு, கையில் இருக்கிற ஆயிரம், இரண்டாயிரத்தைப் போட்டு 'நானும் கடை நடத்துகிறேன்' என்னும் பெயருக்குத் தொழிலை ஆரம்பித்தால் இடையில் பெரிய அவதிப்பட நேரிடும். ஆதாயமும் வாராது—போட்ட முதலையும் இழக்கின்ற கட்டம் வரும். ஆகவே ஒரு காரியத்தைத் தொடங்குவதற்கு முன்பு பலவகையிலும் எண்ண வேண்டும். அதனால் வரக்கூடிய நன்மை தீமைகளை ஆராயவேண்டும். அதன் பிறகே ஒரு முடிவுக்கு வரவேண்டும்

சிந்தித்துச் செயல் புரிக

திருவள்ளுவர் 'எண்ணித் துணிக கருமம்' என்னும் அறிவுரையை மிக விரிவாக விளக்கியிருக்கிறார். 'தெரிந்துசெயல் வகை' என்னும் அதிகாரம் இந்த உண்மையை நன்கு அறிவுறுத்துகிறது.

> அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
> ஊதியமும் சூழ்ந்து செயல் [461]

என்பது அந்த அதிகாரத்தின் முதல் குறள். ஒரு தொழிலைத் தொடங்குகிறோமென்றால் முதலில் சிறிது காலத்திற்கு அதில் இழப்பு ஏற்படும். ஒன்றிரண்டு ஆண்டுக்குப் பிறகே ஊதியம் கிட்டும். ஆகவே எவ்வளவு நாளைக்குப் பணத்தை இழக்கவேண்டியிருக்கும்? எவ்வளவு தொகை அவ்வாறு இழப்பு ஏற்படும்? பிற்பாடு எப்போது ஆதாயம் வரும்? அது எந்த அளவுக்கு இருக்கும்? இதனையெல்லாம் தொழிலைத் தொடங்குவோர் முதலில் எண்ணிப் பார்க்கவேண்டும் என்பது தான் வள்ளுவர் கருத்து.

சிந்திக்கத்தக்கவை மூன்று

எதனையும் எண்ணித் துணியவேண்டும். பொது நன்மைக்காக ஒரு திட்டத்தைத் தொடங்கினால்கூட நன்கு சிந்தித்தே செய்ய வேண்டும். ஒரு பள்ளிக்கூடம் கட்டுவதென்று ஒரு சிற்றூரில் முடிவு செய்கிறார்கள். 5,000 பேர் வாழும் சிற்றூர் அது. அந்தச் சிற்றூரில் 5 லட்சம் வெள்ளிக்குப் பள்ளிக்கூடம் கட்டுவதென்றால் நடைபெறுமா? 'விரலுக்குத் தகுந்த வீக்கம்' என்பது போல ஊருக்குத் தகுந்த திட்டம் போடவேண்டும். ஆகக்கூடிய காரியத்தில் இறங்கவேண்டும். எவரை நிதி வசூலுக்குத் தலைவராகப் போட்டால், எல்லோரும் பணம் தருவார்களோ அவரைப் பொறுப்பாளியாக நியமிக்கவேண்டும். இந்தத் திட்டத்திற்கு வரக்கூடிய இடையூறுகள் எவை என்று எண்ணிப் பார்க்கவேண்டும். அந்த இடையூறுகளை எப்படிக் கடப்பது என்று யோசிக்கவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக அந்தப் பள்ளிக்கூடத்தினால் ஊருக்கு ஏற்படக்கூடிய நன்மையைக் கருதிப் பார்க்க வேண்டும்.

முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல் [676]

என்றார் வள்ளுவர். பள்ளிக்கூடம் கட்டுவது ஓர் எடுத்துக்காட்டு. இதுபோன்ற எல்லாத் திட்டங்களுக்குமே இந்தக் குறள் பொருந்தும்.

ஆராயாத செயல் அழிவு தரும்

ஆராயாமல் செய்தால் என்ன நேரிடும்? ஆராயாமல் தொழிலில் இறங்குகிறவர்கள் முதலை இழப்பார்கள். ஆராயாமல் பொதுப் பணிகளில் முனைகிறவர்களுக்கு ஏமாற்றமும் அவமானமுமே பரிசுகளாகக் கிடைக்கும். ஒருவரைத் தண்டிப்பது, கண்டிப்பதென்றாலும் முன்யோசனை தேவை. அவ்வாறு எண்ணிப் பாராமல் ஒருவரைத் தண்டித்துவிட்டால், பிறகு மனம் வருந்த நேரிடும். கீரிப்பிள்ளையை ஆராயாமல் கொன்றாள் ஒரு பெண்மணி. தனக்கு நன்மைசெய்த கீரிக்குத் தீங்கிழைத்தாள். அதன் விளைவாக அவள் ஏக்கத்தால் மடியநேர்ந்தது. எண்ணுமற் செய்வதால் நேரும் கேடுகளை இன்னும் எவ்வளவோ விரித்துரைக்க முடியும்.

நீதிவெண்பா சொல்லியிருக்கிற கதை அருமையான நீதியைத் தருகிறது. அவசரப்பட்டு முடிவு செய்கிறவர்களுக்கு இந்தக் கதை நல்ல படிப்பினை. அவசரப்பட்டு ஒரு தவறான முடிவைச் செய்துவிட்டால், வாழ்நாளெல்லாம் அதனை நினைந்து நினைந்து நாம் வருந்த நேரிடும். நீதிவெண்பா எண்ணித் துணியாதவர்களுக்கு நேருகின்ற கேடு என்று சுட்டுவது இதுதான். தீர யோசிக்காமல் ஒருவருக்குத் தீங்கிழைத்துவிடுகிறோம். அதன் பிறகு நல்லவருக்குத் தீங்கிழைத்துவிட்டோம் என்னும் நினைப்பே, நம் உள்ளத்தைப்

படாதபாடு படுத்திவிடும். நம் மனச் சான்றே நம்மைச் சுட்டெரித்துவிடும். வெளியில் யாரும் நம்மைத் தண்டிக்க வேண்டியதில்லை. நம் உள்ளமே நம்மைக் கொன்றுவிடும்.

செய்யும் கருமங்களைத் தேர்ந்து புரியாதவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பெரிய தண்டனை மன உளைச்சல். நீதிவெண்பா தனியாகச் சுட்டிக்காட்டுகிற அறிவுரை இது.

பதறாத காரியம் சிதறாது

'எண்ணித் துணிக கருமம்' என்பது நம் தம்பி தங்கைகளின் மூலமந்திரமாக இருக்க வேண்டும். சிறு பிள்ளையிலேயே எண்ணித் துணிகின்ற பண்பு கைகூடி விட்டால் பிற்காலத்தில் வாழ்க்கை வெற்றியடைவது திண்ணம். 'துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு'. தொடங்கிய பிறகு யோசிக்கும் அவதிப்பட்ட வேலைக்கு இடம் வைத்துக்கொள்ளவே கூடாது.

தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர் [464]

என்னும் குறள் இக் கருத்தை நன்கு வலியுறுத்தும்.

'பதறாத காரியம் சிதறாது'. முன்னர் நன்கு எண்ண வேண்டும்; பின்னர் செயலில் இறங்க வேண்டும். இப்படிச் செய்கின்ற கருமங்களுக்கு ஒருநாளும் பழுது வாராது. நீதிவெண்பா சுட்டிக்காட்டுகிற மன உளைச்சலை, தீராத மன வேதனையை, ஏக்கத்தை எண்ணிப் பார்த்துச் செயல்புரிகின்றவர்கள் ஒருநாளும் அனுபவிக்க வேண்டியதில்லை. செய்யும் கருமங்களைத் தேர்ந்து புரிந்தால், வாழ்க்கையில் வெற்றி தேடிக் கொண்டு வரும்.

14

உலகம் விரும்புவது இனிய சொல்

குயிலின் கூவல்

குயில், கழுதை இரண்டையும் பற்றி இப்போது ஆராய்வோம். குயிலின் குரல் மிக இனிமையானது. சிறந்த குரலுள்ள இசைக் கலைஞர்களை நாம் 'இசைக் குயில்' என்று கூறுகிறோம். 'கோகிலகான இசைவாணி', 'இசைக் கோகிலம்' என்னும் சிறப்புப் பட்டங்களும் வழக்கில் இருந்து வருகின்றன. கோகிலம் என்பது குயிலையே குறிக்கும். குயிலின் நிறம் கறுப்பு. ஆனால் அதன் குரல் இனிப்பு. கவிஞர்களின் கற்பனைக்குக் குயில் நல்ல பொருள். பாரதியார் எழுதியிருக்கும் 'குயில் பாட்டு' அருமையான இலக்கியம். 'குயில் குரலும் மயில் அழகும்போல்' என்பது பழமொழி. பாட்டுக்குக் குயில்; ஆட்டத்திற்கு மயில். மயிலைக் கண்குளிரப் பார்த்துக்கொண்டே இருக்கலாம். ஆனால் குயிலின் கறுப்பு நிறம் கண்ணுக்கு அவ்வளவாகக் குளிர்ச்சி பயவாது. ஆனால் குயிலின் பாட்டைக் காதாரக் கேட்டுக்கொண்டிருக்கலாம். குயிலுக்குள்ள சிறப்பெல்லாம் அதன் குரலினிமைதான். குயிலின் குரல் அத்துணை அமிழ்தம்!

கழுதையின் கத்தல்

கழுதையின் நிலை இதற்கு நேர்மாறு. கழுதை என்றவுடனேயே நாம் இரு காதையும் பொத்திக் கொள்வோம். கழுதையின் குரலில் நமக்கு அவ்வளவு வெறுப்பு. கழுதை காலால் உதைக்கும் என்று முதல் வகுப்பில் பாடம் சொல்லித் தருவார்கள். கழுதை நம் பிள்ளைகளுக்கு அறிமுகமாகிற வகை இதுதான். கழுதை சலவைத் தொழிலாளர்களுக்கு நல்ல தோழன். அது அழுக்கு மூட்டைகளை நன்கு சுமக்கும். மலேசியா வில் கழுதை பொதி சுமப்பதைப் பார்க்க முடியவில்லை. நல்ல வெயில் நேரத்தில் இருபுறமும் பெரிய பெரிய மூட்டைகளைக் கழுதைகள் சுமந்து செல்வதைத் தமிழ் நாட்டில் சிற்றூர்களில் காணலாம். 'கழுதை பொதி சுமக்கும் நேரம்' என்னும் பேச்சு வழக்கும் உண்டு. மோட்டார் வண்டி பல்கிவிட்ட இந்நாளில் கழுதைக்கு வேலையில்லை. அமரர் நேரு ஒருசமயம் இந்தியாவின் வட எல்லையிலுள்ள பூட்டான் என்னும் நாட்டுக்குச் சென்றிருந்தார். அந்த நாட்டின் சில பகுதிகளில் கழுதைமீதுதான் பயணம் செய்ய வேண்டும். நேரு அவ்வாறு பயணம் செய்ததைக் காட்டும் படங்கள் செய்தி இதழ்களில் வந்தன. கழுதை சவாரி உலகின் சில பகுதிகளில் இன்னும் நடைமுறையில் இருந்து வருகிறது.

கழுதை ஓர் இகழ்ச்சிப் பொருள்

கழுதையை மனிதர்கள் மிக மட்டமான பொரு ளாகக் கருதுகிறார்கள். யாரையும் திட்டுவதற் குக் 'கழுதை' என்னும் சொல்லை நாம் அடிக்கடி பயன் படுத்துகிறோம். பள்ளியில் குறும்பு பண்ணும் பையனை ஆசிரியர் 'கழுதை' என்று ஏசுவார். வீட்டிலும் உங்கள்

தோழர்கள் சிலருக்குக் ‘கழுதை’ என்னும் பட்டம் கிடைத்திருக்கும். ஆனுல், நீங்கள் எல்லோரும் நல்ல பிள்ளைகள். ஆதலால் இந்தச் சிறப்பைப் பெற்றிருக்க மாட்டீர்கள்!

‘கழுதை சவாரி’ நல்ல தண்டனை. பழங்காலத்தில் ஊருக்கு ஆகாத காரியம் செய்பவர்களை மொட்டை அடித்துத் தலையிலும் உடம்பிலும் கரும்புள்ளி செம் புள்ளி குத்திக் கழுதைமீது ஊர்வலம் வரச் செய்வார் களாம். ஊரெல்லாம் பார்த்து நகைக்கும். ஒருவருக்கு இதற்குமேல் எப்படிக் கடுமையான தண்டனை கொடுக்க முடியும்?

இனிமையைத்தான் உலகம் விரும்பும்

கழுதை சில சமயங்களில் கத்தும். ஐயையோ! அதனை நாராசம் என்று சொல்வார்கள். ஈயத்தைக் காய்ச்சிக் காதில் ஊற்றினுல் எப்படி இருக்கும்? அந்த மாதிரியான கொடுமை நிறைந்தது, கொடூரமானது கழுதையின் ஒலி. கழுதையின் வாய்ப்பாட்டை எவரும் விரும்புவதில்லை. கழுதைக்கு இசையுலகில் ரசிகர்களே கிடையாது. கழுதையின் குரல் அவ்வளவு கசப்பு.

கழுதையைக் கண்டால் சிறுவர்கள் வாலில் ஓலை யைக் கட்டி வெருட்டுவார்கள். கூக்குரலிட்டால் கல் லெறிதான் அதற்குப் பரிசாகக் கிடைக்கும்.

குயிலும் கழுதையும் இசையுலகில் தென் துருவம் வட துருவம்போல. ஒன்று இமயமலை. மற்றொன்று கண்காண முடியாத ஆழ்கடல். குயில் இசை வட்டா ரத்தில் ஈடிணையற்ற மன்னன். கழுதைக்கு அங்குக் கால் வைக்கவும் தகுதியில்லை. குயிலுக்கும் கழுதைக்கும்

உள்ள இந்த மலையத்துணை வேறுபாட்டை நீதி வெண்பா எடுத்துரைக்கிறது:

மென்மதுர வாக்கால் விரும்பும் சகங்கடின
வன்மொழியி னுல்இகழும் மண்ணுலகம்—நன்மொழியை
ஓதுகுயி லேதங் குதவியது கர்த்தபந்தான்
ஏதபராதம் செய்த தின்று. [4]

குயிற் பறவையின் குரலைக் கேட்டு நாம் உள்ளம் பூரித்துப் போகிறோம். கழுதையின் நாராசத்தைக் கேட்டு நாம் உள்ளம் குமைகிறோம். இதற்குக் காரணம் என்ன? குயில் நமக்கு ஏதாவது உதவியதா? ஆயிரம், இரண்டாயிரம் என்று பணம் கொடுத்ததா? இல்லை. குயில் நமக்கு உறவு முறையா? சரி கழுதை ஏதும் தவறு செய்ததா? நாம் வருத்தப்படும்படியாகக் குற்றம் இழைத்ததா? இரண்டும் இல்லை. அப்படியிருந்தும் குயிலின் குரலுக்கு நாம் ஏன் மகிழ்கிறோம்? கழுதையின் குரலை ஏன் அடியோடு வெறுக்கிறோம்? இங்கேதான் நாம் அறிந்துகொள்ளவேண்டிய உண்மை இருக்கிறது. இனிமையான குரல் இயல்பாக யாரையும் மகிழ்விக்கும். கடுமையான குரல் யாரையும் வெருட்டும். இனிமையை உலகம் விரும்புகிறது. கடுமையை உலகம் வெறுக்கிறது. இந்த உண்மையைத்தான் நீதிவெண்பா எடுத்துரைக்கிறது.

இனிப்பு எல்லாரையும் கவரும்

வீட்டில் கற்கண்டுப் போத்தலைத் தம்பி தங்கைகள் சுற்றிச் சுற்றி வளையம் வருவார்கள். எத்தனை தடவை கற்கண்டு வாங்கி வைத்தாலும் அது காலியாகிக்கொண்டுதான் இருக்கும். பிள்ளைகள் கண்ணில் படக்கூடாது என்பதற்காக அம்மா மாற்றி மாற்றி எந்தெந்த இடங்களிலேயோ வைத்துப் பார்ப்பார்.

உங்களிடம் இந்த ஒளிவு மறைவு வித்தை நடக்குமா? கற்கண்டுச் சீசா எங்கே இருக்கிறதென்பதை நீங்கள் நொடியில் கண்டுகொண்டு விடுவீர்கள்! உங்கள் ஊசிக் கண்ணை ஏமாற்ற முடியுமா? கற்கண்டு, சீனி, வெல்லம், மிட்டாய் முதலிய இனிப்புப் பண்டங்களுக்கெல்லாம் இந்த நிலைதான்! அதே சமயத்தில் வீட்டில் வேறு எத்தனையோ பண்டங்கள் இருக்கும். எடுத்துக்காட்டாக விளக்கெண்ணெய் ஒரு புட்டியில் இருக்கும். அதனை யார் தீண்டுவார்கள்? ஒரு பிள்ளைகூட அதன் பக்கம் போகாது. ஆண்டு பத்தானாலும் விளக்கெண்ணெய் வைத்தது வைத்தபடியே இருக்கும். கற்கண்டுக்கு வரவேற்பும் விளக்கெண்ணெய்க்குக் கதவடைப்பும் ஏன்? கற்கண்டு இனிக்கும். அதனால்தான் அதற்குப் பிள்ளைகளிடம் அவ்வளவு வரவேற்பு! விளக்கெண்ணெய் குமட்டும். வாயில் வைக்க முடியாது. அதனால் தான் அதனிடம் எல்லாப் பிள்ளைகளுக்கும் வெறுப்பு.

ஆகவே, இனிப்பின் இயல்பு எவரையும் கவர்வது என்பதைக் கற்கண்டும் நமக்குக் காட்டுகிறது.

இசையும் மழலையும்

இசை பொல்லாத பாம்பையும் கட்டுப்படுத்தி விடுகிறது. மகுடிக்குக் கட்டுப்பட்ட நல்லபாம்பு பாம்புப் பிடாரன் ஆட்டி வைக்கிறபடி படம் விரித் தாடக் காண்கிறோம். இசைக்குச் செடி கொடிகளை நன்கு வளரச் செய்யும் ஆற்றல் இருக்கிறதென்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். தண்ணீர் ஊற்றி வளர்ப்ப தோடு பாட்டுப் பாடியும் செடி கொடிகளை வளரச் செய்யவேண்டிய நிலை பிறந்துள்ளது. பிள்ளை பேசும் மழலை மொழி யாழையும் குழலையும்விட இனிமை

பயப்பது. தம் பிள்ளேயின் மழலேச் சொற்களேக் கேட்கும்போது பெற்ருேர் எவருக்குத்தான் மகிழ்ச்சி பிறவாது? இசைக்குள்ள கவர்ச்சி, மழலேக்குள்ள வரவேற்பு எல்லாமே இனிமைக்குள்ள ஆற்றல்தான்!

இன்சொல்லும் வன்சொல்லும்

நன்னெறியில் படித்திருக்கிருேம். 'இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம் வன்சொலால் என்றும் மகிழாதென்று.' உலகுக்கு வேண்டியது இனிய சொல்; உலகம் விரும்புவதும் இனிய சொல்; உலகை மகிழ்விப்பதும் இனிய சொல். இந்த உண்மையைக் கண்டு கொண்டவர்கள் ஒருபோதும் கடுமையான சொற்களே உதிர்க்கமாட்டார்கள்.

இனிய உளவாக இன்ஞத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று [100]

என்று வள்ளுவர் கூறுகிருர். தித்திக்கும் பழம் கூடை கூடையாக இருக்கும்போது, உவர்க்கும் காயை யாராவது பறிப்பார்களா? பறித்தாலும் தின்பார்களா? பழம் இனிக்கும். ஆகவே எவர்க்கும் தரவேண்டிய பொருள் பழம். வீட்டுக்கு ஒருவர் வருகிருர். தட்டு நிறைய மலே வாழைப்பழம் எடுத்து வைக்கிருேம். நன்கு கனிந்த பழம். அவர் உண்டு மகிழ்கிருர். நாம் கண்டு மகிழ்கிருேம். கொடுப்பவர்க்கும் பெறுபவர்க்கும் இன்பம் தருவது பழம். இனிய சொல்லும் அத்தகையது தான்.

இன்பம் பெருக்கும் இன்சொல்

இன்சொல்லுக்குப் பெரிய மந்திரசக்தி உண்டு. களேத்துச் சலித்துப்போன வேலேக்காரனிடம்கூடக் கூடுதலாக வேலேவாங்கிவிட முடியும், முதலாளி நான்கு

இனிய வார்த்தைகளைச் சொன்னால். வீட்டில் பிள்ளைகளிடம் 'உங்களைப்போல் உண்டா?' என்று உயர்வாகப் பேசிவிட்டால் அன்றெல்லாம் அவர்கள் ஓடியாடி வேலை செய்வார்கள். கணவனிடம் மனைவி விரும்புவது இனிய சொல்; மனைவியிடம் கணவன் எதிர்பார்ப்பதும் அதுதான். உலகத்தில் இன்பத்தைப் பெருக்குபவை இன்சொற்களே!

வன்சொல் கழுதையின் குரல் போன்றது. கழுதையின் குரலைக் கேட்ட எவரும் கழுதையை விரும்பமாட்டார்கள். அதுபோலத்தான் சுடுசொல் பேசுகிறவர்களின் நிலையும். எப்பொழுது பார்த்தாலும் பிறர்மீது காய்ந்து விழுகிறவர்கள், எரிந்து விழுகிறவர்கள், சுடுசொல் வீசுகிறவர்கள் உலகத்தின் இயல்பை அறியாது அதன் வெறுப்பைத் தேடிக்கொண்டு விடுகின்றனர். சிலரிடம் நாம் நாளெல்லாம் பேசிக்கொண்டிருக்க ஆசைப்படுகிறோம். அவர்கள் சொல்லின் இனிமை தான் காரணம். மற்றும் சிலரைக் கண்டால் ஒன்றிரண்டு சொல்லோடு முடித்துக்கொண்டு ஓட்டம் பிடிக்கிறோம்-காரணம், அவர்கள் துவர்ப்பான காயை-வன்சொல்லை வழங்குபவர்கள்.

குயிலின் குரல் இனிமை பயப்பது. ஆகவே உலகம் அதனை விரும்புகிறது. கழுதையின் குரல் கொடூரமானது. ஆகவே உலகம் அதனை வெறுக்கிறது. இனிய சொல்லுக்கு உலகம் மகிழும்; வன்சொல்லை உலகம் இகழும்.

15

எத்தனை வேளை உண்பது?

உணவும் பசியும்

உணவு இல்லையேல் உலகம் இல்லை. வயிற்றுக்கு உணவு தேடுவதை அடிப்படையாகக் கொண்டுதான் வையத்து வாழ்க்கை சுழல்கிறது. பசிக்கும் வயிற்றுக்கு உணவு தருவதற்குத்தான் இந்த உலகில் பல நூறு கோடி மக்கள் நாள் தவறுமல் பாடுபடுகிருர்கள். வயிறு என்ற ஒன்று இல்லா விட்டால், பசியும் இல்லை. பசி இல்லையேல், உணவு தேவையில்லை. உணவு தேவைப்படாத உலகத்தைக் கற்பனை செய்தும் பார்க்க முடியவில்லை. அப்படி ஓர் உலகம் இருந்தால் அங்கு உழைப்புக்கே இடமிராது. முயற்சிக்கு அங்கு வேலையே இல்லை. அது ஒரு சோம்பேறி உலகமாக இருக்கும். நாளும் வளர்கின்ற உலகமாக அது மிளிராது. மாறுதல்களையோ, முன்னேற்றத்தையோ அங்குக் காணமுடியாது. எல்லாம் பிடித்துவைத்த பிள்ளையார்போல அப்படியப்படியே இருக்கும். அந்த உலகம் நமக்கு வேண்டவே வேண்டாம்.

பசிக்கும் உலகமே நமக்குத் தேவை. அதுதான் உழைக்கும் உலகம்; வளரும் உலகம். உலக முன்னேற்றத்திற்கு வயிறு அடிப்படை என்னும் உண்மை

இன்னும் பல்லூழி காலத்திற்கு நிலைத்திருக்குமென்றே தோன்றுகிறது.

வயிற்றுத் தொல்லை

வயிற்றுக்கு ஒருநாளும் வஞ்சகம் செய்யக் கூடாது. 'இடும்பைகூர் என் வயிறே உன்னோடு வாழ்தல் அரிது' என்றார் ஔவைப் பாட்டி நல்வழியில். வயிறு பெருந் தொல்லை தருவது. வயிற்றுக்கு வேளாவேளைக்குப் பசியறிந்து தீனி போடவேண்டும். வயிறு பசித்தாலும் தாங்கிக்கொள்ள முடியாது. அளவுக்கு மீறி வயிற்றில் அடைத்தாலும் பொறுக்க முடியாது. சாப்பிடும் உணவு பக்குவமாக இருக்கவேண்டும். கண்டதை, கடையில் கிடைத்ததை, கையில் அகப்பட்டதை வாயில் போட முடியாது. சரியான உணவு இல்லையேல், வயிறு வேலை நிறுத்தம் செய்யும். வயிற்றில் வரும் கோளாறுகள் ஏராளம், வகையறிந்து உண்ணுமையே இதற்குக் காரணம். வசதியுள்ளவர்கள் வயிற்றைப் பெருஞ் சோதனைக்கு ஆளாக்கி விடுவார்கள். அவர்கள் போடும் தீனியை ஏற்க இயலாமல் வயிறு திண்டாடும். செரிமான மருந்து சாப்பிட்ட பிறகே வயிறு ஒரு நிலைக்கு வரும். மற்றும் சிலர் பசிக்கும் வயிற்றுக்கு ஒழுங்காகத் தீனி போடமாட்டார்கள். இவர்களில் இரண்டு வகை உண்டு. ஒரு வகையினர் வறுமை காரணமாக வயிற்றைச் சரிவர நிரப்ப முடியாமல் அவதிப்படுவார்கள். இது தவிர்க்க முடியாத பட்டினி. சந்திரனுக்கு ராக்கெட்டுகள் அனுப்புகின்ற வேகத்தில் மனிதனால் இந்தப் பட்டினித் தொல்லையைத் தீர்க்கமுடியவில்லை. மனிதனுக்கு இத் துறையில் திறமை போதவில்லை என்பதா? அல்லது அவன் கருத்து இத் துறையில் அத்துணை முழுமை

யாகச் செல்லவில்லை என்பதா? எப்படியோ பட்டினித் தொல்லை மனிதனை விட்டபாடில்லை. கையில் காசிருந்தும், போதிய வருவாய் இருந்தும் பட்டினி கிடப்பார்கள் சிலர். பணத்தை மிச்சப்படுத்திக் கோட்டை கட்டுவதற்காக வயிற்றைக் காயப்போடுகிற பேர்வழிகள் இவர்கள். 'மிகினும் குறையினும் நோய் செய்யும்' என்பது உணவுக்கும் மிகப் பொருந்தும், ஆகவே பட்டினியும் கூடாது. அளவுச்கு மிஞ்சி உண்பதும் கூடாது.

ஒரு நாளைக்கு மூன்றுவேளை உணவு

ஒரு நாளைக்கு எத்தனை வேளை சாப்பிடவேண்டும்? இந்தக் கேள்விக்குப் பள்ளியில் படிக்கும் மாணவர்களாகிய நீங்கள் எளிதில் விடை சொல்லிவிடுவீர்கள். 'பசித்துப் புசி' என்று அறிவுரை சொல்வார்கள். ஐந்து மணிக்கு ஒரு முறை உண்ணலாம் என்பது பள்ளியில் படிக்கும் பாடம். நாம் சாப்பிடும் உணவு செரிமானம் ஆவதற்குக் குறைந்தது ஐந்து மணி நேரம் பிடிக்கிறதென்று உடற்கூற்று வல்லுநர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகவே இந்தக் கணக்குப்படி காலை எட்டு மணிக்குப் பலகாரம் அதாவது சிற்றுண்டி சாப்பிடலாம். பகல் ஒரு மணிக்குச் சோறு உண்ணலாம். பிறகு மாலை ஆறு அல்லது ஏழுமணிக்குச் சாப்பிடலாம், இந்த மூன்று வேளைச் சாப்பாடு மனிதர் வாழ்க்கையில் நியாயமானது, தேவையானது—இதனை மிகையென்று சொல்வதற்கில்லை.

நீதிவெண்பாவில் சாப்பாட்டு விதி

நீதிவெண்பாப் பாட்டு வகுக்கும் சாப்பாட்டு விதி சற்று கடுமையானதுதான். எனினும் நாம் அதனைத் தெரிந்து கொள்ளலாம்.

ஒருபோது யோகியே ஒண்டளிர்க்கை மாதே
இருபோது போகியே என்ப—திரிபோது
ரோகியே நான்குபோ துண்பான் உடல்விட்டுப்
போகியே என்று புகல். [9]

நாள்தோறும் ஒரு வேளை உண்பவன் யோகி. அதாவது துறவு. இரண்டு வேளை உண்பவன் போகி. அதாவது இல்லற இன்பங்களை நுகர்ந்து கொண்டிருப்பவன். மூன்று வேளை உண்பவன் ரோகி—நோயாளி. நான்குவேளை உண்பவன் உடலைவிட்டுப் போகி, அதாவது இறந்துபோகக் கூடியவன்.

இந்த இலக்கணப்படி பார்த்தால் நம்மில் பெரும்பாலோர் நோயாளிகளாகவும் எஞ்சியவர்கள் சாக வேண்டியவர்களாகவுமே இருப்பர். நான்கு வேளையை மிஞ்சுகிற ஆட்களும் பலர் உண்டு. அவர்களை நீதி வெண்பா எந்த வார்த்தையில் குறிக்குமோ?

உணவுக்கு வரையறை

உண்டிக்கு வேளைக் கணக்கு முதன்மையானது. கண்டநேரத்திலெல்லாம் வயிற்றில் போட்டு அடைத்துக்கொண்டிருக்கக்கூடாது. அவ்வாறு அடைத்தால் இரைப்பை தன் செரிமான சக்தியை இழந்து, உடல், நோயின் கொள்கலமாகிவிடும். அந்த நிலை வாராமல் தடுக்க உணவுக்கு வேளைக் கணக்கும் வரையறையும் வேண்டும். இந்த உண்மையை வற்புறுத்துவதுதான் இப் பாட்டு.

தவம் செய்யும் யோகிகள் பாலும் பழமுமே உண்பார்கள்; காட்டில் இருப்பவர்கள் அங்குக் கிடைக்கும் கனியையும் கிழங்கையும் தின்பார்கள். உடம்பில் உயிர் நிலைக்கவேண்டும் என்பதற்காகவே அவர்களுக்கு

உணவு. அதனுல் துறவிகளுக்கு ஒருவேளை போதும். ஆனுல் இல்லறத்தில் இருப்பவர்களுக்குத் துறவிகளை விட உழைப்புக்கேற்ற உணவு தேவை. ஆகவே அவர்கள் இரண்டு வேளையோ மூன்று வேளையோ உண்பதில் தவறில்லை. ஏழைக் குடும்பங்களில் பெரும்பாலோர்க்கு இரண்டு வேளை தான் உணவு இருக்கும். சற்று வசதி படைத்தவர்களின் வீடுகளிலோ இந்த வேளைக் கணக்கு மூன்று நான்கு என்று நீளும். சிலர் கண்ட நேரமெல் லாம் தின்றுகொண்டிருப்பார்கள். குறிப்பாகப் பிள்ளை களிடம் இந்தப் பழக்கம் இருக்கிறது.

மலேசியாவில் உணவு விற்போர்

மலேசியாவின் இரவு நேரங்களில் 2 மணி 3 மணி வரை உணவுக் கடைகள் திறந்திருக்கின்றன. இது தவிர அங்காடிக்காரர்கள் மணி தவருமல் வகைவகை யான உணவுகளோடு தெருத் தெருவாக வருகிருர்கள். பிள்ளைகளுக்கு வீட்டில் இருக்கும் பண்டத்தை விட வீதி யில் விற்கும் பண்டத்தில்தான் ஆசை இருக்கும். உங்க ளுக்கு இதனை இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டும். 10 மணிக்கு 'ரோஜா' விற்றுக்கொண்டு செல்வான் ஒரு வன். 11 மணிக்குக் கச்சான்—அதுதான் கடலை விற்ப வன் வருவான். 12 மணிக்கு 'மீ' வண்டி வரும். பிறகு 1 மணிக்கு ஐஸ்கிரீம்காரன் வருவான். 2 மணிக்கு அன்னுசிப்பழ வண்டி வரும். இப்படி மணிக்கோர் ஆள் வரும். தெருவில்உட்கார்ந்து கொண்டு, வருகிற இந்தப் பண்டங்களையெல்லாம் ஒன்று விடாமல் சுவை பார்க்கிற பிள்ளைகள் உங்களில் சிலராவது இருக்கக் கூடும். எனக்குத் தெரிந்த சில பிள்ளைகள் வீதியில் விற்பதைத் தின்றுவிட்டு வீட்டில் சமைத்து வைத்திருப் பதை உண்பதே இல்லை. இது மிகவும் கெட்ட பழக்கம்.

உங்களில் யாராவது இத்தகைய பழக்கத்தை இதுவரையில் கடைப்பிடித்து வந்தாலும் இனிமேல் கைவிட்டு விடுங்கள்.

மூன்று வேளை போதுமானது

எல்லோருக்கும் மூன்றுவேளை உணவு போதும். சிறுபிள்ளைகள் மாலையில் சிற்றுண்டி உண்ணலாம். ஆக இந்த நான்கு வேளைக்கு இடையில் குளிர்ந்த நீர் சாப்பிடுவதைத் தவிர வேறு எந்தத் தின்பண்டத்தையும் சாப்பிடக்கூடாது. ஒரு வாழைப்பழம்தானே, 5 காசு தானே, ஒரு குவளைக் கோப்பிதானே, என்று கருதி இடையில் நீங்கள் எதைச் சாப்பிட்டாலும் அது உங்சள் வயிற்றைக் கெடுக்கவே செய்யும். நம் இரைப்பைக்கும் சுணக்கான வேலை நேரம், ஒய்வு முதலியவை வேண்டும். இடையில் ஒன்றும் சாப்பிடாமல், வேளைப்படி சாப்பிடுகிறவர்களுக்கு நன்கு பசி எடுக்கும்; சாப்பாடும் நன்கு செல்லும். வயிற்றுத் தொல்லைகளும் வாரா. இந்த ஒழுங்கு முறையினால் இடையில் செலவிடும் பணமும் மிஞ்சும். அத்துடன் வீதியில் விற்கின்ற பண்டங்கள் அத்துணை சுகாதாரமாக இருப்பதில்லை. அவற்றினால் நோய்கள் பரவ இடமுண்டு. அதனாலும் கூடுமானவரையில் வீதிகளில் சாப்பிடுவதைத் தவிர்க்கவேண்டும்.

திருக்குறள் வலியுறுத்துகிறது

திருக்குறள், உணவை அளவோடு உண்ணவேண்டுமென்பதை நன்கு வலியுறுத்துகிறது.

அற்றால் அளவறிந்து உண்க, அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு. [943]

என்னும் குறள் நீடித்த வாழ்க்கைக்கு உணவில் அளவு எத்துணை இன்றியமையாதென்பதை உரைக்கிறது. 'உணவிலும் உண்டது அறல் இனிது' என்னும் குறள் பசித்துப் புசிக்கவேண்டும், செரிமானம் ஆனபிறகு உண்ண வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்துவதாகும். சாப்பிடுவதைவிடச் சாப்பிட்டது செரிமானம் ஆவது இன்பமாம்! நல்ல விருந்துக்குப் பிறகு ஏப்பம் விடுவார்கள். வயிறு உணவை ஏற்றுக்கொண்டுவிட்டதென்பதற்கு அடையாளம் ஏப்பம்! உண்ணும்போது கண்ட இன்பத்தைவிட, அந்த இன்பம் அதிக இன்பம் பயக்கும்.

உணவு நியமம்

'மீதூண் விரும்பேல்' என்று கூறுகிறது ஆத்திசூடி. 'பாலோ டாயினும் கால மறிந்துண்' என்கிறது கொன்றைவேந்தன். உணவுக்கு அளவு வேண்டும். இது வாழ விரும்புவார் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய நெறியாகும்.

தவம் செய்யும் துறவிகள் ஒருவேளை மட்டுமே உண்பார்கள். இல்லறத்தில் இருப்பவர்கள் இரண்டு வேளை உண்டாலே போதும்; கூடினால் மூன்று வேளை. அதற்குமேல் நான்கு வேளை, ஐந்து வேளை, ஆறுவேளை உண்பது நோயை வலிய வரவழைத்துக் கொள்ளும் செயலே ஆகும்.

16

தீயவர்களைத் திருத்தல் இயலாது

பாம்பிற்குப் படையும் நடுங்கும்

'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்பது பழமொழி. கயிறு போல நெளியும் பாம்பைக் கண்டு நாடுகளையும் கோட்டைகளையும் பிடிக்கும் படைவீரர்கள் நடுங்குவது விந்தைக்குரியதுதான். தம்பி தங்கைகள் எல்லோரும் பாம்பைப் பார்த்திருப்பார்கள். பாம்பின் நஞ்சு கடுமையானது. பாம்பு கடித்தவர்கள் உயிர் பிழைத்தல் அரிது. அதனால்தான் பாம்பைக் கண்டு மனிதர்கள் நடுங்குகிறார்கள்; படைவீரர்களும் அஞ்சுகிறார்கள்.

நல்ல பாம்பு

பாம்பில் எத்தனையோ வகை உண்டு. நல்ல பாம்பு என்று சொல்லும் நாகப் பாம்பு பொல்லாத பாம்பு. அது கொத்தினால் உயிர் தீர்ந்தது. அந்தப் பாம்புக்கு 'நல்ல பாம்பு' என்று பெயர் வைத்திருப்பது மங்கல வழக்குப் போலும்! ஆனால் நல்ல பாம்பு தானாக யாருக்கும் தீங்கிழைக்காதென்றும் தன் வழிக்கு இடையூறு செய்பவர்களை மட்டுமே கடிக்குமென்றும் சொல்லுகிறார்கள். நல்ல பாம்பு படம் விரித்தாடும்போது

மிக அழகாக இருக்கும். பாம்பாட்டிகள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு நல்ல பாம்பை வைத்தே வேடிக்கை காட்டுவார்கள். அதற்குப் பல்லைப் பிடுங்கி விட்டால் விஷம் இல்லை; பிறகு அதனைப் பச்சைப் பிள்ளையும் வைத்து விளையாடலாம்.

பாம்பு வணக்கம்

நல்ல பாம்புக்கு வழிபாடு நடத்துகிற பழக்கமும் உண்டு. பாம்புப் புற்றுகளில் பால் ஊற்றுவார்கள்; பொங்கல் வைப்பார்கள். பாம்பு வணக்கம் மனிதன் பாம்பைக் கண்டு பயந்த ஆதிநாளில் தொடங்கியிருக் கலாம்; அது இன்றும் சில மக்களிடையே நீடிக்கிறது. பாம்புகளின் உலகம் என்று ஓர் உலகத்தையே கற்பனை யில் வடித்திருக்கிறார்கள். அந்த நாகலோகத்தின் அரசன் நாகராஜன். அந்த உலகத்தில் நடப்பதாக எத்தனையோ கற்பனைக் கதைகள் உண்டு. எல்லாம் சுவையான கதைகள்.

பாம்புகளின் தலைவன்

பாம்புகளின் தலைவன் நாகப் பாம்பு. இன்னும் பச்சைப் பாம்பு, கொம்பேறிமூக்கன், விரியன், தண் ணீர்ப் பாம்பு, மலைப் பாம்பு, ஓலைப் பாம்பு முதலிய ஏராள வகைகள் உண்டு. ஒவ்வொரு பாம்பின் இயல் பும் ஒவ்வொரு விதமாக இருக்கும். பச்சைப் பாம்பு செடிகொடிகளில் பின்னிக்கொண்டு கிடக்கும். கொடி களின் பச்சை நிறத்திலிருந்து அந்தப் பாம்பின் நிறத் தைப் பிரித்தறிய முடியாது. கொம்பேறிமூக்கன் தனி வகை. அது ஓர் ஆளைத் தீண்டினால் அந்த ஆளின் சடலம் எரிக்கப்பட்ட பிறகே, மரத்தை விட்டு இறங்கு மாம். கடித்தவுடன் மரத்தில் போய் ஏறிக்கொள்ளும்;

அது கீழே இறங்கினுல் கடிபட்ட ஆளுக்கு நஞ்சும் இறங்கி அவன் பிழைத்துவிடுவாஞம். அதனுல் சுடு காட்டில் சடலம் எரிக்கப்பட்ட புகை தெரிந்த பிறகே கொம்பேறிமூக்கன், மரக் கொம்பை விட்டுக் கீழே இறங்கும். தண்ணீர்ப் பாம்புக்கு அவ்வளவு நஞ்சு இல்லை. அது எப்போதும் தண்ணீரில் கிடப்பதுதான் காரணம் போலும். மலைப் பாம்பு ஆளை அப்படியே முழுமையாக விழுங்கக்கூடியது. ஆடு மாடு முதலிய எல்லா விலங்குகளையும் மலைப் பாம்பு ஒருகை பார்க்கும். அதன் வயிற்றுக்குள் போய்விட்டால் பிறகு திரும்புவது ஏது?

மலேசியாவில் பாம்புகளுக்கு அவ்வளவு விஷம் இல்லை என்கிருர்கள். அங்கு அடிக்கடி மழை பெய்வது காரணமாக இருக்கலாம். பொதுவாகக் குளிர்ந்த நாடுகளில் பாம்பு, தேள் முதலியவற்றுக்கு நஞ்சின் கடுமை குறைவு.

பாம்புக் கோயில்

பினங்கில் பாம்புக் கோயில் என்று ஒன்று இருக்கிறது. அங்குப் பாம்புகள் புத்தருக்கு எதிரே செடிகளிலும், கொடிகளிலும் ஏராளமாக இருக்கின்றன. ஏராளமான மக்கள் நாள்தோறும் வருகிருர்கள்; போகிருர்கள். அவர்களை அந்தப் பாம்புகள் ஏதும் செய்வதில்லை. புத்தர் திருமுன்பு தவம் புரியும் பாம்பு முனிவர்கள் என்றுதான் அவர்களைச் சொல்லவேண்டும்.

பாம்பொடு பழகேல்

பாம்பின் இயல்பு நஞ்சைக் கக்குவது. உயிரைக் குடிப்பது. பாம்புக்கு நஞ்சு பல்லில் என்று முன்பே தெரிந்துகொண்டிருக்கிருேம். பாம்பு பொல்லாதது.

அதனுடன் பழகுவது தீது. தீயவர்களைப் பாம்புடன் ஒப்பிடுவது வழக்கம். ‘பாம்பும் சரி அந்த முரடனும் சரி’ என்பார்கள். ‘அவனோடு பழகுவது பாம்போடு பழகுவது போல’ என்றும் கூறுவார்கள். பாம்பினால் எந்த நேரத்திலும் ஆபத்து நேரலாம்; அதுபோலத் தீயவர்களினாலும் எந்த நேரத்திலும் ஆபத்து நேரக் கூடும். அதனால்தான் நீதிவெண்பா தீயவர்களையும் பாம்பையும் ஒப்பிட்டுப் பேசுகிறது.

துர்ச்சனரும் பாம்பும் துலையொக்கி னும்பாம்பு
துர்ச்சனரை ஒக்குமோ தோகையே—துர்ச்சனர்தாம்
எந்தவிதத் தாலும் இணங்காரே பாம்புமணி
மந்திரத்தா லாமே வசம். [19]

தீயவர்களும் பாம்பும்

தீயவர்களையும் பாம்பையும் ஒப்பிடுவது சரிதான். அவர்களிடையே நிறைய ஒற்றுமை இருக்கிறது. பாம்பிடம் ஆளைக் கொல்லும் நஞ்சு உண்டு. தீயவர்களான துர்ச்சனர்களின் உடல் முழுவதுமே நஞ்சுதான் பாம்பு கடித்தால் ஆளுக்குச் சாவு நேரும். துர்ச்சனர்களின் பேச்சு, மூச்சு, செயல் அனைத்துமே நஞ்சைக் கக்குபவை. அவை வெளிப்படுந்தோறும் மனிதர்களுக்கு ஆபத்துதான். ‘எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ?’ என்பார்கள். தீயவர்களின் நிலையும் இதுதான். அவர்கள் எந்தக் கோலத்தில் எங்கே இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. பாம்பின் தோற்றம் பளபளவென்று அழகாக இருக்கும். படம் விரித்தாடும்போது நல்ல பாம்பு எவரையும் கவரும். துர்ச்சனர்களும் வெளிப் பார்வைக்கு அழகர்களாகவே இருப்பார்கள். ‘பசுத்தோல் போர்த்த புலி’ என்னும் உவமை அவர்களுக்கு மிகவும் பொருந்தும்.

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்,
நெஞ்சத் தவல மிலர் [1072]

என்று சொல்கிறது குறள். அறிவாளிகளைவிடக் கீழ் மக்கள் முகமலர்ச்சியோடு விளங்குவார்களாம். 'பாம்புக்கு ராசா தடி' என்பது பழமொழி. பாம்பை அடித்துக் கொன்றால்தான் அதன் தீமைக்கு முடிவு கட்ட முடியும். தீயவர்களும் சித்திரவதை செய்தால்தான் பிறருக்கு நன்மை செய்வர். கரும்பை ஆலையில் வைத்துச் சாறு பிழிவது போல் வருத்தினால் மட்டுமே கயவர்கள் பயன்படுவராம்.

நீதிவெண்பா தீயவர்களை நோக்கப் பாம்பு ஒரு வழியில் நல்லதென்று கூறுகிறது. ஏற்கெனவே பாம்புக்குப் பல்லில் மட்டுமே நஞ்சு; தேளுக்குக் கொடுக்கில் மட்டுமே நஞ்சு; ஈயினுக்குத் தலையில் மட்டுமே நஞ்சு. —ஆனால், துர்ச்சனருக்கு உடல் முழுவதுமே நஞ்சு என்று ஒரு நீதிவெண்பாப் பாட்டின் மூலம் தெரிந்து கொண்டிருக்கிறோம். பல்லில் மட்டும் நஞ்சுள்ள பாம்பு, அங்க முழுவதும் விஷமுள்ள தீயவர்களைவிட நல்லதென்பதில் ஐயமென்ன? இக்கருத்தையே வேறொரு வகையால் நீதிவெண்பா இந்தப் பாட்டில் வலியுறுத்துகிறது.

பாம்பை மந்திரத்தால், மகுடி இசையினால் கட்டுப் படுத்திவிட முடியும். ஆனால் பொல்லாத தீயோரை எந்த வழியாலும் நல்வழிப்படுத்த முடியாது.

தீயவர்களைத் திருத்த முடியாது

தீயவர்களைத் திருத்த முடியுமா? முடியாது என் பதுதான் நீதிவெண்பா சொல்லும் விடை. ஆனால் கன்னத்தை அடித்து உடைத்தால் கீழ்மக்கள் சொன்ன

படி கேட்பார்கள் என்று வள்ளுவர் கூறுகிறார். அவர் களை நல்லபடி நடக்க வைப்பதற்கு ஒவ்வொரு தடவை யும் பல்லை உடைக்க முடியுமா? அது நடக்கின்ற காரியமா? அல்லது பல்லை உடைக்கின்ற இக்காரியத்தை எல்லோரும் செய்ய முடியுமா? முரடர்கள் இதனைச் செய்து தீயவர்களைத் தங்கள் ஏவலுக்குப் பணியவைக்க முடியும். நல்லவர்களால் இதனைச் செய்ய முடியாது. அவர்கள் உள்ளமும் இத்தகைய பல்லுடைப்புக்கு இணங்காது. ஆகவே, தீயவர்களைத் திருத்துவது என்பது நாய்வாலை நிமிர்த்துகின்ற கதைதான்!

இசைக்கு வயப்படாதவர்கள்

ஆனால், பாம்பு மகுடி இசைக்குக் கட்டுப்பட்டு விடுகிறது. பாம்புப் பிடாரர்கள் எந்தப் பாம்பையும் பிடித்துவிடுகிறார்கள். தங்கள் விருப்பம்போல் பாம்பு களை ஆட வைக்கிறார்கள். தோள்மீது மாலையாகப் போட்டுக்கொள்கிறார்கள். படைவீரர்களும் நடுங்கும் பாம்பு, பாம்பாட்டியிடம் பச்சைக் குழந்தையாகி விடுகிறது. இத்தகைய மாற்றத்தைப் பாம்பிடம் மந்திர தந்திரங்களால் செய்துவிட முடிகிறது. ஆனால் தீயவர்களிடம் மந்திர தந்திரம் ஏதும் பலிக்காது.

இன்னொரு முக்கிய உண்மையையும் கவனிக்க வேண்டும். 'இசைக்கு வயப்படாதவர்கள் கொடுமைக் காரர்கள், என்று ஆங்கிலக் கவி ஷேக்ஸ்பியர் சொல் கிறார்! அந்த அடிப்படையில் பார்த்தால் மகுடி இசைக்கு மயங்கிப் படம் விரித்தாடும் பாம்பைப் பொல்லாதது என்று எப்படிச் சொல்ல முடியும்? இசை பாம்பைத் திருத்திவிடுகிறது. இசைக்குக் கட்டுப்படு கின்ற இயல்பு பாம்புக்கு இருக்கிறது. வன்னெஞ்சர் களிடமும் கயவர்களிடமும் இந்த இயல்பு எப்படி

இருக்கும். ஆகவே, அவர்கள் பாம்பைவிடப் படுமோசமானவர்கள், நஞ்சானவர்கள் என்பது திண்ணம்.

பாம்புக்கும் தீயவர்களுக்கும் பொதுவான பண்புகள் பல உண்டு; ஆனால், பாம்பு இசைக்கும் மந்திரத்துக்கும் வசப்படுகிறது. தீயவர்களையோ எந்த வழியாலும் திருத்த முடியாது. வள்ளுவர் கூறுகின்றபடி பல்லை உடைக்கின்றவர்களுக்கே அவர்கள் பணிவர். ஆகவே, அவர்களைத் திருத்தி நல்லவர்களாக்க ஒருபோதும் முடியாது.

பல்லில் மட்டுமே நஞ்சுள்ள பாம்பு மனிதனிடம் கட்டுப்படும்; அங்கம் முழுவதும் நஞ்சுள்ள துர்ச்சனர் எவரிடமும் கட்டுப்பட மாட்டார்கள்.

17

யானை காட்டும் பெருந்தன்மை

மலைபோன்ற யானை

யானை, பன்றி இரண்டையும்பற்றி ஆராய்வோம். "யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்" அன்றோ! இப் பழமொழி ஒன்றே யானைகளின் பெருமையைக் குறிப்பிடப் போதும். யானை என்றவுடனேயே பெரிய உருவம் ஒன்று நம் மனத்தில் படமாக விரிகிறது. யானையை வரையச் சொன்னால் சில அசடுகள் பூனையை வரைவார்கள். விலங்குகளில் உருவத்தால் மிகப் பெரியது யானை. யானையை நினைத்தாலே நமக்குப் பெருமிதம் ஏற்படும். யானையைத் தம்பி தங்கைகள் அனைவரும் பார்த்திருப்பார்கள். யானையின் நடை மிடுக்கானது—அதனை அரச நடை என்று சொல்வார்கள். குழந்தைகள் திரு விழாச் சமயங்களில் யானையைப் பார்க்க முடியும். கண்களை அகல விரித்துத்தான் அதனைப் பார்க்க வேண்டும். சிறு குன்று போன்றதல்லவா யானை!

யானையைப் பார்த்த குருடர்கள் கதை குழந்தைகளுக்குத் தெரியும். யானை தூண்போல இருக்கிற தென்றான் ஒருவன்; வடக்கயிறுபோல் இருக்கிறதென்றான் மற்றொருவன்; முறம்போல் இருப்பதாக இன்

ஞெருவன் சொன்ஞன். இப்படியே யானையின் உறுப்பு ஒவ்வொன்றையும் பெரிதாக வருணிக்க முடியும். "தோள் கண்டார் தோளே கண்டார்" என்பது போலத் தான் யானையின் உருவமும். மலை போன்ற யானையின் முன்பு எலி போன்றவர்களே மனிதர்கள்.

நாற்படைகளில் ஒன்று யானைப்படை

அரசர்களிடம் யானைகள் நிறைய இருக்கும். பழங் காலப் போர்முனையில் யானைப்படை நாற்படைகளில் ஒன்று. யானைமீது அரசர் உலா வருவதும், யானைமீது வீரர்கள் செல்வதும் இலக்கியங்களில் விரிவாகப் பேசப் படுகின்றன. இப்பொழுது யானை போருக்கு அத்துணை பயன்படவில்லை எனினும்அரசர்களின் ஊர்வலங்களுக்கு இன்றும் யானையைப் பயன்படுத்துகிருர்கள். புதிய புதிய மோட்டார் வண்டிகள் ரதம்போல, கப்பல்போல வந்தாலும், யானைமீது அரசர் பவனி வருகிறமாதிரி மோட்டார் ஊர்வலம் அத்துணை எடுப்பாக இராது. அரசர்கள் கட்டளைகளை அறிவிக்க யானை மீதுதான் முரசறைவோரை அனுப்பி வைப்பர்.

மாந்தருக்கு யானை செய்யும் பணிகள்

மாந்தருக்கு யானையினுல் வேறுபல பயன்கள் உண்டு. மனிதர்கள் நடமாட முடியாத, வண்டிகள் செல்ல முடியாத மலைப்பகுதிகளில் யானைகள் போக முடியும். அந்தப் பகுதிகளுக்கு யானைச் சவாரியை எல்லோரும் பயன்படுத்தித்தான் ஆகவேண்டும். பெரிய பெரிய மரங்களைக் காட்டிலிருந்து சுமந்து வரும் பணியையும் யானைகள் செய்கின்றன.

யானை நன்றியறிவுள்ள விலங்கு. அதனிடம் சிறு குழந்தைகள்கூட அச்சமின்றிச் செல்ல முடியும்.

யானைக்கு வாழைப்பழம் கொடுக்கலாம்; தேங்காய், கரும்பு முதலியவை கொடுக்கலாம். திருவிழாக் காலங்களில் யானைக்காரர்கள் கடைத்தெரு வழியே யானைமீது போவார்கள். வரிசையாக ஒவ்வொரு கடையிலும் யானைக்கு ஏதாவது தீனி கிடைக்கும். தங்கள் குழந்தைகளை யானைமீது ஏற்றிப் பார்ப்பதில் பெற்றோர்களுக்கு ஒரு மனநிறைவு. யானைக்குப் பழம் முதலியவை கொடுத்துவிட்டு, தங்கள் குழந்தையை யானைமீது ஏற்றிச் சிறிது தொலை சென்றபின். இறக்கிக்கொள்வார்கள். யானைப் பாகர்களுக்கு இதன் மூலம் நல்ல வருமானம் கிடைக்கும்.

சர்க்கஸில் யானை செய்யும் வேடிக்கைகளைப் பார்த்திருப்பீர்கள். இவ்வளவு பெரிய விலங்கு தன் பாகனுக்குக் கட்டுப்பட்டு அவன் சொல்கிறபடியெல்லாம் கேட்பது நினைக்க நினைக்க வியப்பாக இருக்கும்.

பன்றியிடமுள்ள மதிப்பு

இனி, பன்றியைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். 'பசுமாடு ஒரு கன்று போட்டாலே போதுமே; பன்றி பல குட்டி போட்டு யாது பயன்?" என்று கேட்பது உண்டு. பன்றியை மனிதர்கள் மதிப்பதில்லை. பன்றியைப்பற்றி மிகத் தாழ்வாகவே நாம் கருதுகிறோம். மலேசியாவில் ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி போலப் பன்றி இறைச்சியும் முதன்மையான உணவு. சீன நண்பர்களுக்குப் பன்றி என்றால் உயிர். அதனால் கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு போலப் பன்றி வளர்ப்பு மலேசியாவில் நன்கு பெருகியிருக்கிறது. தமிழப் பிள்ளைகளுக்குப் பெரும்பாலும் 'மலம் தின்னும்' பன்றியைத்தான் தெரியும். அந்தக் கறுப்புப் பன்றியை இங்கே காண முடியவில்லை. யானையோடு நோக்கும்

போது பன்றி மிக மிகச் சிறிய உருவினது. இரண்டும் நான்கு கால் பிராணிகள். எனினும், மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடு உண்டு, மதிப்பு, சிறப்பு, பயன் முதலிய அனைத்திலும்.

யானையும் பன்றியும்

யானை உருவத்தால் மட்டுமன்றி இயல்பாலும் பெரும் பண்புள்ள விலங்கு; அது பெரிய மனிதனைப் போன்றது. பன்றியோ மிகமிக மட்டமானது—உருவத்தாலும் இயல்பாலும், அது சின்ன புத்திபடைத்தவர்களைப் போன்றது.

நீதிவெண்பா யானையையும் பன்றியையும் சந்திக்க வைக்கிறது ஒரு பாட்டில். அதனை இப்போது காண்போம்:

பேதையரைக் கண்டால் பெரியோர் வழிவிலகி
நீதியொடு போதல் நெறியன்றோ—காதுமத
மாகரத்த யானை வழிவிலகல் புன்மலத்தின்
சூகரத்துக் கஞ்சியோ சொல் [37]

வீதியில் யானை ஒன்று வேகமாகப் போகிறது. எதிரில் பன்றிகள் கூட்டமாக வருகின்றன. அப்போது யானை என்ன செய்யும்? பன்றிகளுக்கு வழிவிட்டு விலகியே செல்லும். பெரிய யானை, சின்னப் பன்றிகளைப் பார்த்து விலகிச் செல்வது, பன்றிகளுக்கு அஞ்சியா? அன்று! அன்று! பின் என்ன காரணம்? சிறியவர்களைக் கண்டால் விலகிச் செல்வது பெரியவர்களின் இயல்பு. அதனால்தான் யானை வழிவிலகிச் சென்றது. இச்செயல் யானையின் பெருந்தன்மைக்குச் சான்று. நீதிவெண்பா இந்த உண்மையைத்தான் எடுத்துரைக்கின்றது.

பெரியோர்களின் பண்பு

விட்டுக்கொடுப்பது, பணிந்து நடப்பது, அடக்கம் முதலியவை பெரியோர்களின் பண்புகள். பன்றிகளுக்கு இடம்விட்டு விலகிச் செல்லும் யானையிடம் இந்த விட்டுக்கொடுக்கும் பண்பையே நாம் காண்கிறோம். சின்ன மனிதர்கள், அற்பர்கள் விட்டுக்கொடுக்கமாட்டார்கள். தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று ஒற்றைக்காலில் நிற்பார்கள். அவர்களைத் திருத்துவது குதிரைக்கொம்பு. பிடிவாதம், திமிர், தான்தோன்றித்தனம், ஆரவாரம், பகட்டு முதலியவை அவர்களின் அணிகலன்கள். வீதியை அடைத்துக்கொண்டு வழி விலகாமல் செல்லும் பன்றிகளிடம் இந்தத் திமிரையே காண்கிறோம்.

சாலைகளில் இத்தகைய காட்சிகளை அடிக்கடி காணலாம். பாதசாரிகளிடமும் அதாவது நடந்து செல்வோரிடமும் மோட்டார்ப் முதலிய வண்டிகளில் செல்வோரிடமும் இந்தப் போட்டாப்போட்டியைக் காணலாம். பெரிய மனம் படைத்தவர்கள்—பெரிய மனிதர்கள், மற்றவர்களுக்கு வழிவிட்டுச் சாலையின் ஓரமாகச் செல்வார்கள். சின்னவர்களும் கோணல் உள்ளம் கொண்டவர்களும் சாலை அவர்களுக்கே சொந்தமென்ற நினைப்பில் நடுவில் நடந்து செல்வார்கள். முன்பின் வருபவர்களைப்பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. காடிகளை ஓட்டுபவர்கள், மிதிவண்டியில் செல்பவர்கள் முதலிய எல்லோரிடமும் இந்த இரண்டுவித மனப்பான்மையைக் காணலாம். விட்டுக் கொடுப்பவர்கள் சிலர்—அவர்கள் நல்லவர்கள்—யானையைப் போன்ற பெரியவர்கள். விட்டுக்கொடுக்காமல் திமிராக நடப்பவர்கள் பலர்—அவர்கள் குள்ள உள்ளம் படைத்தவர்கள்—சின்னவர்கள்—பன்றியைப் போன்றவர்கள்.

விட்டுக்கொடுக்கும் இயல்பு

சாலையில் வழிவிடுவது ஓர் எடுத்துக்காட்டுதான். உலக வாழ்க்கையில் விட்டுக்கொடுத்து நடக்கும் பெருந் தன்மை பெரியவர்களிடமே உண்டு. அவர்கள் உலகை வாழ்விக்கிறவர்கள்.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு? [987]

என்று வள்ளுவர் கேட்கிறார். சால்பு என்று குறிக்கப் படும் பெருந்தன்மை ஈடிணையற்றது. அந்தச் சால்பு உலகில் சிலரிடமாவது இருப்பதால்தான் உலகம் இன்னும் மண் மூடாமல் இருக்கிறது. இல்லையேல் போர் வெறியர்களும் அரக்கர்களும் உலகை இத்தனை நாளில் அழித்தொழிப்பர். அந்தச் சால்பின் ஒரு கூறு தான் விட்டுக்கொடுக்கும் பண்பு. அதனை யானையிடம் கண்டோம்.

யானை சிங்கத்திற்கு விட்டுக்கொடுத்தால் சிங்கத் திற்கு அஞ்சி அவ்வாறு செய்கிறதென்று சொல்லிவிட முடியும். "துஷ்டரைக் கண்டால் தூர விலகு" என்பது போலக் கொடியவர்களைக் கண்டால், எளியவர்கள் அஞ்சி விலகித்தான் செல்ல வேண்டும். ஆனால் பன்றிக்குப் பயந்து, யானை ஓரமாகச் செல்கிறதென்று சொன்னால், கேட்பவர்கள் அனைவரும் சிரிப்பார்கள். பன்றி எங்கே! யானை எங்கே! பன்றி எந்த வகையாலும் யானையை அச்சுறுத்த முடியாது. அதற்கு மாறாக யானை நினைத்தால், பன்றியை ஒரே அறையில் வீழ்த்தி விட முடியும். யானையின் வலிமையும் ஆற்றலும் அத்தகையவை. அப்படியிருந்தும் பன்றிக்காக, யானை வழி விலகிச் செல்கிறது. அதுதான் பெருந்தன்மை. விட்டுக்கொடுக்கும் பண்பு—சால்பு!

யானைகளிடமிருந்து கற்கும் படிப்பினை

எளியவர்கள், சின்னவர்கள், ஏழைகள் வாழ வேண்டுமானுல், வலியவர்கள், பெரியவர்கள் செல்வர்கள் பெரிய மனம் வைத்து அவர்களுக்கு விட்டுத்தர வேண்டும். இந்த உண்மையையும் நீதிவெண்பா குறிப்பாக உணர்த்துகிறது. யானை தன் வலிமையை உணர்த்துவதற்காகக் காணுகின்ற சிற்றுயிர்களையெல்லாம் வதைக்கத் தொடங்கினுல், பன்றி போன்ற சிற்றுயிர்களுக்கு வாழ்வே இல்லை. பிறகு "வலிமையுள்ளவன் வாழ்வான்" என்ற கொள்கையே ஆட்சி புரியும். பன்றியையும் வாழவிட்டுத் தானும் வாழும் யானை, உலகிற்குப் பெரிய நீதியை உணர்த்துகிறது. பலமுள்ளவர்கள், பெரும் பணம் படைத்தவர்கள், அதிகாரத்தை வைத்திருப்பவர்கள், மேல்நிலையில் இருப்போர் எல்லாருமே யானையிடம் இந்தப் பெருந்தன்மையைக் கற்றுக்கொள்ள வேண்டும். உலகில் தங்களுக்கு எவரும் நிகரில்லை என்று முரசு கொட்டும் வல்லரசுகளும் யானையிடம் இந்தச் சால்பைத் தெரிந்து கொள்ள வேண்டும். சின்னவர்களையும் ஏழை எளியவர்களையும் ஆற்றல், வலிமை குறைந்தவர்களையும் வாழ விடுகின்ற பெருந்தன்மையை மேல்நிலையிலுள்ளவர்கள் உணரவேண்டும், யானையையும் பன்றியையும் காட்டி நீதிவெண்பா நமக்கு அறிவுறுத்தும் நீதி இதுதான்!

யானை பெரிய விலங்கு. ஆற்றல் மிக்கது. வலிமை கொண்டது. எனினும் கேவலம் பன்றிக்கு இடம் விட்டு வழிவிலகிச் செல்கிறது. பெரியோரின் இயல்பும் இது தான். பேதையருக்கு—எளியவருக்கு விட்டுக் கொடுப்பதுதான் அவர்களின் பண்பு.

18

பணத்தால் விளைவது துன்பம்

பணத்திற்குத் தரும் சிறப்பு

காசென்ருல் யாருக்குத்தான் ஆசை இல்லை? 'பணம் என்ருல் பிணமும் வாய் திறக்கும்' என்று சொல்வார்கள். செத்த பிணமே காசின் சக்தியால் வாய் திறக்கும்போது, உயிருள்ள நாம் பணத் தேவதையிடம் பம்பரமாய் ஆடுவதில் வியப்பில்லை. உலகில் கண்கண்ட கடவுளாகக் காசு விளங்குகிறது. பணமில்லாதவன் பிணம். அவன் வாழ்வதும் ஒன்று தான், சாவதும் ஒன்றுதான். இந்த உலகம் பணத் திற்குத் தரும் சிறப்பை வேறு எதற்கும் தருவதில்லை.

பணத்தை ஈட்டுவது எளிதன்று

ஆனல், பணத்தினல் எத்துணைத் துன்பம் ஏற்படு கிறது! எண்ணிப் பார்த்தால் நன்கு தெரியும். பணத் தைத் தேடுவது எளிதான செயலா? அல்லது தேடுகிற எல்லோருக்குமே பணம் எளிதில் கிடைத்துவிடுகிறதா? இரண்டுக்கும் 'இல்லை' என்பதுதான் மறுமொழி. பணத்தை ஈட்டுவது எளிய செயலன்று. இலட்சாதி பதிகள், கோடீஸ்வரர்கள்—இவர்களின் கதைகளை ஆராய்ந்தால் எத்தனை துன்பங்களைத் தாங்கி ஈடு

கொடுத்து அவர்கள் இந்தப் பசுஞ் சோலையைக் கண்டிருக்கிறார்கள் என்பது விளங்கும். நீண்ட பாலைவனத்தைக் கடந்துதான் ஒரு பசுஞ்சோலையைக் காண முடியும். பணத்தை ஈட்டுவது மிகத் துன்பமான செயல்.

ஒருவேளை சிலருக்கு 'நல்லூழ்' என்னும் அதிர்ஷ்டத்தின் விளைவாக லாட்டரிச் சீட்டில் எளிதாகச் சில லட்சம் பரிசு கிடைத்துவிடலாம். அவர்களுக்கும்கூடப் பணம் சேர்ந்தவிதம் எளிதென்பதைத் தவிர, அந்தப் பணத்தினால் நேரும் துன்பங்களில் குறைவில்லை.

பணம் சேர்ப்பதில் நேரும் துன்பம்

உழைப்புத்தான் செல்வம். முயற்சியில்தான் செல்வம் பெருகுகிறது. பணம் ஈட்டுவதென்பது அரிய செயலென்பதைப் பெரிய தொழிற்சாலைகளில் சென்று காணவேண்டும். 5000, 10,000 பேர் வேலை செய்யும் நெசவாலைகளைப் பார்த்தால் எத்தனை பேரின் கூட்டு முயற்சி செல்வத்தைக் கொழிக்க வைக்கத் தேவைப்படுகிறது என்பது புரியும். நெசவாலை எவ்வாறு நடத்தப்படுகிறதென்று நினைத்துப் பாருங்கள். அதற்கு ஒரு முதலாளி இருப்பார். பல இலட்சங்களை அவர் அதில் முதலீடு செய்திருப்பார். அவருக்கு இரவும் பகலும் உறக்கம் வாராது. நெசவாலை ஒழுங்காக நடந்து அவர் போடுகிற திட்டப்படி ஆதாயம் கிடைக்க வேண்டும் என்பதிலேயே அவர் கவனமெல்லாம் மொய்த்திருக்கும். கணக்குப் புத்தகங்களை அவர் புரட்டிக்கொண்டே இருப்பார். வீண் செலவுகள் என்னென்ன ஆகின்றன. அவற்றை எப்படிக் குறைக்கலாம் என்று நாள் தவறாமல் ஆலோசனை செய்வார். நெசவாலையை ஒரு நாளைக்கு இரண்டு

மூன்று தடவையாவது சுற்றிப் பார்ப்பார். சம்பளம் வாங்குகிற எல்லோரும் ஒழுங்காக வேலை பார்க்கிறார் களா என்று கண்ணோட்டமிடுவார். ஆலை நிர்வாகி யுடன் ஒரு மணி நேரம் பேசுவார். தொழிலை எவ்வாறு விரிவுபடுத்தலாமென்று ஆலோசிப்பார். இவ்வாறு நாளெல்லாம் நெசவாலை அவர் நெஞ்சை அழுத்திக் கொண்டிருக்கும். அவருக்கு உடலுழைப்பு இல்லை யென்றாலும் மனநிம்மதி இராது; சிந்தனையிலேயே பாகாக உருகுவார். அந்த மனவேதனையை அனுப வித்துப் பார்ப்பவர்களுக்குத்தான் அதன் துன்பத்தை உணர முடியும்.

இலட்சக்கணக்கில் ஈட்டுபவர்களுக்குத்தான் துன்பம், மற்றவர்களுக்கு இன்பம் என்ற நிலை இல்லை! நாட்சம்பளம் மூன்று வெள்ளி வாங்குபவர்களுக்கும், ஐந்நூறு, ஆயிரம் என்று பெரிய சம்பளம் வாங்குபவர் களுக்கும் பொருளை ஈட்டுபவர் எவருக்குமே மன வேதனைதான்! முப்பது நாளும் வேலை பார்த்து, முதலாளி மனம் நோகாமல் நடந்து, ஆற்றவேண்டிய கடமைகளைப் பழுதின்றிச் செய்து முடித்த பிறகுதானே சம்பளம் பெற முடியும்? இடையில் குறை நேர்ந்தால், முதலாளியின் கோபத்திற்கு ஆளானால், துன்பம் நேரும்; சில சமயங்களில் குற்றம் பெரிதாக இருந்தால் வேலையை இழக்கவும் நேரிடலாம். ஆகவே, பொருளை ஈட்டுவதென்பது எளிதான செயலன்று; அது துன்பம் நிறைந்த செயலாகும்.

இன்னல் தரும் பொருளை ஈட்டுதலுந் துன்பமே
பின் அதனைப் பேணுதலும் துன்பமே—அன்னது
அழித்தலும் துன்பமே அந்தோ பிறர்பால்
இழத்தலும் துன்பமே யாம். [46]

காப்பதில் வரும் துன்பம்

பணத்தை ஈட்டுவது மட்டுந்தானு துன்பம்? அதனைப் போற்றிப் பாதுகாப்பதும் துன்பமான செயல்தான். 'பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைக்கும் கேடுகெட்ட மனிதர்கள்' நாளும் படும் அல்லலுக்கு அளவில்லை! வீட்டில் நிறையக் காசிருந்தால் பெரிய ஆபத்து. நான்கு காவற்காரன் போடவேண்டும். எந்த நேரத்தில் கள்வன் வருவானே என்ற அச்சத்தில் உறக்கமே வாராது. பணம் காக்கும் பூதங்களாக இருப்புப் பெட்டிக்குப் பக்கத்திலேயே கண்கொட்டாமல் விழித்துக்கொண்டிருக்க வேண்டும். பாங்கியில் போட்டு வைப்பதற்கும் நம்பிக்கை ஏற்படாது. அரசாங்கம் பணத்தின் மதிப்பைக் குறைத்து விடுமோ என்ற அச்சம் வேறு இருக்கும். வீட்டில் இருக்கும்போதும் பயம்! வீதியில் செல்லும்போதும் பயம்! பணத்தினுல் செல்வர்கள் இன்பமா காண்கிருர்கள்? துருவி ஆராய்ந்தால் ஏழைக்குள்ள மன அமைதி பணக்காரர்களுக்கு இராது. ஆகவே, செல்வத்தை ஈட்டுவதில் மட்டும் துன்பமில்லை; சேர்த்துவைப்பதிலும் துன்பம் உண்டு.

செலவழித்தலும் துன்பமே

சரி; பணத்தைச் சேர்த்துவைக்க வேண்டாம். செலவழிப்போம் என்ருல் அப்போதாவது இன்பம் கிடைக்கிறதா? அதுவும் இல்லை. தேடிய பணத்தைச் செலவழிக்கும்போது மனம் மிக வருந்துகிறது. நெற்றி வியர்வை நிலத்தில் படப் பாடுபட்டுத் தேடிய காசு கரைகிறதே என்று உள்ளம் ஒடிகிறது. பணத்தருமை ஈட்டுகிறவர்களுக்குத்தான் தெரியும். தாராளமாகச் செலவழிக்கின்றவர்கள், பெரும்பாலும் இன்னெருவர்

தேடிய பணத்தையே செலவிடுவார்கள். ஒவ்வொரு காசாகத் தான் உழைத்துச் சேர்த்த பணத்தைச் செல வழிக்க எவருக்கும் மனம் வாராது. கட்டாயமாக, சூழ் நிலேயின் விளேவாகச் செலவழிக்கும்போது அவர்கள் உள்ளம் துன்பமடைவது திண்ணம்.

தகப்பஞர் அரும்பாடுபட்டுப் பெரும் பணம் திரட்டி வைத்திருப்பார். பிள்ளே செல்லமாக வளர்ந்த வன்—காசருமை தெரியாது. ஒட்டாஞ்சல்லி போலக் காசை வாரியிறைப்பான். பையனேக் கண்டிக்க வழி யின்றித் தகப்பஞர், இரத்தக் கண்ணீர் வடிப்பார். செல்வர்களின் குடும்பங்கள் பலவற்றில் காணுகின்ற நிலே.

ஆகவே, பணத்தைச் செலவழிக்கும்போதும் இன்பம் பிறப்பதில்லே. துன்பமே உருவாகிறது.

பணத்திஞல் வரும் கேடுகள்

பணத்தை ஈட்டுவதும் துன்பம், பேணுவதும் துன்பம், செலவிடலும் துன்பம்! இதுமட்டுமா? பொரு ளிஞல் படும் துன்பம் இன்னும் எத்தனே எத்தனேயோ உண்டு. கடன் கொடுப்பார்கள் சிலர், திரும்பி வரு மென்ற கருத்தில். போன கடன் புதைந்துவிடும். அப்போது கடன் கொடுத்தவர் நிலே எப்படி இருக்கும்? 'கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கிஞன் இலங்கை வேந்தன்' என்பது கம்பன் பாட்டு. 'கடன் இட்டார் நெஞ்சம்போல் கலங்கிஞன் இலங்கை வேந்தன்' என்பதுதான் இன்னும் பொருத்தம்.

பணத்தை ஆட்கொல்லி என்று சொல்வார்கள். பணம் மனிதர்களே உயிரோடு சித்திரவதை செய்து விடுகிறது. பணத்திஞல் வரும் கேடுகள், ஒன்ரு,

இரண்டா? ஆயிரம் பல்லாயிரம் என்று சொல்ல வேண்டும். பணத்தினுல் உறவு கெடும், நட்புக் கெடும், நல்ல பெயர் கெடும்!

மிக நெருங்கிய நட்புக்கூடப் பணம் ஊடாடுவதனுல் முறிந்துவிடும். பணம் இறுமாப்பைத் தருகிறது; பணம் தீயவர்களின் நட்பையும் தீய பழக்கங்களையும் சேர்க்கிறது; பணம் இரக்கமற்ற கல் மனத்தை ஏற்படுத்திவிடுகிறது. பணத்தினுல் வரும் தீமைகள் இம்மட்டோ!

பணம் ஆக்கவும் செய்யும்; அழிக்கவும் செய்யும். எல்லாம் வல்லது பணம்.

இல்லாரை எல்லாரும் எள்ளுவர்—செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு [752]

என்று கூறுகிறது குறள். பணமில்லாதவனைப் பெற்றெடுத்த தாய் வேண்டாள்; தொட்டுத் தாலி கட்டிய மனைவி வேண்டாள்; அவன் பேச்சு எவரிடமும் எடுபடாது—என்று சொல்கிறது நல்வழி. பணமுள்ளவனுக்கு உலகமே சொன்னபடி கேட்கும்.

பணப்பற்றின் உண்மை

ஆனுல் உண்மையை ஆராயுமிடத்துப் பாழும் பணத்தினுல் இன்பமில்லை, எந்நாளும் துன்பமே. என்று நீதிவெண்பா அறுதியிட்டு உரைக்கிறது. கூர்ந்து நோக்கினுல், அனுபவ வாயிலாகப் பார்த்தால் நீதிவெண்பா சொல்லும் உண்மையை ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும்.

படிக்கும் பிள்ளைகளாகிய நீங்கள்பணத்தினுல் வரும் துன்பங்களை அத்துணை உணர முடியாது. காசென்ருல்

உங்களுக்குக் கொள்ளை ஆசை இருக்கலாம். மிட்டாய் வாங்கலாம், ஐஸ்கிரீம் வாங்கலாம், பொம்மை வாங்கலாம், மகிழ்ச்சியாக இருக்கலாம் என்றுதான் நினைப்பீர்கள். நீதிவெண்பா சொல்லும் உண்மையைத் தெரிந்து வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் பெரியவர்களாகும்போது உங்களுக்கு அது வழி காட்டும்.

19

கல்வி அழகே அழகு

காக்கையும் குயிலும்

காக்கையும் குயிலும் ஒரே நிறம். காக்கை முழுக் கறுப்பு. அமாவாசை இருட்டுப்போலக் கறுப்பாக இருக்கிறவர்களைக் 'காக்கைக் கறுப்பு' என்று சொல்வதுண்டு. குயிலின் நிறம் கருநீலம். இரண்டுக்கும் வேற்றுமை அவ்வளவாகப் புலப்படாது. கண்ணன்—அதாவது திருமாலின் நிறமும் கருநீலமே. கண்ணன் என்றால் கறுப்பு நிறத்தவன் என்பதுதான் பொருள். ஆகவே கறுப்பும் கருநீலமும் ஏறத்தாழ ஒரே நிறம்தான். இந்த நிற ஒற்றுமை காரணமாக, காக்கை எது, குயில் எது என்று பிரித்தறிவது மிக அரிது.

காக்கைக் கூட்டம்

காக்கை மலேசியாவில் காணமுடியாத ஒரு பறவை. பினாங்கிலும் கோலக்கிள்ளாவிலும் மட்டுமே நாம் காக்கைகளைக் காணமுடிகிறது. மற்ற ஊர்களில் காக்கைகள் இல்லை என்று கூறுகிறார்கள். இது ஓர் அதிசயமான நிலைமை அல்லவா? ஆனால் தமிழகத்திலிருந்துவந்த குழந்தைகளுக்குக் காக்கை மிகவும்

அறிமுகமான பறவை. அங்குக் காக்கையை எல்லா ஊர்களிலும் பார்க்க முடியும். காக்கையை அழைத்து முதலில் அதற்குச் சோறு படைத்துவிட்டுப் பிறகு உண்பது இன்றும் தமிழ்நாட்டில் மரபு. வீடுகளின் ஓட்டின்மீது சோறுவைத்துக் 'காகா' என்று கூப்பிடுவார்கள். ஒரு காக்கை மட்டிலுமா வரும்? காகம் கரைந்துண்ணும் அல்லவா? தனித்துண்ணும் பழக்கம் காக்கைகளின் வாழ்க்கையில் கிடையாது. ஆகவே நாம் வைக்கும் ஒரு கரண்டிச் சோற்றுக்குப் பத்துப் பதினைந்து காக்கைகள் பெருங்கூட்டமாக வந்துசேரும். நொடியில் விருந்து தீர்ந்துவிடும். பிறகு வேறு வீடுகளை நாடி அவை ஓடும்.

> **எத்தித் திருடுமந்தக் காக்காய்—அதற்கு**
> **இரக்கப்படவேணும் பாப்பா**

என்று பாரதி சொல்கிறார். காக்கைக்குத் திருட்டுப் புத்தி உண்டு. என்றாலும் அதனிடம் இரக்கம் காட்டவேண்டுமென்கிறார். வீடுகளில் கார்க்கைக்கும் நாய்க்கும் மட்டுமே சோறு வைப்பார்கள். காக்கைக்குப் பகலிலும் நாய்க்கு இரவிலும் அன்னமிடுவார்கள். கஞ்சப் பிரபுக்களை 'எச்சிற் கையாலும் காக்கை ஓட்டமாட்டான்' என்று இகழ்வதுண்டு. காக்கை மக்களின் இரக்கத்திற்குரிய ஒரு பறவை என்பதையே இவ் வழக்குகள் காட்டுகின்றன,

மக்களுக்குத் தொல்லை தரும் காக்கை

காக்கையால் மக்களுக்குத் தொல்லையும் மிகுதி. வெயிலில் எந்தப் பொருளையாவது காயவைத்தால், நாம் ஏமாறும் சமயம் பார்த்துக் காக்கை அதனைக் கொத்திக்கொண்டு போய்விடும். அதனால் வற்றல், பருப்பு, ஊறுகாய் முதலியவற்றை வெயிலில் காயப்

போடும்போது பிள்ளைகளைக் கையில் கம்போடு காவல் வைப்பார்கள். காக்கைகள் வாராமல் தடுப்பது அவர்கள் வேலை.

குயிலின் குரலினிமை

இனி, குயிலைப் பற்றி எண்ணுவோம். ஏற்கெனவே குயிலைப் பற்றி நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். குயிலின் குரல் அமிழ்தம். இனிமையான கற்கண்டுக் குரலுள்ள இசைக் கலைஞர்களை நாம் 'இசைக் குயில்' என்று கூறுகிறோம். மயிலைப் பார்த்து ஆடக் கற்றதுபோது, குயிலைப் பார்த்துத்தான் மாந்தர்கள் பாடக் கற்றிருக்க வேண்டும். குரலில் குயிலும் கழுதையும் வடதுருவம், தென்துருவம் என்று ஏற்கெனவே படித்திருக்கிறோம்! இசையுலகில் காக்கையின் நிலையும் கழுதையின் நிலையும் ஏறத்தாள ஒன்றுதான். காக்கையின் குரல் கழுதையின் அளவு அவ்வளவு மோசமானது அல்லவென்றாலும் குயிலின் அமிர்தக் குரலருகே காக்கை நெருங்கக்கூட முடியாது. காக்கை கத்துவது காதுக்கு மிக வேதனையாக இருக்கும். சில சமயங்களில் காக்கைகள் ஒரு பட்டாளமாகச் சேர்ந்து கொண்டு 'காகா' என்று கத்தும். நமக்கு மிக எரிச்சலாக இருக்கும். இனிமையை அணுவளவு கூடக் காக்கைகளின் குரலில் காணமுடியாது.

நிற ஒற்றுமையும் குரல் வேற்றுமையும்

காக்கையும் குயிலும் ஒரே நிறம்; ஒரே அழகுடையன. எனினும், குரல் சிறப்பில் ஒன்றுக்கொன்று நேர்மாறானவை. இதனை எப்படி அறிவது? வாயைத் திறந்தால்தான் குயிலின்சிறப்பும் காக்கையின் இழிவும் அம்பலமாகும். வாயைத் திறவாத வரை, எது குயில்,

எது காக்கை என்று பிரித்தறியக்கூட முடியாமல் திகைப்போம். வாயைத் திறந்துவிட்டால், உண்மை வெளியாகிவிடும்! நீதிவெண்பா இந்த உண்மையைத் தெளிவாகக் கூறுகிறது:

வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கைநயத் தாலறிய லாகாதே—காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவருமோ கூறு. [87]

மாந்தர்தம் இயல்புரைக்கும் பேச்சு

மேனியழகைக் கொண்டு காக்கையையும் குயிலையும் பிரித்தறிய முடியவில்லை அல்லவா? அதுபோலத் தான் பிரித்தறிய மாந்தரிடையிலும் உடல் தோற்றத்தைக் கொண்டு, படித்தவர்கள் யார், படியாதவர்கள் யார் என்று பிரித்தறிய முடியாது. ‘ஆளைக் கண்டு மயங்காதே ஊது காமாலை’ என்று ஒரு பழமொழி உண்டு. மேனிப் பகட்டுத் தோற்றத்தைக் கண்டு மயங்கிவிடக்கூடாது. அறிவாளியா, படித்தவனா என்பது பேச்சின்மூலமே புலப்படும். குயிலையும் காக்கையையும் பிரித்தறியக் குரல் பயன்படுவது போல, மாந்தர்களின் சிறப்பை உணரவும் பேச்சுத் தான் கருவியாகும். நீதிவெண்பா குயிலையும் காக்கையையும் உவமை காட்டி எடுத்துரைக்கும் உண்மை இதுதான்.

வாயினால் கெடுவான்முட்டாள்

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும் [405]

என்று கூறுகிறது குறள். அவனே படிக்காத முட்டாள். ஆனால் தனக்கு எல்லாம் தெரியும் என்ற நினைப்பு.

அதன் விளைவான செருக்கு. இத்தகைய ஓர் ஆசாமி படித்தவர் நடுவிலே செல்கிருன். ஏதோ ஒரு செய்தியைப் பற்றி அறிஞர்களிடையே பேச்சு நடக்கிறது. இந்த முட்டாள் தலையாட்டிப் பொம்மை மாதிரி பேசாமல் இருக்கவேண்டியதுதானே! ஆனுல் அவன் செருக்கு அவனைச் சும்மா இருக்க விடவில்லை. வாயைத் திறந்தான்;ஒரே உளறல். 'வாயினுல் கெட்டான்' என்று சொல்லுவார்கள். தன்வாயினுலேயே தான் ஒரு முட்டாள் என்பதைப் பறைசாற்றிக்கொண்டு விட்டான் அவன். வாயைத் திறவாமல் இருந்தால் மற்றவர்கள் இவனைப் பற்றி மேலாக நினைத்திருக்கக்கூடும். அந்த வாய்ப்பையும் கெடுத்துக்கொண்டான் முட்டாள்.

வாக்கு நயம்

மூதுரையில் படித்த ஒரு பாட்டு உங்களுக்கு நினைவிருக்கும். 'சவை நடுவே நீட்டோலை வாசியாநின்ருன் குறிப்பறியமாட்டாதவன் நல்மரம்' . கற்றவர்கள் அவையில் நீட்டிய ஓலையை வாசிக்கமுடியாமல் நிற்கிருனே, அவனே நல்மரம் என்று கூறுகிறது மூதுரை. காட்டில் இருக்கும் மரங்களை மரம் என்று சொல்வது தவறு—சரியான மரம்—நல்மரம் மனிதனுகப் பிறந்தும் எழுத்தறிவில்லாதிருக்கும் இந்த மடையனே என்று இடித்துரைக்கிருர் ஒளவைப் பாட்டி. ஆகவே வாக்கு நயத்தாலேயே படிப்பாளியா, முட்டாளா என்பதைக் கண்டுகொள்ள முடியும்.

புற அழகினும் உள்ளழகே சிறப்பு

ஆளைப் பார்த்தால் ஆடம்பரமாக இருக்கும். மேனியில் மின்னும் உடை. எடுபிடி ஆட்கள், வாகனங்கள் எல்லாம் உண்டு. ஆள் ஆணழகர். நாளெல்லாங்

பார்த்துக்கொண்டிருக்கலாம். ஆனல் படிப்புத்தான் சுட்டுப் போட்டாலும் வாராது. வீட்டுக்கு வருகின்ற கடிதத்தை இன்னெருவர் படித்துக்காட்ட வேண்டும். இந்த அழகுப் பொம்மைகளை வள்ளுவர் நன்கு இடித்துரைக்கிருர். நுண்ணிய கல்வி அறிவற்றவர்களின் அழகு வெறும் கொலுப் பொம்மைகளின் அழகுதான் என்று அவர் கூறுகிருர். அழகிய மண் பொம்மைகளுக்கும் அவர்களுக்கும் வேறுபாடு கிடையாது. உடல் அழகு, உடையழகு, முடியழகு, முகத்தோற்றம் —இவை எல்லாம் அழகல்ல. கல்வி அழகே அழகு என்பது நம் தமிழ் நூல்களின் கருத்து. புற அழகை விட உள்ளழகுக்கு மிகுந்த சிறப்புத் தருகின்றவர்கள் தமிழர்கள். ஆகவே ஆளைப் பார்த்து, ஆளின் தோற்றத்தைப் பார்த்து எடை போடுவது தவறு. பெரும்பாலும் நல்ல அறிவாளிகள் வெளித் தோற்றத்திற்குப் பகட்டாயிருக்க மாட்டார்கள். எளிய உடை, எளிய தோற்றத்துடனேயே அவர்கள் காணப்படுவார்கள். கண்ணைக் கவருகின்ற ஆற்றல் இல்லையே என்று அவர்களை நாம் புறக்கணித்தால், நாமே இழந்தவர்களாவோம். செவியைக் கவருகின்ற ஆற்றல் அவர்களிடம் உண்டு. பேச்சு மூலம் நம் உள்ளத்தை அவர்கள் தொட்டுவிடுவார்கள்.

'உடல் சிறியர்' என ஒதுக்காதே

எனவே 'உடல் சிறியர்' என்று எவரையும் ஒதுக்கக் கூடாது. கடல் மிகப் பெரிதுதான். ஆனல் அதன் நீர் குளிக்கவோ குடிக்கவோ பயன்படுவதில்லை. ஏன் உடம்பைக் கழுவக்கூட உதவுவதில்லை. ஆனல் அதன் அருகே மணலில் தோண்டப்படும் கையகல ஊற்று குடிக்க எவ்வளவு சுவையான நீரைத் தந்துவிடுகிறது. தோற்

றத்திற்கும் பயனுக்கும் தொடர்பில்லை என்பதைக் கடலும் ஊற்றும் மெய்ப்பிக்கின்றன.

காக்கையும் குயிலும் ஒரே நிறம். உடலழகை மட்டும் வைத்துப் பார்த்தால், அவற்றைப் பிரித்தறிய முடியாது. குரலைக் கொண்டுதான் குயிலின் சிறப்பையும் காக்கையின் இழிவையும் நாம் உணர்கிறோம். அதுபோலவே மக்களிடையே அறிவாளிகளையும் முட்டாள்களையும் பகுத்தறிவதற்கும் வாக்கு நயம் தான் சரியான கருவி. அறிவாளி வாயைத் திறந்து பேசினல் முத்து முத்தான கருத்துக்கள் உதிரும். முட்டாள் வாயைத் திறந்தாலோ, எல்லாம் உளறலாக இருக்கும். அவன் எப்போது வாயை மூடுவான் என்றே நாம் தவமிருப்போம். ஆகவே பேச்சுத்தான் முட்டாளையும் அறிவாளியையும் அடையாளம் கண்டுகொள்ள உதவுவது. அறிவு என்பது எளிதில் வருவதன்று—உடலழகும் வெளித்தோற்றமும் பணத்தால் பெற்றுவிடலாம். ஆனல் உள்ளழகாகிய கல்வியை அவ்வாறு பெற முடியாது.

20

படிப்பற்றோர் கூட்டம் பயன்படாது

பரவெளி ஆராய்ச்சி

பரவெளி ஆராய்ச்சியில் ரஷ்யாவும் அமெரிக்காவும் ஒன்றையொன்று மிஞ்சும் வகையில் எறிபடைகளையும் துணைக்கோளங்களையும் குட்டிச் சந்திரன்களையும் வானமண்டலத்திற்கு அனுப்பிக்கொண்டிருக்கின்றன. நாம் வாழும் பூமியைப்போலவே, சந்திரமண்டலமும் மலைகளையும் கடல்களையும் கொண்டதாக விளங்குகிறது. இத்தனையும் அறிவியல் வல்லுநர்களின் எத்தனையோ ஆண்டு உழைப்பினால் நமக்குக் கிடைத்திருக்கிற உண்மைகள். ரஷ்யாவும் அமெரிக்காவும் இத்துறையில் இன்னும் விடாப் பிடியாக முன்னேறி வருகின்றன. சந்திரனுக்கு ஆட்களை அனுப்புவது அடுத்த திட்டம்.

நிலவு தரும் இன்பம்

இவ்வாறு சந்திரனை பற்றிய உண்மைகளை அறிய உலக விஞ்ஞானிகள் துடிதுடித்துக் கொண்டிருக்கிற இவ் வேளையில் நாமும் சந்திரனைப் பற்றிச் சிறிது

எண்ணுவோம். செயற்கைச் சந்திரன்கள் பல படைக்கப்பட்டு வருகின்றன. அமெரிக்காவும் ரஷ்யாவும் இத்துறையில் மலைபோன்ற செல்வத்தைத் தண்ணீர் போல வாரி யிறைத்துக் கொண்டிருக்கின்றன. அமெரிக்காவும், ரஷ்யாவும் தயாரித்திருக்கும் சந்திரன்களின் எண்ணிக்கை மிகுதி என்றாலும் இயற்கை நிலவுக்கு முன் அவை எம்மாத்திரம்! விரிந்து பரந்த உலகுக்கு ஒரே கதிரவன் என்னும் சிறப்பு நிலை என்றும் நீடிக்கவே செய்யும். நிலவு, மாந்தர், வாழ்க்கையில் பின்னிக் கிடக்கிறது! நிலவை நினைத்தாலே கற்பனை கரைபுரண்டோடும் கவிஞர்களுக்கு! நிலவைப் பாடாத கவிஞரும் புவியில் உண்டோ? கவிதைக்கும் காவியத்திற்கும் நிலவு இன்றியமையாத ஒன்று. நிலவின் தண்ணொளி காதலர்க்கு இன்பம் தருவது. காதலர்க்கு மட்டுமா? உங்களைப் போன்ற சின்னஞ் சிறுவர்களுக்கும் நிலா என்றால் பெருங்கொண்டாட்டம். நல்ல நிலாக் காலத்தில் கடற்கரை மணலில் விளையாடினால் எவ்வளவு இன்பமாயிருக்கும்! பள்ளியில் படிக்கும் போது நிலவு விளக்கில் நண்பர்களோடு கூடிக் குதித்து விளையாடுகின்ற பேறு எனக்குக் கிடைத்திருக்கிறது. வானத்தில் இன்பத்தை அள்ளித் தெளிக்கின்ற நிலவு. பக்கத்தில் கும்மாளம் போடும் பெருங்கடல். கண்ணுக்கு எட்டுகின்றவரை நீண்டு செல்லும் மணல் வெளி. இந்தச் சூழ்நிலையில் குடுகுடு கிழவர்கள் கூட விளையாட்டுப் பிள்ளைகள் ஆகிவிடுவார்கள். நிலவு தருகின்ற இன்பம் இது! வீட்டிலும் எரிகின்ற மின்சார மண்ணெண்ணெய் விளக்குப் போன்ற செயற்கை விளக்குகளைச் சற்று மறந்து உலகுக்கு ஒரே விளக்காகத் திகழும் சந்திரனைக் காண்பதும் அந்த ஒளியில் குளிப்பதும் உண்மையிலேயே இன்பம் பயப்பவை.

சந்திரன் குழந்தைகளின் கேளிக்கைப் பொருள்

பள்ளிகளில் பிள்ளைகள் கேளிக்கைப் பயணம் புறப்படுவீர்கள். பச்கத்து ஊராக இருந்தால் கட்டுச் சோறு கொண்டு செல்வீர்கள். இல்லையேல் செல்கிற இடத்தில் எல்லோரும் வேலைபார்த்துக் கூட்டாகப் பொங்கிச் சாப்பிடுவதும் உண்டு. நிலவில் நண்பர்கள் சேர்ந்து விருந்துண்பது பழக்கம். அதற்கு நிலா விருந்து, நிலாச்சோறு என்று சொல்வார்கள். தாய் மார்கள், தம் பிள்ளைகளுச்குச் சோறு ஊட்டும்போது நிலவைத்தான் வேடிக்கை காட்டுவார்கள். குழந் தைகள் நிலவைப் பிடித்துத் தரும்படி அடம்பண்ணும். பெரியவர்களான பிறகே ‘நிலவை நாம் பிடிக்க முடியாது. அதற்குச் செல்ல ராக்கெட் வேண்டு’மென்ற உண்மை விளங்கும். நடைபயிலும் செல்வங்களுக்கு இந்த உண்மை எங்கே விளங்கும்? அழகான வெள்ளைப் பந்துபோலத் தெரியும் சந்திரன் கிடைத்தால் உருட்டி உருட்டி விளையாடலாம் என்றுதான் நினைப்பர்.

ஆகவே உலகில் எல்லோரையும் கவர்வது நிலவு—அதன் வயப்படாதார் எவரும் இல்லை!

சந்திரனும் விண்மீனும்

இரவில் வானத்தைப் பாருங்கள். சந்திரனைக் காணுகின்ற நீங்கள் மினுக் மினுக்கென்று கண் சிமிட்டும் விண்மீனையும் காண்பீர்கள். சந்திரன் ஒன்றுதான். ஆனால் விண்மீன்களோ—அவற்றுக்குக் கணக்குவழக்கில்லை. எண்ணிக்கைப்படி பார்த்தால் நிலவு ஒன்று—விண்மீன்கள் ஏராளம். ஆனால் அவை நிலவுக்கு முன் எம்மாத்திரம்? அத்தனை நட்சத்திரங்களையும் ஒரு தட்டில் வைத்தாலும், நிலவோடு அவை நிற்க

மாட்டா. வெண்ணிலவின் சிறப்பு ஈடு இணையற்றது. அதற்கு முன் விண்மீன் கூட்டம் தூசுபோல.

நீதிவெண்பா இந்த உண்மையைக் கூறுகிறது:

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினுநூல்
வல்லா ஒருவனையே மானுவரோ—அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா ஆமோ விளம்பு. [98]

கற்றாரும் கல்லாரும்

நிலவுக்கு முன்பு நட்சத்திரக் கூட்டம் செல்லாக் காசாகிவிடுகிறது! யானைக்குட்டி முன்பு பன்றிக்குட்டி களின் பட்டாளாம் வந்தாலும் பயன்படாது; யானை முன்பு அவை தூசுபோலத்தான். இவைபோலத்தான் அறிவாளி முன்பு, படியாதவர்களின் கூட்டமும் மண்டியிட்டு நிற்கவேண்டும். கல்லாதவர்கள் ஆயிரம் பேர் சேர்ந்தாலும் பயனில்லை. அவர்களின் ஒற்றுமை யால் எதனையும் அடைதல் இயலாது. ஒரே அறிஞன் செய்து முடிக்கக்கூடிய காரிங்களை, பல்லாயிரம் முட்டாள்கள் ஒன்று திரண்டாலும் செய்ய முடியாது. நிலவுக்கு முன் நட்சத்திரங்கள் ஒளியிழந்துவிடுகின் றன! எத்தனையோ நட்சத்திரங்கள் இருந்தும் அவற் றின் மொத்த ஒளி, நிலவின் ஒளியை வெல்ல முடிய வில்லை. நிலவின் ஒளியே மிஞ்சி நிற்கிறது. கற்றவர் களின் நிலையும் இதுதான். அவர்கள் உலகைக் கவர்கிற அளவு மற்றவர்களால் கவரமுடியாது. மற்றவர்கள் எத்தனை ஆயிரம் பேர் சேர்ந்து நின்றாலும் கற்றவர் களின் சிறப்புக்கு அவர்கள் ஈடு நிற்க முடியாது. கல்லாதார் பெருங் கூட்டமாயினும் கற்றவர் ஒருவரே ஆயினும் கல்லாதார் வெல்வது அரிதென்பதையே நீதி வெண்பா அறிவுறுத்துகிறது.

நிலவு ஒப்பர் கற்ருர்

நிலவு குழந்தை முதல் குடுகுடு கிழவர் வரை அனே வரையும் கவரும். கற்ருேரும் எல்லோரையும் கவர்வர். படிப்பாளிக்கு வயப்படாதவர் உலகில் யாருளர்? நிலவின் ஒளி இன்பம் தருவது; கற்ருேரின் பேச்சும் எழுத்தும் இன்பம் தருவன. நிலவு கற்பனேக்கு ஊற்று; கற்ருேரும் கற்பனேயின் பிறப்பிடமாகவே திகழ்வர். விண்மீன் கூட்டத்திற்கிடையே நிலவு தனிச் சிறப் போடு மிளிர்கிறது. கல்லாதார் நடுவே கறருேரும் அத்தகைய தலேமை நிலேயையே தாங்குகின்றனர். நிலவின் ஒளி வெள்ளத்தில் விண்மீன் கூட்டம் நாணித் தலேகுனியும். கற்ருேர் புகழொளிப் பெருக்கில் கல்லா தார் இருந்த இடம் தெரியாது மறைவர்.

கற்ருேர்க்கு எங்கும் சிறப்புண்டு

வானத்தில் நிலவுக்குச் சிறப்பு; உலகில் கற்ருேருக் குச் சிறப்பு. பிறந்த நாட்டில் மட்டுமன்றிச் சென்ற விடமெல்லாம் சிறப்பு. கற்ருேரைக் கண்ணேடு ஒப் பிட்டுப் பேசுகிறது நன்னெறி. பொன்னணியும் வேந்தர் ஒரு புறம்; நகை புனேயா அறிஞர் மறுபுறம். இவர்களில் எவருக்குச் சிறப்பு? கற்ருேருக்குத்தானே? அரசனுக்கு அவன் ஆளும் நாட்டோடுதானே சிறப்பு முடிந்துவிடுகிறது; இன்னெரு நாட்டில் அரசனின் செல்வாக்கு, அதிகாரம், பெருமை ஒன்றும் நடவாது. ஆனல், கற்ருேர் நிலே வேறு! எங்குச் சென்ருலும் எந்நாடு போனுலும் வரவேற்புப் பெறுகின்ற தகுதி அவர்களுக்கு உண்டு. உடலில் காது, மூக்கு, கை, கால், கழுத்து முதலிய உறுப்புகள் வகைவகையான நகை களேப் பூண்கின்றன. ஆனல் நகையே போடாத கண்

ணுக்கு முன் அவை எம்மாத்திரம்! கண் மனிதனுக்குக் கண்! கண்ணுக்கு நிகர் கண் தான்!

நிலவு முன்பு நட்சத்திரங்கள் பயனற்றுப் போய் விடுகின்றன! கண்ணின் முன்பு கை கால் முதலிய உறுப்புகள் தோற்றுவிடுகின்றன! அதுபோலவே கற்றோர் முன்பு, கல்லாதார் கூட்டம் நாணித் தலைகுனிகிறது.

அறிமின், அறநெறி; அஞ்சுமின், கூற்றம்;
பொறுமின், பிறர்கடுஞ்சொல்; போற்றுமின், வஞ்சம்;
வெறுமின், வினை தீயார் கேண்மை; எஞ்ஞான்றும்
பெறுமின், பெரியார்வாய்ச் சொல். [நாலடியார், 172]

———

நன்னெறி நூல் நயம்

முருகு. சுப்பிரமணியன்

சிவப்பிரகாசர் இயற்றிய நன்னெறியிலிருந்து பத்துச் சிறந்த பாடல்களைத் தேர்ந்தெடுத்து முருகு. சுப்பிரமணியன் அவர்கள் அவர்களுக்கே உரித்தான சீரிய தெளிவான நடையில் விளக்கம் தந்துள்ளார்கள். இந்நூல் பெரும்பாலும் மாணவர்களுக்காகவே இயற்றப்பட்டதானலும் மற்றவர்களும் படித்து இன்புறத் தக்க வகையில் அமைந்துள்ளது. இன்பமும் பயனும் தரும் சிறந்த நூல்.

சிவகாமி பதிப்பக வெளியீடுகளில் இதுவும் ஒன்று.

ஆசிரியர் முருகு சுப்பிரமணியன் அவர்களின்

தீந்தமிழ் நூல்கள்

நீதி வெண்பாவின் நெறிமுறைகள்

நன்னெறி நூல் நயம்

தமிழ் கூறும் நல்லுலகம்

மூதுரை விளக்கம்

நல்வழி விருந்து

பாரதியும் பாரதிதாசனும்

தமிழகத்தில் கிடைக்குமிடம்:

பாரி நிலையம்
59, பிராட்வே
சென்னை - 1

மலேசியாவில் கிடைக்குமிடம்:

முருகு வெளியீடுகள்
CC-3, IPOH ROAD GARDEN
4th MILE IPOH ROAD
KUALA LUMPUR
(MALAYSIA)